NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

September 2019

# உகுருவி

ekuruvi.com

$1

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today

## புதிய தமிழ் கனேடியர்கள்..

## காணாமல் ஆக்கப்பட்ட இனம்

## ரணிலின் இறுதிப்போர்

## எதிர் வரும் கனேடிய தேர்தல்








RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Buying or selling a home?
Thipan Raj
Sales Rep.
Cell: 416-629-2444

JOIN OUR TEAM OF GUARDIANS
GINI ANNARASA
MORTGAGE ALLIANCE
LET US BE YOUR GUARDIANS
mortgageguardian.ca 416.556.7002 • 80 NASHDENE RD

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
The Local Experts
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
Do you want to become a Professional Advisor?
"NOW HIRING"
Full & Part Time Life & Health Insurance Advisors
Get your industry licence at no cost... Free in class teaching
guna@gtbrokers.ca | www.gtbrokers.ca
Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng. 416 528 1407

Navajeevan Anantharaj
Sales Representative
416 272 8543
203-1265 Morningside Ave,
Scarborough, ON M1B 3V9
#1 RE/MAX
COMMUNITY REALTY INC., BROKERAGE

PRO-LIFE WELLNESS CENTRE
PHYSIOTHERAPY CLINICS
Our Services:
• Physiotherapy
• Chiropractic
• Massage
• Acupuncture
• Spinal Decompression
• Orthotics/Braces
• Car Accidents
• WSIB
PAIN?
WE CAN HELP YOU!
OPEN 7 DAYS
COME FEEL THE DIFFERENCE
416.357.2808
www.prolifewellnesscentre.com
AJAY THAVAM | 416.704.8074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com

www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com
PO Box 15 Pickering
Pickering ON
L1V 2R2





## மைத்திரேயி ராமகிருஸ்ணன்

நெட்பிளிக்ஸ்க்காக Mindy Kaling தயாரிக்கவுள்ள ஒரு தொடரில் பிரதான பாத்திரத்தில் நடிக்க மைத்திரேயி தேர்வாகியுள்ளார். சுமார் 15,000 பேருடன் போட்டியிட்டு மைத்திரேயி தேர்வாகியுள்ளார். மிசிசாகாவில் பிறந்த மைத்திரேயின் பெற்றோர் சமூகப் போராளிகளாவார்கள். தாயார் கிருத்திகா குலேந்திரன், தந்தையார் ராம் செல்வராஜ். ராம் ஒரு அரசியல் ஆய்வாளர். தொழிலாளர்கள் நலன்களுக்காக குரல் கொடுப்பவர். மைத்திரேயி தன்னைப் பற்றி நவ் பத்திரிகைக்கு My country is Canada. But my culture is definitely Tamil என்றார். இவர் டக் போர்ட் கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைப்புக்கு எதிராக குரல் கொடுத்துள்ளார்.

## நிசன் துரையப்பா

நிசன் துரையப்பா பீல் மாவட்ட தலைமை பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே ஹோல்ற்றன் பிரதேச துணை தலைமை பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றுகின்றார். சுமார் 3000 பொலிஸார் கடமையாற்றும் பிரதேசத்தின் தலைமை அதிகாரியாகவே நிசன் பொறுப்பேற்றுள்ளார். பீல் பிரதேசம் பல சவால்களைக் கொண்டது. பிறம்ரன், மிசிசாகா, கலிடன் ஆகிய நகரங்களை உள்ளடக்கியது.

நிசன் ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் குற்றவியல், சமூகவியல் ஆகியவற்றில் பட்டப்படிப்பை முடித்துள்ளார். பின்னர் வெஸ்ரேன் ஒன்ராரியோ பல்கலைக் கழகத்தில் பொது நிர்வாகவியலில் பட்டம் பெற்றுள்ளார். 1995ல் தனது சேவையை ஹோல்ரன் பிரதேசத்தில் ஆரம்பித்து, பின்னர் படிப்படியாக பதவி உயர்வுகள் பெற்றார்.

## சரண்யா ஜெயகாந்தன்

ரொரன்ரோ கல்விச் சபையின் விக்ரோறியா பார்க் பாடசாலையில் கல்வி கற்ற சரண்யா ஜெயகாந்தன், 12ம் வகுப்பில் 99 புள்ளிகளை சராசரியாகப் பெற்று சாதனை புரிந்துள்ளார். கடந்த கல்வியாண்டில் நான்கு மாணவர்களே 99 புள்ளிகளை சராசரியாகப் பெற்றுள்ளனர். 99 புள்ளிகள் பெறுவது சவால்கள் நிறைந்த ஒரு விடயம். அவ்வகையில் சரண்யாவின் பெருபேறுகள் சாதனைகள் நிரம்பியது. அவர் தொடர்ந்து கல்வியில் சாதனை புரிவார். வாழ்த்துக்கள் சரண்யா.

ஈழத் தமிழ் மாணவியான யாழ்ப்பணம் வடமராச்சியை சேர்ந்த சரண்யா ஜெயகாந்தன் இடம் பிடித்து கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழருக்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

சரண்யா ஜெயகாந்தன் (Saranya Jeyakanthan) விக்டோரியா பார்க் கல்லூரியில் 99% சராசரியுடன் பட்டம் பெற்று பல்கலைக்கழக படிப்புக்காக வாட்டர்லூ பல்கலைக்கழகத்திற்கு செல்கிறார்.

**இகுருவி பத்திரிகை ஒரு டொலர் சிவத்த உண்டியல் ... நம்பிக்கை**

வர்தக நிறுவனங்கள் தோறும் எமது சிவப்பு உண்டியல்கள் இகுருவிப் பத்திரிகை அருகில் கரம் கூப்பி உங்களின் ஒவ்வொரு டொலர்களையும் அன்போடு பெற்றுக் கொள்கிறது. ஜூன் மாதத்திலிருந்து உங்கள் அன்பினாலும், ஆதரவினாலும் சிவப்பு உண்டியல்களை மகிழ்வித்தீர்கள்.

சிலர் இத்தனை இலவச பத்திரிகைகளுக்குள் காசு பத்திரிகை சாத்தியமா? உண்டியலுக்குள் பணம் போடாமல் பத்திரிகையை எடுத்துச் சென்றால் என்ன செய்வீர்கள்? போன்ற கேள்விகள் எம்மை நோக்கி வந்த வண்ணமே உள்ளன. இதற்கு எங்களிடம் ஒரே பதில் தான் உண்டு அந்தப் பதில்....... நம்பிக்கை தான் வாழ்க்கை.




நீங்கள் பத்ரிகைக்காக கொடுக்கும் ஒவ்வொரு டொலர் அன்பளிப்புக்கும் புதிய வெளிச்சமூடாக தாயகத்தில் பல கல்வி , பொருளாதார , செயற்பாடுகளை செய்யலாம் என்று நம்புகின்றோம்

இந்த செப்டம்பர் மாத இகுருவி பத்திரிகையை அதற்குரிய பெறுமதியான $1 ஐ சிவத்த உண்டியலில் வழங்கி வாங்குவீர்கள் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

திலீபனின் பசியை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டும்!

எங்கே சூரியன்? - ரதன்

தமிழர் அரசியல்: கிழக்கில் பிரதிநிதித்துவம் பறிபோகும் அபாயம் - இலட்சுமணன்

எதிர் வரும் கனேடிய தேர்தல்-2019

நேர்கொண்ட பார்வை

அதிகாரத்துக்கான ரணிலின் இறுதிப் போர்!

எடப்பாடியின் வெளிநாட்டு விஜயமும் திரைமறை தமிழக அரசியலும்

மனிதனை சந்திரனில் தரையிறக்க தயாராகும் சீனா

தொடாவிடினும் சுடும் அமேசன் தீ ! - குமார் சுகுணா

வேலைக்கு ஆள் எடுக்கமுடியாத கிளிநொச்சி

சிந்தனையில் மாற்றத்தைக் ஏற்படும் போது சமூகமாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Access Counts

## Autism Conference 2019

25+26 September

An Inspiring Space
The Institute For Learning, Toronto

20
20 thought leaders from different sectors

## Featured Speakers



**Dr. Jonathan Weiss**
*Supporting Mental Health in With People With Autism and Their Families*



**Dr. Mohammad Zubairi**
*Autism - Focused Screening & Diagnostic Tools: How Do We Access Best Possible Information About Diverse Individuals and Families?*



**Dr.Vikram Patel**
*Improving access for child and adolescent developmental disorders: a global health perspective*



**Dr. Nancy Freeman**
*Evidence Based Early Behavioural Intervention – Access Counts!*



**Dr. Shivajan Sivapalan**
*Access for All: The Mobile Developmental Outreach Clinic*

*Access Counts – Autism Conference 2019* is an interdisciplinary two-day conference focused on exploring creative initiatives and strategies to support underserved communities impacted by autism and related neurodevelopmental disorders.

For More Info And To Register Please Visit:
https://accesscounts.saaac.org

*Early bird prices go up September 10*

| 1 Day | | 2 Days | |
|---|---|---|---|
| $125 General Admission | $100 Student/Caregiver Admission | $250 General Admission | $200 Student/Caregiver Admission |

THANK YOU TO OUR LEAD COMMUNITY PARTNERS

AutismONTARIO SAAAC Canada

@thesaaac

Contact Us: 416-289-0100 x 113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திலீபனின் பசியை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டும்!

*செப்டம்பர் 26, 1987*

இராசையா பார்த்திபன் என்கிற 24 வயதுடைய இளைஞன் அஹிம்சையின் அதியுச்ச வடிவத்தை நல்லூரின் வீதியில் தொடர்ச்சியாக 12 நாட்கள் நிகழ்த்திக்காட்டிவிட்டு வித்துடலாக வீழ்ந்த தினம்.

ஒரு மகனாக, சகோதரனாக, நண்பனாக, மருத்துவ மாணவனாக வலம் வந்த பார்த்திபன், விடுதலைக் கனவினை நெஞ்சிலேந்தி அரசியல் பேச்சாளனாகவும், ஆயுதப் போராளியாகவும் அவதரித்த புள்ளியில் திலீபனாக பிறக்கின்றான். அந்தத் திலீபனின் பிறப்பு, ஆயிரமாயிரம் இளைஞர்களை தமிழ்த் தேசியப் போராட்டத்தின் பக்கம் இழுத்து வந்தது. இன்னமும் அதன்பால் வைத்துக் கொண்டிருக்கின்றது.

அஹிம்சையின் தேசமான இந்தியா, இம்சையின் தேசமாக உருமாறி தென்னிலங்கையின் அரசியல் அதிகார ஆக்கிரமிப்பாளர்களுடன் இணைந்து தமிழ் மக்களையும், அவர்களின் போராட்டத்தினையும் அடக்கி ஒடுங்கி அழிக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் போது, அதற்கு எதிராக திலீபன் களம் காண்கிறான். தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தற்கொடைகள் திலீபனுக்கு முன்னும் பின்னும் நிறையவே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. எனினும், திலீபனின் தற்கொடை என்பது 12 நாட்கள் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் நிகழ்ந்தது. தங்களுடைய சொந்த மகனை, சகோதரனை, நண்பனை இழப்பதற்கு உண்டான வலியோடு தமிழர் தேசம் அழுதது. ஆக்ரோசம் கொண்டது. அந்த அழுகைக்குள்ளும், ஆக்ரோசத்துக்குள்ளும் காணப்பட்டது, தமிழ் மக்களின் விடுதலை என்கிற ஓர் இலக்கே.

திலீபனின் 32 வது ஆண்டு நினைவு நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்ற இன்றைய நாட்களில் தமிழ்த் தேசியப் போராட்டம் பாரிய அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, எங்களை நோக்கிய சதித் திட்டங்கள் எவை, அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது, முறியடிப்பது, வெற்றிகொள்வது என்பது பற்றியெல்லாம் சிந்திப்பதிலிருந்து விலகி நின்று, எங்களுக்குள் குடுமிப்பிடி சண்டை பிடிப்பதில் அதிக காலத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தாயகத்திலுள்ள மக்களை நோக்கி தென்னிலங்கையும், இந்தியா உள்ளிட்ட சர்வதேசமும் ஒவ்வொரு நாளும் ஏமாற்று நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது என்றால், இன்னொரு பக்கம் அந்த நாடகங்களின் பங்காளிகளாக எமக்குள் இருந்தே சில ஏவலாளிகள் இருந்து கொண்டு, தமிழ்த் தேசியப் போராட்டத்தின் மீது அச்சுறுத்தலை உருவாக்கும்புற்றுக்களாகபரவுகின்றார்கள். சதித்திட்டங்களை எதிர்கொண்டு வெற்றி கொள்வது எவ்வளவு முக்கியமோ, அதனைவிடவும், புற்றுக்களாக உருவாகும் ஏவலாளிகளையும் அடையாளம் காணுவதும் முக்கியமானது. ஏனெனில், தமிழ்த் தேசியப் போராட்டங்களின் தோல்விப் பக்கங்கள், காட்டிக் கொடுப்பவர்களினாலும், புற்றுக்களாக உருவாகும் ஏவலாளிகளினாலுமே நிகழ்ந்து வந்திருக்கின்றது.

திலீபன் என்கிற ஆகுதியாளனினதும், ஆயிரக்கணக்கான மாவீரர்களினதும், இலட்சக்கணக்கான மக்களினதும் உயிர்க்கொடைகளிலுமே தமிழ்த் தேசியப் போராட்டம் எழுந்து நிற்கின்றது. அதன் அத்திவாரங்களைச் சிதைப்பதற்கான முனைப்புக்களை அடையாளம் காணுவதை தாயகத்திலுள்ள மக்கள் மாத்திரமல்ல, புலத்திலுள்ள மக்களும் செய்ய வேண்டிய தருணம் இது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் உள்ளிட்ட நினைவு நாட்களில் மாத்திரமல்ல, ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டத்தின் வீரியத்தினை வீழ்ந்துவிடாது காப்பாற்றுவது அவசியமானது. அதுவே, அரசியல் இலக்குகளுக்கானபோராடுகின்றசமூகமாக தமிழ் மக்கள் முன்னால் இருப்பது. அதன் குறியீடாக திலீபன் என்கிற தியாகத்தின் உருவம் உணரப்பட வேண்டியது.

திலீபனை நினைவு கூர்வதென்பது, ஒரு சம்பிரதாய நிகழ்வல்ல. ஆன்மாவோடு அந்த ஆகுதியாளனின் அரசியலையும், அர்ப்பணிப்பையும் கொண்டு சுமப்பது. அதுவே, தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவாகவும்இருக்கின்றது.அதனையே, ஆயிரமாயிரம் மாவீரர்களினதும் உயிர்க்கொடையும் எம்மிடம் மீண்டும் மீண்டும் உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

தியாக தீபம் திலீபனை நாம் அஞ்சலிக்கின்ற தருணங்களில் கண்ணீரை சிந்துவதோடு மாத்திரமல்ல, அவனின் பசியையும்எம்மோடுஎடுத்துக்கொள்வதில் உறுதியாக இருக்க வேண்டும். அந்தப் பசியே, எமது அரசியல் இலக்கை இறுதி செய்யும்.

(2017 ஆம் ஆண்டு திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவு சிறப்பிதழாக இகுருவியில் வெளிவந்த கட்டுரையின் மீள்பதிவு )






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர் வரும் கனேடிய தேர்தல் 2019

கனடிய பொதுத் தேர்தல் சில வாரங்களில் நடைபெறவுள்ளது. தேர்தல் களம் இன்னமும் சூடு பிடிக்கவில்லை. ஏழாம் வட்டாரத்தை மத்திய தேர்தல் தொகுதியாக அறிவித்திருந்தால், பரபரப்பு உச்சத்தை எட்டியிருக்கும். 2019க்கான தேர்தலுக்கான சுலோக ங்களை கட்சிகள் அறிவித்துள்ளன. உதாரணத்துக்கு 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பது தவறா' போன்று. மைத்திரியும், கோதபயாவும் கூட இதைத்தான் கூறுகின்றார்கள்.

## கட்சித் தலைவர்கள் பற்றிய சிறு குறிப்பு

### Andrew James Scheer – கொன்சவேற்றிவ் கட்சித் தலைவர்

பிறப்பு 1979வைகாசி 20– ஒட்டாவா, ஒன்ராரியோ

தாய்மேரி ஒரு குழந்தை நலன்களுக்கான தாதியாகவிருந்தார். தந்தையார் ஜேம்ஸ் ஒரு நூலகராக, ஒட்டாவா சிற்றிசன் பத்திரிகையில் வேலை பார்த்தார். இவருக்கு கத்திரீன், அனி மேரி ஆகிய சகோதரிகள் உள்ளனர். ஒட்டாவா பல்கலைக் கழகத்தில் சரித்திரமும், அரசியல் விஞ்ஞானமும் கற்றார். பின்னர் University of Reginaல் தனது கல்வியை முடித்துக் கொண்டார். Reginaல் சிறிது காலம் காப்புறுதி முகவராக கடமையாற்றினார். பின்னர் ஒட்டவாவில் முன்னால் றிபோம் கட்சித் தலைவர் மனிங் Manning இவரை பாராளுமன்ற எதிர்க்கட்சி அலுவலகத்தில் தொடர்பாளராக நியமித்தார். 2004 ஆனி 28ம் நாள், Saskatchewanன் Regina-Qu'Appelle தொகுதியில், 32 வருடங்களாக என்.டி.பிக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த Lorne Nystrom ஐ 858 வாக்குகளால் தோற்கடித்து பாராளுமன்ற உறுப்பினராக தேர்வானார். 2006ல் பாராளுமன்ற உதவி சபாநாயகராக தேர்வானார். 2011ல் சபாநாயகரானார். 2017 வைகாசி 27ல் கொன்சவேற்றிவ் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது மனைவி ஜில் ரையன். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். இவரது மனைவியின் சகோதரர் ஸரீவ் ரையன் என்.டி.பிக் கட்சி சார்பாக 2007, 2011 Saskatchewan பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

### என் டி.பிக் கட்சித் தலைவர் Jagmeet Singh

பிறப்பு 2 தை 1979, ஸ்காபரோ, ஒன்ராரியோ

தாயார் Harmeet Kaur - Banker, தந்தை Jagtaran Singh ஒரு மனநல மருத்துவர் (psychiatrist). இவர் ஒரு வயதாகவிருக்கும் பொழுது, இவரை பெற்றோர் தங்களது பெற்றோரிடம் பஞ்சாபிற்கு அனுப்பினர். பின்னர் பெற்றோர் நியு பவுன்லன்ட்க்கு குடிபெயர்ந்தனர். அங்கு தந்தை வைத்தியராக வேலை பார்க்கத் தொடங்கினார். பஞ்சாபிலிருந்து, நியு பவுன்லன்ட்க்கு வந்து பெற்றோருடன் இணைந்தார். அங்கு இவரை ஜிம்மி என அழைப்பார்கள். இவருக்கு ஏழு வயதாகவிருக்கும் பொழுது, பெற்றோர் வின்சர், ஒன்ராரியோவிற்கு குடிபெயர்ந்தனர். நதியைக் கடந்து டிற்றொயிட் நகரில் உள்ள Detroit Country Day School என்ற தனியார் பாடசாலையில் கல்வி கற்றார். அமெரிக்காவில் பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர், வெஸ்ரேன் பல்கலைக் கழகத்தில் உயிரியல் பட்டப்படிப்பை முடித்தார். அதன் பின்னர் ரொரன்ரோ Osgoode Hall Law Schoolல் சட்டம் பயின்று சட்டத்தரணியாகினார். பிறம்ரனில் கிரிமினல் வழக்கறிஞராக கடமையாற்றினார். நீண்ட காலமாக என்.டி.பிக் கட்சியின் அபிமானியாகவிருந்தார்.

2011ல் ஜக் லேற்றன் அலையில் தோல்வியுற்ற என்.டி.பி வேட்பாளர்களுள் இவரும் ஒருவர். 539 வாக்குகளால் தோல்வியுற்றார். 2011 புரட்டாதியில் நடைபெற்ற ஒன்ராரியோ மாநில சபைத் தேர்தலில் பீல் பிரதேச தொகுதியான Bramalea-Gore-Malton இல் போட்டியிட்டு வெற்றி பெற்று, முதலாவது பீல் பிரதேச என்.டி.பி மாநில சபை உறுப்பினரானார். (He was the first NDP member of Ontario's Provincial Parliament (MPP) ever elected in Peel Region.) மார்கழி 2013 இவருக்கு இந்தியாவினுள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. இவர் இந்தியாவின் அத்துமீறிய மனித உரிமை மீறல்களை கண்டித்தமைக்கு, இந்தியா இவருக்கு வழங்கிய பரிசு. 2014ல் மீண்டும் ஒன்ராரியோ பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

2017 ஐப்பசி மாதம் முதலாம் திகதி கனடிய என்.டி.பிக் கட்சித் தலைவர் போட்டியில் வெற்றி பெற்றார். இவர் பெற்ற வாக்கு வீதம் 53.8. இவருக்கு அடுத்ததாக வந்த ஒன்ராரியோ பா.உ சார்லி அன்கசின் வாக்கு வீதம் 19.4. 2019 மாசி மாதம் 25ம் நாள் நடைபெற்ற தெற்கு பேர்னபி தொகுதி இடைத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். இவரது மனைவி Gurkiran Kaur Sidhu.

| கனடிய பிரதான கட்சிகளின் சுலோகங்கள் |
|---|
| லிபரல் - Choose Forward |
| கொன்சவேற்றிவ் - It's time for you to get head |
| என்.டி.பி - In it for you |
| கிறீன் - Not left. Not right . Forward Together |
| பி பி சி - Strong and Free |

### Justin Pierre James Trudeau

பிறப்பு 25 டிசம்பர் 1971- ஒட்டாவா ஒன்ராரியோ

தந்தையார் பியறி எலியட் ரூடோ – முன்னால் கனடிய பிரதமர். ஜஸ்ரின் தனது 12வயது வரை சசெக்ஸ் அவனியுவில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே வசித்தார். பின்னர் மொன்றியலுக்கு குடிபெயர்நதனர். மக்கில் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றார். 1998ல் University of British Columbiaஇல் கல்வியியல் பட்டதாரியானார். இதற்கிடையில் இவர் ஆசிரியராக, snowboarding instructor வேலை பார்த்துள்ளார். பின்னர் வன்கூவர் Sir Winston Churchill Secondary School ல் ஆசிரியராக கடமையாற்றினார். 2008ல் கியுபெக் மாநில Papineau தொகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்கு தேர்வானார். 2009ல் லிபரல் கட்சித் தலைவர் Michael Ignatieff ன் கீழ், நிழல் அமைச்சரானார் (critic for youth and multiculturalism, and later for youth, citizenship, and immigration). 2011ல் மீண்டும் பாரளுமன்ற உறுப்பினரானார். 2013சித்திரை 14ல் கனடிய லிபரல் கட்சியின் தலைவராக என்பது வீத வாக்குகளைப் பெற்று தேர்வானார். 2015 ஐப்பசி 19 நடைபெற்ற கனடிய பொதுத் தேர்தலில் பெரும்பான்மை தொகுதிகளில் லிபரல் கட்சியை வெற்றிபெறச் செய்து பிரதமராக தேர்வானார். இவரது மனைவி Sophie Gregoire தொலைக் காட்சி, வானொலி ஊடகவியலாளார். பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இவர் ஊடகவியலளாராக கடமையாற்றினார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள்

இன்னமும் உறுதியாகவும், இறுதியாகவும் கட்சிகள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைக்காமையால், அவைபற்றிய விடயங்களை இங்கு பதிவு செய்ய முடியவில்லை. எனினும் தற்பொழுது தோன்றியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள், அகதிகள் வருகை, சீனா, டொனால்ட் ரம்ப் (அமெரிக்கா அல்ல), இலவச மருந்து, அடிப்படைச் சம்பள உயர்வு, பாதுகாப்பு, அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூடுகளும், பாவனைகளும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, போக்குவரத்து, அதி உயர் செல்வந்தர்களுக்கான அதிகரித்த வரி, சிறு வணிகச் சலுகைகள் போன்றவை பிரதான பேசு பொருளாக இருக்கும்.

இத் தேர்தலில் நீங்கள், உங்களை கேட்க வேண்டிய கேள்விகள், இவற்றை நீங்கள் உங்கள் தொகுதி வேட்பாளரிடமும் கேட்கலாம்.

- Should businesses be required to have women on their board of directors?
- Should the government increase environmental regulations on businesses to reduce carbon emissions?
- Should the federal government subsidize the production and consumption of renewable energy sources?
- Should disposable products (such as plastic cups, plates, and cutlery) that contain less than 50% of biodegradable material be banned?
- Should Canada raise taxes on the rich?
- Should the government raise the federal minimum wage?
- Should Canada raise or lower the tax rate for corporations?
- Should the federal government subsidize universal child care?
- Should prescription drugs be covered under Canada's universal healthcare plan?
- Should the government increase funding for mental health research and treatment?
- Should the federal government put a cap on university tuition rates?

**ரேவதி-யாத்திரிகா**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடகொரியா-அமெரிக்கா: புதிய சகாப்தம்?



ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வட கொரியா கூடுதல் அணு ஆயுதங்களை உருவாக்குகிறதா என்பது பற்றி தனக்குத் தெரியாது என்று கூறுகிறார். ஆனால் அவர் மேலும் இது பற்றி கூறும்போது, வடகொரியா அவ்வாறான ஒரு செயல்பாட்டில் இறங்காது என நான் நம்புகின்றேன் என்கிறார். இது ஒரு தர்க்கரீதியான, சிந்தனைமிக்க அல்லது விவேகமான நிலைப்பாடு அல்ல என்பது ஒரு புறமிருக்க, குறிப்பாக இதுபோன்ற நேரம் இராணுவ இராஜதந்திர ரீதியில் ஐக்கிய அமெரிக்க -வடகொரிய நிலைப்பாடுகள் ஒரு ஸ்திரநிலையில் இல்லை என்பதையே காட்டுகின்றது. ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரியாவின் மேம்பட்ட பொருளாதார உதவிக்கான ஐக்கிய அமெரிக்க வாக்குறுதிகளால் உந்துதல் பெறுவதற்கு மிகவும் பொருத்தமானவர் என்று வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன்னை தொடர்ந்து நம்பும் வரையில், குறித்த இந்நிலைப்பாட்டில் இருந்து ஜனாதிபதி ட்ரம்ப் ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை.



வடகொரியாவில் தலைவர் கிம்மைப் பொறுத்தவரை, இது தனிப்பட்ட உறவை ஜனாதிபதி ட்ரம்புடன் பேணுதலின் தேவையை அதிகரித்த போதிலும், சர்வதேச சட்டவரையறைக்குள் வடகொரியாவை கட்டாயப்படுத்துவதன் தேவைகளைத் தவிர்த்து விடுகிறது.

இந்நிலை நீண்டகால ஐக்கிய அமெரிக்காவின் வடகொரியா மற்றும் கொரிய தீபகற்பத்தின் மீதான தனது வெளிவிவகார கொள்கை மற்றும் மூலோபாய போக்கை தணிக்கை செய்வதில் செல்வாக்கு செலுத்திவிடும் என்பதை ஐக்கிய அமெரிக்க வெளியுறவு கொள்கை வகுப்பாளர்கள் புரிந்துகொள்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்களை பொறுத்தவரை, அவர்கள், ஜனாதிபதி ட்ரம்ப் தனது சொந்ததனிப்பட்ட விருப்பங்களைவிட ஐக்கிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய,ஜனாதிபதி தனது வடகொரியா மூலோபாயத்தை மாற்ற வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்கள். குறிப்பாக, அக்கொள்கை வகுப்பாளர்களை பொறுத்தவரை இது மிகவும் வெளிப்படையாக பகுப்பாய்வு மற்றும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு மூலோபாயத்தைக் குறிக்கிறது. இன்னும் துல்லியமாக, அவர்களைப் பொறுத்தவரை, ஜனாதிபதிட்ரம்ப்,வடகொரியாவுடன் நீண்டகால அணுசக்தித் தடுப்பை அடைவதற்கான வழிகளில் மேலும் முறையாகவும் யதார்த்தமாகவும் சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்றே கருத்து தெரிவிக்கின்றனர்.

மேலும், அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், குறித்த யதார்த்தமான சிந்தனைகள், குறிப்பாக நட்பு -பகை பாராட்டும் எதிரிநாட்டுடன் தொடர்ச்சியாக பேணுதல் அவசிய மானது என்றும், குறிப்பாக, வடகொரியாவை பொறுத்தவரை, வடகொரியா தனது அணு ஆயுதங்களின் எந்தப் பகுதியையும் அல்லது அதனுடன் தொடர்புடைய மூலோபாய அபிலாஷைகளையும் சரணடையச் செய்வதில் எந்த அர்த்தமுள்ள சூழ்நிலைகளும் இல்லை என்ற நிலையில் யதார்த்தத்தை உணர்தல் மற்றும உலகளாவிய செல்வாக்கு மற்றும் பிராந்திய வல்லரசுத்தன்மையை தீர்மானிக்கும் மிகத் தெளிவான அடித்தளமாக இந்த அணுஆயுத கட்டமைப்பு இருத்தல், அமெரிக்கா வடகொரியா மீதான ஒரு நிலையான கொள்கை ஒன்றுக்கு வரவேண்டிய கட்டாயத்தை சுட்டிக்காட்டுவதாக குறித்த கொள்கை வகுப்பாளர்கள் கருதுகின்றனர்.

ஆயினும், குறித்த யதார்த்தமான கொள்கை மட்டும் இந்நிலையில் போதாது.மாறாக,இன்னும்வரவிருக்கும் எந்தவொரு பேச்சுவார்த்தைகளின் போதும், இரண்டு நாடுகளினதும் இராணுவ இராஜதந்திரக் கொள்கைகளை மிகைப்படுத்தவோ அல்லது குறைத்து மதிப்பிடுதலையோ தவிர்த்தல் மிகவும் அவசியமானது.

எது எவ்வாறாயினும், வணிக ரீதியான கட்டட பேரம் பேசுவதை அடிப்படை வியாபாரமாகக் கொண்டு தனது ட்ரம்ப் என்னும் வியாபாரத்தை கட்டியெழுப்பிய ஜனாதிபதி ட்ரம்ப், அணு இராஜதந்திரத் கொள்கைகளை தேவையற்றதாக கருதி புறக்கணிப்புகளைச் செய்வது சர்வதேச பாதுகாப்புக்கு முரணானது என்பதை ஏனைய நாடுகள் உணராமல் இல்லை. குறிப்பாக, வடகொரியாவின் அணுஆயுதக் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு சார்ந்த விருத்தியை நன்கு புரிந்து கொள்ளாத எந்த ஒரு அரசாங்கமும், வடகொரியாவுடன் நேரடியாக நட்பு நிலையை பாராட்ட தயக்கம் கொள்வதை காணக்கூடியதாக உள்ளது.

மறுபுறம், ஈரான், வெனிசுவேலா, இந்திய-பாகிஸ்தான் அண்மைய காஷ்மிர் பிரச்சினை, ரஷ்யாவின் இணையவழி போரியல் முறைமை பற்றி பலவாறாக பேசும் சர்வதேச சமூகம், அண்மையில் வடகொரியாவின் நிகழ்ச்சிநிரலை பெருமளவில் கண்டுகொள்ளவில்லை என்பது ஒரு புறமிருக்க, மறுபுறம், அந்நிலையை சாதகமாக்கி வடகொரியா ஏவுகணை பரிசோதனைகளை கடந்த இரண்டு வாரங்களுக்குள் நடாத்தியிருந்தமை ஐக்கிய அமெரிக்க தலைமையிலான வடகொரியா மீதான தாக்கம் மற்றும் கொள்கை வகுப்பில் ஏற்பட்ட இடைவெளி என்றே பார்க்கப்படவேண்டும்

**ஜனகன் முத்துக்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Meet the Tamil-Canadian starring in Mindy Kaling's Netflix series

*How Maitreyi Ramakrishnan went from producing a high school play in Mississauga to the lead role in a Hollywood series while proudly representing her culture*

*by Radheyan Simonpillai*



Maitreyi Ramakrishnan is not planning to shorten her 20-character name for public consumption.

"If you can say the character names in Game Of Thrones, you can say my Tamil name," explains the Mississauga-born-and-raised teen who has been cast as the lead in Mindy Kaling and Lang Fisher's upcoming Netflix series.

The 17-year-old self-professed Disney fan is having a Cinderella moment after being cast as Devi, the lead in the untitled comedy show. Ramakrishnan won the part over 15,000 who submitted auditions to Kaling's open casting call in April.

The coming-of-age series, which is in production in Los Angeles, is about a first-generation Indian American teen and loosely based on Kaling's childhood. The comic writer and actor, who is half Indian-Tamil and Bengali, is among the few role models for girls of South Asian descent in Hollywood. And now her work is making room for even more.

"In terms of actors who are South Asian that I could look up to, I feel like there's not enough yet," says Ramakrishnan. "If there's not many out there already, then I guess I should be there."

Speaking over the phone from Beverly Hills, Ramakrishnan already sounds like she's adjusting well. Or rather, she sounds like she can adjust well to anything. She's young, extremely positive and quick with humour. She sounds every bit like the girl comfortable enough to finish every take at a Hollywood audition with a dab, as Poorna Jagannathan, the Big Little Lies actor who plays Devi's mom, recounted in a recent interview.

"I probably definitely dropped a dab out of nervousness," says Ramakrishnan. "A little old casual side dab."

Ramakrishnan, who eventually plans to attend York University's theatre program, only decided to pursue acting in the last year. She'd always dreamed of being an animator, following through on her love of Disney and Marvel Comics. But she was bit by the acting bug in her final year at Meadowvale Secondary School.

For her grade 12 drama class, she had to write, direct and produce a play. She mounted the production 0006, a thriller about how society pits women against each other when they should be helping each other rise up.

"It came so naturally to me," says Ramakrishnan about that creative process. "I was like, I could totally do this for the rest of my life."

The auditioning process for the Kaling/Fisher series began while Ramakrishnan was getting ready to star as Velma Kelly in her school's production of Chicago. One of her best friends, Shaharah Gaznabbi, encouraged her to answer Kaling's casting call. Together they put together a self-shot audition tape. Not long after, they got an email requesting four more video submissions.

"I have no idea how auditioning for professional shows work," Ramakrishnan explains, assuming at the time that the bar must have been really low for callbacks.

"Maybe like 10,000 people got the callback. I was like, 'Whatever, it's not that special.' But when I got the email saying 'Can you come to L.A.?', me, my best friend and my whole family flipped out."

The ride since then has been a roller coaster. First, the family had to verify that the casting email, from a generic gmail address as opposed to a studio account, was legit. Her father, Ram Selvarajah, was nervous about that. They also had to find an agent and work out travel schedules, figuring out which parent could suddenly secure vacation time to escort their daughter to Los Angeles.



"Everybody really Avengers Assembled up," says Ramakrishnan without flinching, as if that were an expression I should just readily embrace. "Yes, I said that!"

Ramakrishnan's father escorted her to the first audition. It was their first time in Los Angeles, so they were total tourists taking in Grauman's Chinese Theatre, Universal CityWalk and a bus tour.

"Bus tours are great," says Ramakrishnan, with a tone of gentle sarcasm even though she probably did enjoy the hell out of it.

She doesn't remember a lot from the audition, or perhaps the non-disclosure agreements she had to sign are forcing her to be coy with details.

"I do remember walking in and telling Mindy that there are so many palm trees," says Ramakrishnan, who explains that she tried to treat the audition like it was for a school play. "I walked in feeling those excited nerves, the good kind of nerves with the adrenaline rushing. And I walked out thinking, 'If I don't get it, I don't even care.' I had no regrets with my audition. I was just like, 'This is awesome.'"

Ramakrishnan got called back for a chemistry read with Jagannathan, who went on to sing the young actor's praises.

"Maitreyi is this character," Jagannathan told Refinery29. "Smart, unaffected and ridiculously funny without meaning to be."

In May, Ramakrishnan's agent told her they needed to meet for an important phone call at 9 pm.

"She made it seem like there was some technical stuff to do with the audition. We dashed home and my agent whips out her phone, is calling this number. And she's telling me, 'Make sure you hear exactly what they say. They're going to tell you a number. Write it down.'"

With a scrap piece of paper and pen in hand, Maitreyi heard Kaling and Fisher's voices over the phone. She was still thinking they were about to give her new instructions for auditioning.

"And then they hit me with, 'So we just want to congratulate you on the part of Devi.' And I was like, 'Oh, oh wow. My life is changing.'"

She describes her frozen shock and her family in the background screaming – the call had come through on speakerphone. "It was a whole event."

Ramakrishnan was cast in May. The rest of us didn't find out until Netflix announced in July. What immediately stood out in the press release was that it described Ramakrishnan as a Tamil-Canadian.

"I made it very clear to my agent and publicist that Tamil-Canadian is very, very important to me," says Ramakrishnan, who made sure her ethnicity and nationality were spelled out exactly that way in the announcement. She didn't simply say Canadian. Nor did she say, Sri Lankan.

"My identity isn't being Sri Lankan," says Ramakrishnan.

Like so many Tamil-Canadians, she comes from a family that escaped the war in Sri Lanka and arrived in Canada as refugees. We typically refuse to identify as Sri Lankan because that would mean claiming a country that tried to wipe out our people.

"That's not my country. My country is Canada. But my culture is definitely Tamil."

"You know our stories," says Ramakrishnan's mother Kiruthiha Kulendiren. "We're displaced not by choice but by circumstances."

Ramakrishnan didn't really learn about Sri Lanka's politics and war until after age 10. She wasn't even aware of it when she was protesting on the Gardiner Expressway a decade ago with her older brother and parents. Alongside the Tamil community, they were desperately trying to raise awareness about the war crimes happening back home.

"We consciously raised them so that our stories wouldn't define them," says Kulendiren, who points out that the only reason her kids were with her when the Tamils stormed the Gardiner is because it was Mother's Day.

"That was my first protest," says Ramakrishnan. Her most recent was the student walkout protesting Doug Ford's cuts to education.

For the Tamil-Canadian community, a significant population in the GTA, Maitreyi Ramakrishnan leading a Netflix series is huge.

She's our next generation, born in Canada to parents who spent a significant portion of their lives here. Her generation can keep in touch with Tamil culture while maintaining some distance from the politics and trauma back home. She was raised within a multicultural landscape, taking lessons in bharatanatyam and ballet, growing up on hoppers and memes.

She's also our only representation in Hollywood. She can be my daughter's role model.

"I want other Tamils all over the world to feel pride that Tamil people are making it," says Ramakrishnan. "We are doing it. And we are awesome."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவிலிருந்து தாயகம் நோக்கிய இளையவர்கள் PEARL

அமெரிக்காவை தளமாக கொண்டியங்கும் PEARL Action (People for Equality And Relief in Lanka)எனும் அமைப்பில் முன்னெடு குழும பணிப்பாளராக (Advocacy Director) முழு நேரப் பணியில் இருக்கிறார் மரியோ அருள்தாஸ். அவருடைய பணிகளில் ஒன்றாக இலங்கையில் நிலவும்இனமுரண்பாடு தொடர்பாக சர்வதேச அரசாங்க அதிகாரிகளையும் கொள்கை வகுப்பாளர்களையும் சந்தித்து வருகிறார். இவ்வமைப்பில் இணைய முன்னர் தமிழ் கார்டியன் (Tamil Guardian) பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும்,Royal Borough of Kingston இற்கு கொள்கை ஆலோசகராகவும் இங்கிலாந்தின் தமிழ் இளைஞர் அமைப்பின் பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார். PEARL Action அமைப்பினூடாக அரசியல் சீர்திருத்தம், நினைவுகூரல், இராணுவ ஆக்கிரமிப்பு,போர்க்குற்றவாளிகளை நீதிக்கு முன்பாக நிறுத்துவது என்பன தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். இது தொடர்பாக பலதடவைகள் தாயகத்துக்கு வந்து போயிருக்கிறார். அவர் இப்போது கனடாவில் வாழ்கின்றார் அவருடனான நேர்முக உரையாடல்களில் இருந்து முக்கியமான விடயங்களைப் பார்ப்போம்.

எங்கள் வயதுகளில் (30 இற்கு மேலே) இருப்போருக்கு எங்கள் பெற்றோர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சொல்லித் தந்தே வளர்த்தார்கள். அதனால் தமிழ்மக்கள் இலங்கைத்தீவில் பட்ட துன்பதுயரங்கள் எல்லாமே தெரிந்து தான் வளர்ந்தோம். அதையும் விட இயக்கம் இருக்கிற காலங்களில் நாங்கள் பிரச்சினைகள் துன்பங்களை நேரடியாக பார்த்து வளர்ந்தோம். ஆனால் இப்போது 20 - 25 வயதுகளில் இருக்கிற இளைய தலைமுறையினர் 2009 காலப்பகுதிகளில் 10-15 வயதுகளில் தான் இருந்திருப்பார்கள். அந்தநேரங்களில்நடந்தபோராட்டங்களால் ஈர்க்கப்பட்டு அரசியல்மயப்பட்டவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். பலர் தங்கள் பூர்வீகம்தொடர்பில் தானாக தேடி அறிந்து கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

இன்று புலம்பெயர் தேசத்தில் உள்ள மிகப்பெரிய பிரச்சினை அடையாளம் தொடர்பானது. ஜேர்மனில் இருந்தாலோ கனடாவில் இருந்தாலோ லண்டனில் இருந்தாலோ அவர்கள் அந்நாட்டவர்களாக உணருவதை விட தமிழ் அடையாளத்தைத் தேடுகின்றார்கள். அதனையே விரும்புகின்றார்கள். இன்றைய தலைமுறையினர் பெற்றோர்களுடனும் ஒரு ஆரோக்கியமான உறவைப் பேணுகின்றார்கள். புதிய தலைமுறையினர் மூலம் வருகிற அரசியல் சிந்தனைகள் எல்லாம் முற்போக்கானதாக உள்ளன. அவர்கள் தெளிவான சிந்தனையோடும் இருக்கின்றார்கள்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் நாங்கள் முன்னெடுக்கும் ஈழத்தமிழர் தொடர்பிலான விடயங்களை எங்களுக்கு பிறகு இனி வருகின்ற இளையோரும் முன்னெடுப்பார்களா என யோசித்திருக்கின்றோம். ஆனால்,இப்போது எங்களுக்கு கவலை இல்லை. புலம்பெயர் தளங்களில் இருந்துசெயற்படுவதற்கு இளையோர் அதிகமாகமுன்வருகின்றார்கள். கடந்த காலப்பகுதிகளை விட இப்போது வேலைகள் கூடுதலாக இடம்பெறுகிறது. 2009 போர் முடிந்த காலப்பகுதியில் இருந்த நிலையை விட இப்போது இளைய செயற்பாட்டாளர்கள் கூடிக்கொண்டு வருகின்றார்கள். முந்திய கட்டுப்பாடுகள் வரையறைகளைவிட்டு தமிழ்த்தேசியம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

சிங்களபௌத்தபெருந்தேசியவாதத்தை எதிர்த்து எங்களுக் கொரு விடிவு வேண்டும் என்கிற கொள்கையை எம் இளையோர் வலுவாக வைத்திருக்கின்றார்கள். சமூகவலைத்தளங்கள் மூலம் எண்ணங்கள் ஜனநாயகமயப் பட்டிருக்கின்றன. இளையோர்களின் தொடர்ச்சியான உரையாடல்களில் தமிழ்த்தேசியம் வெளிவருகின்றது. உரையாடல்கள் மூலம் வருவதால் இயங்குவோரும் வலுவாக உள்ளனர்.

முன்னைய காலப்பகுதிகளில் சொந்தக்காரர் மூலம், தெரிந்தவர்கள் மூலம், நண்பர்கள் மூலம் தான் தொடர்புகள் கிடைத்தன. ஆனால், இப்போது சமூகவலைத்தளங்கள் மூலம் இயங்குவோருக்கான தொடர்புகள் வலுப்பெற்று வருகின்றன. புலம்பெயர் தேசத்திலிருந்து சமூகவலைத்தளங்களில் பதிவிடுவோரும், தாயகத்தில் இருந்து சமமூக வலைத்தளங்களில் பதிவிடுவோரும் இணைய வெளியில் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

அண்மையில் ரொறன்றோவில் தமிழர் சார்ந்து இயங்கும் அமைப்பு ஒன்றின் கலந்துரையாடலில் பங்கேற்று இருந்தேன். அதில் 10 ஆண்கள், எல்லோருக்கும் வயது55 க்கும் அதிகம். ஒரு பெண் இருந்தார். இளையோர் எங்கே, இளையோர் எங்கே என அங்கே இருந்தவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் சொன்னேன் இளையோர்கள் களத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று. சும்மா அவர்கள் உங்களைப் போல் கூடிக் கதைத்துக் கொண்டு மட்டும் இருக்கவில்லை என நேரடியாகவே கூறினேன். ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒன்றிரண்டு வீதத்தினர் தான் செயற்பாட்டாளர்களாக இருப்பார்கள். அவர்களின் செயற்பாடுகள் சரியான திசையில் அமையும் பட்சத்தில் பொதுமக்களும் அவர்களுக்கு ஆதரவு வழங்குவார்கள். அவர்களுக்கு பின்னால் செல்வார்கள்.

போர் முடிந்து 10 வருடங்களுக்கு பிறகு எங்களுக்கு வலுவான 2 ஆம் தலைமுறை இல்லாவிடின் நிலைமை என்னாவது? இதனால் இன்று இளையோர்கள் தாமாகவே அமைப்புக்களைக் கட்டமைத்து பல்வேறு வேலைத் திட்டங்களையும் செய்து வருகின்றார்கள். இவ்வாறு தான் இளையோர்களாகிய நாங்கள் சேர்ந்து PEARL Actionஎன்னும் அமைப்பை உருவாக்கினோம். அதில் நான் முழுநேர செயற்பாட்டாளாராக வேலை செய்கின்றேன். ஏனெனில் அதனை ஒரு நிறுவனமாக கட்டமைத்து வளர்வதற்கு ஒருவருடைய முழுநேர உழைப்பு கட்டாயம் தேவைப்படுகின்றது.

எங்கள் சமுதாயத்தில் இருந்தே இன்று சர்வதேச விவகாரங்களில் தேர்ந்த இளையோர்கள் பலர் இருக்கின்றார்கள். நாங்கள் வெள்ளையர்களுக்கு காசு கொடுத்து எங்கள் பிரச்சினைகளை சர்வதேச அரங்கில் கதைக்க சொல்லாமல், அப்படியான இளையோரை தயார்படுத்தி அவர்களுக்கு முடிந்தால் ஊதியம் கொடுத்து எங்களுக்காக பேச அனுப்புவது தான் ஆரோக்கியமானது. புத்திசாலித்தனமானதும் கூட.

முன்னைய தலைமுறையினர் மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளையே அதிகம் தெரிவு செய்தனர். ஆனால் இன்றைய தலைமுறையினைச் சேர்ந்தவர்களோ சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வகையிலான படிப்புக்கள், சமூக விஞ்ஞானம், சர்வதேச அரசியல், ஊடகவியல், மனிதவுரிமை சார்ந்த பல்வேறு படிப்புக்களையும்தெரிவு செய்கின்றனர். இப்படியாக எம் இளையோர் இன்று சர்வதேசமெங்கும் பல்வேறு துறைகளில் கால்பதித்துள்ளனர். கனடாவின் நாடாளுமன்றில் 40 ஈழத்தமிழர்கள் பல்வேறு பதவி நிலைகளில் வேலை செய்கின்றார்கள்.நாங்கள் இனப்படுகொலை கண்காட்சி ஒன்றினை ரொறன்ரோ மற்றும்நியூயோர்க்கில் செய்தோம். அதற்கு இளையோர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது.



வெளிநாடுகளில் நடக்கும் நாடுகள் சார்ந்த நிகழ்வுகளில் கூட இன்று எம் இளையோர்கள் சிறீலங்கன் என சொல்லி சிங்கக்கொடியுடன் நிற்பது குறைந்து வருகிறது. எங்கள் மக்களுக்குநான் சிறீலங்கன் இல்லை. தமிழ் என்கிற அடையாளம் பொதுவாக இருக்கின்றது. அதுவும் இன்றைய இளையோர்களிடமும்அந்த உணர்வு இருப்பது தான் ஆச்சரியமானது.

பிரபல பொப்பிசைப்பாடகி மாயா சிங்கள பெருந்தேசியவாதத்தை சர்வதேச அரங்கில் கடுமையாக எதிர்த்து வருகின்றார். பிரபலமான சர்வதேச தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இலங்கையில் இனப்படுகொலை நடக்கிறது என சொன்னார். தன் பொப்பிசை மூலம் எங்கள் பிரச்சினையயை சர்வதேச கவனத்துக்குகொண்டுசென்றவர்.தமிழர்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்தாலும் தமிழ் என்கிற அடையாளமூடாக தனித்துவமாக இருக்கின்றோம்.

எங்கள் மக்களிடையே பல்வேறு அமைப்புக்கள் தோற்றம் பெற்றிருந்தாலும் பெரும்பாலான அமைப்புக்களிடையே கொள்கையில் ஒற்றுமை உள்ளன. "நீங்கள் எல்லா அமைப்புக்களையும் சேர்த்துக் கொண்டு வாங்கோ.... தனித்தனியாக எங்களால் கதைக்க முடியாது". என என்னிடம் ஒரு இராஜதந்திரி சொன்னார். அதற்கு நான் சொன்னேன், நீங்களும் [illegible] வேறு கட்சிகள் மற்றும் அமைப்புக்களாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு தெரியும் யார் உபயோகமான தகவல்களை வைத்திருப்பார்கள், எந்த நேரத்தில் யாரை அணுக வேண்டும் என்கிற விடயம். அப்படியானவர்களுடன் நீங்கள் கதைத்துக் கொள்ளத் தான் வேண்டும் என்று சொன்னேன்.

ஒற்றுமை என்று சொல்லிக் கொண்டு வருபவர்கள், அந்த ஒற்றுமைக்கூடாக மற்றவர்களை கட்டுப்படுத்தப் பார்க்கின்றார்கள். சுதந்திரமான செயற்பாடுகளுக்கு வேலி போடப் பார்க்கின்றார்கள். புலம்பெயர் தேசத்தில உள்ள பிரபலமான கூற்று இது தான் "எல்லாரும் ஒன்றுக்குள்ள வாங்கோ" என்பதாகவே இருக்கிறது. அப்படி மேலிருந்து கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் விசேடமாக இளையோருக்கு சரி வராது. நாங்கள் ஒரு வேலையை செய்யும் போது எல்லோரும் சேர்ந்துகதைத்து முடிவெடுத்தே செய்வோம். முன்னைய காலங்களில் உருவாகிய சில இளையோர் கட்டமைப்புக்கள் கூட மேலே இருந்து கட்டுப்படுத்தியமையால்தான் உடைந்து போனமை வரலாறு.

இன்று பல இளையோர் அமைப்புக்கள் வெற்றிகரமாக உருவாக 10 வருடங்கள் எடுத்ததற்கும் காரணம் இது தான். நான் தான் இயக்கம், இல்லை நான் தான் இயக்கம் என்று சொல்லி உருவாகிய அமைப்புக்கள் இளையோர் அமைப்புக்களை கட்டுப்படுத்த பார்த்தமையும், தன் பிடிக்குள் வைத்திருக்க முயற்சித்தமையும் நடந்துள்ளது.

கூடுதலாக பெண்கள் இப்படியான மேலிருந்து கட்டுப்படுத்தும் அமைப்புக்களுக்குள் போனால் அவர்களாகவே முடிவெடுக்கும் அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. பெரும்பாலும் "கூட்டத்துக்கு வந்து ஆங்கிலத்தில் கதையுங்கோ, கூட்டத்தில் நடந்த விடயங்களை எழுதி தாங்கோ" போன்ற விடயங்கள்தான் பெண்களுக்கு கொடுக்கப்பட்டன. முடிவுகளை மட்டும் அங்கே நான்கு ஆண்கள் எடுக்கும் சூழல் இருக்கிறது.ஒற்றுமை,மேலிருந்துகட்டுப்பாடு என்று சொல்கிற அமைப்புக்களில் இதுதான் நிலைமை. இன்று பால்நிலை சமத்துவம் பற்றி கூடுதலாக எங்கள் இளையோர்கள் கதைக்கிறார்கள். கதைப்பதுமட்டுமல்ல செயலிலும் நடக்கிறது. எங்களது PEARL Action அமைப்பிலும் அதிக பெண்கள் வேலை செய்கின்றார்கள்.

கொழும்பு அரசியல்வாதிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் சமூகத்துக்கு நிலைமைகள் விளங்கவில்லை என்று தான் நினைக்கிறார்கள். கதைக்கிறார்கள். ஆனால், புலம்பெயர் தேசங்களில் பிறந்து வளர்ந்து தமிழ் அரசியலை நோக்கி பல்வேறு வேலைத்திட்டங்களை அமைதியாக செய்து கொண்டிருக்கும் இளையோர்கள் ஏராளம் இருக்கின்றார்கள். கோழி ஒரு முட்டை இட்டுவிட்டு பல தடவைகள் கொக்கரித்துக் கொண்டே இருக்கிறது. ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டுவிட்டு அமைதியாகவே இருக்கிறது. அபிவிருத்தி, சுகாதாரம், ஆரோக்கியம் சார்ந்து பலரும் அரசியல் சார்ந்து குறிப்பிடத்தக்கோரும் வேலை செய்கிறார்கள்.

இவ்வளவு பேரழிவு 2009 இல் நடந்த பின்னும் இன்று பத்து வருடங்களுக்குள் நாங்கள் மீண்டும் இப்படி மீண்டு வருவோம் என நாங்கள் நினைத்திருக்கின்றோமா? எல்லாம் முடித்துவிட்டதெனத் தானே நினைத்தோம். ஆனால், நாங்கள் இன்று பாரிய அழிவில் இருந்து வேகமாக மீண்டு கொண்டிருக்கிறோம்.

**அமுது நிமிர்வு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Are you HARD TO INSURE?

உங்களுக்கான காப்பீட்டைப் பெற்றுக் கொள்ள கடினமாக உள்ளதா?

Have you ever been REFUSED LIFE INSURANCE in the past?

## NO MEDICAL

for up to $500,000 in coverage

தற்போது $500,000 வரையான காப்புறுதியை மருத்துவப் பரிசோதனைகள் எதுவும் இன்றி இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

Payments start in the 2ND MONTH*

*Applicable on monthly payment plans only.

Call us today

Bamathi Ramthas, CLU, CHS
905-999-8023

Karthiga Gnanachandran, CLU, CHS
416-909-7805

iNFORCE LIFe
Financial Services Inc.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TCHC

# Thermo Care

## HEATING & COOLING

**For all your repairs & installation needs**

**O: 416 640 1174 | C: 416 825 9373 | F: 416 640 1175**

We offer flexible Financing Options to specifically meet your budget.
It's the fast, flexible and easy way to upgrade your home-comfort system.

**Toll Free : 1 800 416 1623**

1. Financing Loan for 1 year with No Payment and No Interest Charged.
2. Equal Payment Plans that can be arranged to be paid within 2 or 3 Years.
3. Financing Options offered for 5 or 10 years, paid with equal installation payments

- Furnace
- Air Conditioner
- Furnace Cleaning
- Humidifiers
- Air Cleaners
- Tankless Water Heater Rental

Avail up to $2350 In Rebates on Eligible Heating & Cooling Equipment

» Heating / Cooling Protection Plan $14.99/monthly

» Maintenance Plan $7.99/monthly

» Air Conditioner, Furnace Rental Rate from $29.99/monthly

» Tankless Water Heater Rental Rate from $34.99/monthly

## The Next Generation

Water Softeners

*Quality water better than bottled water*

Refineosoft

EXCALIBUR Water Systems

- Removes Chlorine
- Softens Water
- Save 70% On Soap & Cleaners
- Removes Chemicals
- Soften Skin & Hair
- Save 27% On Hot Water Cost
- Shinny Kitchen & Bath Sink

100% SATISFACTION GUARANTEE

LIFETIME WARRANTY

LIFETIME UNIT REPLACEMENT LIMITED WARRANTY*

VISA

BEST SERVICE

BEST WARRANTY

BEST PRICE

Glorious Print 905 471 2580

1365 Morningside Avenue, Unit #6 | Scarborough, M1B 4Y5 | www.thermocare.ca | thermocare@hotmail.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானியா' என வர்ணிக்கப்பட்டு, சுமார் உலகின் மூன்றில் ஒரு பகுதியை தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த பிரித்தானியா, இன்று சூரியனைத் தேடுகின்றது. 2016ம் ஆண்டு ஆனி மாதம் 23ந் திகதி நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில்51.9வீதமான பிரித்தானியர், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிவதற்கு ஆதரவளித்தார்கள். அன்றிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு முறையும் ஐரோப்பிய ஒன்றியமும், பிரித்தானியாவும் ஒத்துக் கொண்ட தீர்மானம், பிரித்தானிய பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப் படவேண்டும். மூன்று தடவைகள் முன்னால் பிரதமர் திரெசா மேயினால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் பாராளுமன்ற உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் தனது பிரதமர் பதவியை துறந்தார். அதன் பின்னர் பிரித்தானியா பிரிய வேண்டும் என்று பிரச்சாரப்படுத்தியதில் முதன்மையானவரான பொறிஸ் ஜோன்சன் (Boris Johnson) கொன்சவேற்றிவ் கட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பிரதமரானார். டொனால்ட் ரம்ப் போன்றவர்களின் குரு என இவர் அழைக்கப்படுகின்றார். அவ்வாறு பெயர் பெற்ற பொறிஸ்ன் முதலாவது பாராளுமன்ற வாக்களிப்பே தோல்வியில் முடிவடைந்தது. செப்ரம்பர் மூன்றாம் நாள், கொன்சவேற்றிவ் கட்சி பா.உ, எதிர்க்கட்சிக்கு மாறிவிட்டார். இதனைத் தொடர்ந்து கொன்சவேற்றிவ் கட்சி பெரும்பான்மையையும் இழந்து விட்டது. அப்படியிருக்கவும் பொறிஸ் ஜோன்சன் தனது திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இவரது கட்சியைச் சேர்ந்த 21 பா.உக்கள் ஜோன்சனின் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். பல முறை மாற்றப்பட்டு இறுதியாக ஒக்ரோபர் 21ந் திகதி, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா முற்று முழுதாக விலகுவது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் பாராளுமன்றம் பிரதமரால் முன்வைக்கப்பட்ட திட்டத்தை நிராகரித்துள்ளது.

இத் தொடருக்கு முன்பாக பொறிஸ் ஜோன்சன் பாராளுமன்றத்தை ஐந்து வாரங்களுக்கு ஒத்திவைப்பதற்கான அனுமதியை மகாராணியிடமிருந்து பெற்றிருந்தார். இதற்கு பல பா.உக்கள கடுமையான எதிர்ப்பைதெரிவித்திருந்தனர். இறுதியாக பொறிஸ் ஜோன்சனுக்கு இரண்டு விடயங்களே இருந்தன. ஒன்று நோ டீல் விலகல். அதாவது பிரித்தானியாவிற்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்குமிடையில் விலகுவதற்கான எந்த வித ஒப்பந்தமுமின்றி விலகல். இதனால் பிரித்தானியாவிற்கு பல கோடிகள் நட்டமாகும். அத்துடன் பிரித்தானியாவின் பொருளாதாரம் 8.7 வீத வளர்ச்சியிலிருந்து 3.5 வீதமாக குறையும். பலர் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள். பல நிறுவனங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும். இவை சில. இதனை விட பல விளைவுகளை பிரித்தானியா சந்திக்கும்.

இரண்டாவது தேர்தலை நடாத்துவது. அடுத்ததேர்தல் 2022ம் ஆண்டே நடைபெற வேண்டும். ஆனால் அதற்கு முன்பாக நடாத்துவதாயின் மூன்றில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கீகரிக்க வேண்டும். இல்லையேல் Notwithstanding the fixed term Parliments Actன் பிரகாரம் பெரும்பான்மை அங்கீகரிக்க வேண்டும். பின்னர் இவ் அங்கீகாரத்தை HouseofLordsம், House of Commonsம் அங்கீகரிக்க வேண்டும். இது மிகவும் சவால் நிறைந்தது.

பொறிஸ் ஜோன்சன் பாராளுமன்ற அங்கீகாரம் கிடைக்காத பட்சத்தில் நோ டீல் No Deal வெளியேற்றத்தை ஐரோப்பிய ஒன்றியத்துடன், ஒக்ரோபர் 21 செய்வதாக இருந்தார். ஆனால் ஒக்ரோபர் மூன்றாம் நாள் நோ டீலை பொறிஸ் ஜோன்சன் செய்ய முடியாதவாறு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அங்கீகாரத்தை பெற்று விட்டனர். தேர்தலை முன் கூட்டியே நடாத்தும் தீர்மானமும் தோல்வியில் முடிவடைந்து விட்டது. அடுத்த என்ன? பிரித்தானிய மக்கள் அதிர்ச்சியுடனும், அச்சத்துடனும் சூரியனைத் தேடுகின்றனர். இப்பொழுதெல்லாம் சூரியன் அதிகளவு கனடாவிலேயே காட்சி தருகின்றார்.

விலகல்என்பதுசாதாரணவிடயமல்ல. பிரித்தானியாவின் பிரசைகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் வேலை பார்க்கின்றனர். தங்களதுநிறுவனங்களை நடாத்துகின்றனர். அதே போல் பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரசைகள் பிரித்தானியாவில் வாழ்கின்றனர். தொழில் புரிகின்றனர். இவர்களின் நிலை என்ன? எல்லை குறிப்பாக வட அயர்லாந்துடனான எல்லை தொடர்பான சிக்கல்கள் உள்ளன. பிரித்தானியாவின் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்படுவார்கள். பிரித்தானியாவின் உற்பத்தியின் ஐம்பது வீதமான பொருட்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கே செல்கின்றது. கடந்த ஆண்டு பிரித்தானியாவின் சேவைகள் வருமானம் பாரிய வீழ்ச்சியடைந்தது.

பல அரசியல் பொருளியல் வல்லுனர்கள் பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வாககு கேட்டவர்கள், பிரித்தானியாவின் தனித்தன்மை, தேசியம் என்பனவற்றையே முன்வைத்திருந்தனர். அவர்கள் பொருளாதார வீழ்ச்சியைப் பற்றியும், வேலைவாய்ப்பின்மை பற்றியும் அக்கறை செலுத்தவில்லை. இதற்குஎதிராகபிரச்சாரம் செய்தவர்களும்வெளியேற்றத்தால்ஏற்படப் போகும் இழப்புக்களை முன்வைத்து பிரச்சாரம் செய்யவில்லை. புதிய குடி வரவாளர்களின் வருகை, உள்ளக வேலை வாய்ப்பினையை குறைக்கும் என்ற பிரச்சாரம் முன் நிறுவனங்கள் குறைந்த சம்பளத்துக்காக ஆசிய, ஆபிரிக்க நாடுகளையே நாடுகின்றனர். இதனால் வேலை வாய்ப்புக் குறைவு என்பது தவறான கருத்து. ஆனால் இதனையே முதன்மைப்படுத்துகின்றனர். பொறிஸ் ஜோன்சனின் சீடர்கள் இன்று அமெரிக்கா, இந்தியா, இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் எனத் தொடர்கின்றர்கள். கனடியத் தேர்தலிலும் குடிவரவாளர்கள் மிக முக்கிய பேசு பொருளாகவிருக்கும்.

கொன்சவேற்றிவ் கட்சி பிரதமர் டேவிற் கமரோன் தனது தேர்தல் வாக்குறிதியை நிறைவேற்றவே சர்வசன வாக்கெடுப்பு நடாத்தினார். கொன்சவேற்றிவ் கட்சி உறுப்பினர்களில் பலர் பிரிவதற்கு எதிராக பிரச்சாரம் செய்தனர். இப்பொழுதும் கொன்சவேற்றிவ்கட்சிக்குள்பலர்பிரிவதற்கு எதிரானவர்கள். எனவே அவர்கள் பிரதமர்கள் தொடர்ந்து கொண்டுவரும் திட்டங்களுக்குஎதிராகவாக்களிக்கின்றனர். பல பா.உக்களுக்கு திட்டம் பற்றிய தெளிவின்மையுள்ளது. இவ்வாறான திட்டங்கள் மக்கள் முன்வைத்து, அவர்களுக்கு ஏன் தெளிவுபடுத்தவில்லை? டேவிட் கமரோன், இதன் பின்னர் வந்த தெரெசா மே ஆகியோர் பிரிவதற்கு எதிரானவர்கள்.

அடுத்து வரும் வாரங்களில் பிரித்தானியாவின் எதிர்காலத்தின் பல முகங்கள்வெளியேதென்படத்தொடங்கும். பொறுத்திருப்போம்.

இதே பிரித்தானியாவில் முதலாவது ஓப்பியம் போரின் பின்னர் ஹொங்கொங், சீனாவால் பிரித்தானியாவிற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது. அத்துடன் தென் சீனக் கடலில் உள்ள 235 தீவுகளும் கையளிக்கப்பட்டன. 1941ம் ஆண்டு ஜப்பான் ஹொங்கொங்கை கைப்பற்றியது. ஆனால் மீண்டும் 1946ல் பிரித்தானியா மீண்டும் ஹொங்கை கைப்பற்றியது. 1997 யூலை மாதம் ஹொங்கோங், சீனாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. 2047 வரை சீனாவின் கீழ் ஹொங்கொங் ஒரு தனி அலகுள்ள நாடாத் இருக்கும். அதன் பின்னரே அது சீனாவின் கீழ் ஒரு மாநிலமாக இயங்கும்.

ஹொங்கை உலகின் மிக முக்கிய நிதி மையம். சீனா அரசு சார்பு நிறுவனகள் ஹொங் ஊடாக பல நிதி முதலீடுகளை மேற்கொள்கின்றது. ஹொங்கின் அரசு மக்களால் தெரிவு செய்யப்படுபவர்கள் அல்ல. கடந்த காலங்களில் பல தடவைகள் ஹொங்கொங்கில் மக்கள் சீனாவிற்கு எதிராக குரல் கொடுத்தார்கள். இறுதியாக ஹொங்கொங்கில் அரசுக்கு எதிரானவர்களை சீனாவிற்கு நாடு கடத்தும் சட்டத்துக்கு எதிராக போராடினார்கள். வார இறுதி நாட்களில் நடைபெறும் இப் போராட்டத்துக்கு பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இடையில்இச்சட்டம்இடை நிறுத்தப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் அரச வன்முறைக்கு எதிராக என போராட்டம்தொடர்ந்தது. இறுதியாகசீனா அச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது என சட்டத்தை நீக்கிவிட்டது.

இப் போராட்டங்களின் பின்னால் மேற்குலக நாடுகளின் ஆதரவுக் கரங்களும், நிதி வழங்கலும் இருந்தன. அண்மைக் காலமாக சீனாவின் பொருளாதார வளர்ச்சியும், தென் சீனக் கடலில் சீனாவின் எழுச்சியும், உலகின் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு சீனா வழங்கும் நிதி மூலம், அந் நாடுகளை சீனா சுரண்டி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் மேற்கு நாடுகளை அச்சமடையச் செய்தன. விளைவு ஹொங் கொங் என்ற நிதி மையத்தை சீர்குலைப்பதன் மூலம், ஹொங் கொங்கின் முக்கியத்துவத்தை குறைத்து சீனாவின் நிதி எழுச்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, ஹொங் கொங் மக்களையே பயன்படுத்தினர். 1997க்கு சற்று முன்பாக பல செல்வந்த ஹொங் கொங் பிரசைகள் பிரித்தானியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு குடிபெயர்ந்து விட்டனர். இவர்களும் இப் போராட்டங்களின் பின்னால் இயங்கினர்.

சீனா சட்டத்தை நீக்கி போராட்டக் காரர்களுக்குவெற்றியை கொடுத்தன் மூலம், மேற்கை தோல்வியடையச் செய்துள்ளது. சீனாவுடனான அமெரிக்க வணிகப் போரிலும்இவ்வாறேசீனா தனதுகாய்களை அமைதியாக நகர்த்துகின்றது. அடுத்த வல்லரசாக தன்னை வளர்த்திக் கொண்டு, உலகை தனது கட்டுப்பாட்டுக்குள் சீனா கொண்டு வர எடுக்கும் முயற்சி, சீனாவிற்கு தற்சமயம் வெற்றிப் பாதையையே அமைத்துள்ளது. சூரியன் இப்பொழுது சீனாவிலும் உக்கிரமாக தனது கதிர்களை வீசுகின்றார்.

ரதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE

**T.NESAN**
**416-908-5656**

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |

## 1st Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('B', 'D' lender) Private, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

## WE DEAL WITH ALL BANKS

Canada Trust Scotiabank STREET CAPITAL radius financial
FIRST NATIONAL EQUITABLE BANK HOME TRUST B2B BANK RMG MCAP

SUBRA MORTGAGE FINANCIAL
mortgage@nesan.ca
www. nesan.ca

Mortgage Alliance
Brokerage # 10530
* Independently Owned and Operated

1585 Markham Rd, Unit # 407, Toronto, ON. M1B 2W1
Office: 1-844-878-2721| Fax: 647-351-3099


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொங்கொங்கும் தாய்வானும் அமெரிக்க சீன வல்லரசுகளும்

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகத் தொடர்பைமுற்றாகமாற்றியமைக்கவும் சீனா அமெரிக்காவின் அறிவுசார் சொத்துக்களைத் (Intellectual Prosperities) திருடுவதைத் தரிக்கவும் அமெரிக்கா கடந்த இருபது ஆண்டுகளாக கடும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா சீனாவிற்கு எதிராக எடுத்த கடைசிப்படைக்கலன் வர்த்தகப் போர், வர்த்தகப் போர் என்பது இரு நாடுகள் ஒரு நாட்டில் இருந்து வரும் இறக்குமதிக்கு எதிராக மற்ற நாடு போட்டி போட்டுக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கும் போது உருவாகும். அமெரிக்க சீன வர்த்தகப்போர்ஹொங்கொங்தீவையும் பாதித்துள்ளது. 2019 ஆண்டில் ஜூன் வரையிலான இரண்டாம் காலாண்டில் ஹொங்கங்கின் பொருளாதாரம் 0.5வீதம் தேய்வடைந்துள்ளது. இந்தப் பொருளாதாரத் தேய்வு மூன்றாம் காலாண்டிற்கும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தொடர் ஆர்ப்பாட்டம்

ஹொங்கொங்கில் சீனாவிற்கு எதிராகச் செயற்படுவோரை சீன அரசு கோரும் போது அவர்களை சீனாவிற்கு நாடு கடத்தி சீனாவில் விசாரித்து தண்டனை அளிக்கும் சட்டத்தை ஹொங்கொங்கின் சட்டசபையில் நிறைவேற்ற முயன்றபோது ஹொங்கொங் மக்கள் அதற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனால் அந்த சட்டத்தை நிறைவேற்றும் முயற்சி இடைநிறுத்தப்பட்டது. இடைநிறுத்தல் போதாது, முழுமையாக கைவிட வேண்டும் என்றும் தமது பிரதேசத்தின் உரிமைகள் பேணப்பட வேண்டும், தன்னாட்சி மதிக்கப்பட வேண்டும், முன்னைய ஆர்ப்பாட்டங்களின்போது கைது செய்தவர்கள் விடுவிக்கப்பட வேண்டும், காவற்துறையினரால் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஹொங்கொங் மக்கள் தங்கள் போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆர்ப்பாட்டத்திற்கான ஆதரவு பெருகிக் கொண்டே போகின்றது. 2019 ஓகஸ்ட் 18 ஆம் திகதி கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மொத்த மக்கள் தொகையின் காற்பங்கினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கையைப் பிசையும் சீனா

இப்போது சீனா அமெரிக்காவை எப்படி கையாள்வது என்று தெரியாமல் தவிப்பது போலவே ஹொங்கொங்கையும் எப்படி கையாள்வது என்று தெரியாமல் தவிக்கின்றது. ஹொங்கொங்கில் குற்றச்செயலில் ஈடுபடுவோரை தண்டிக்கும் அதிகாரத்தை சீனா பெற முயன்றபோது ஹொங்கொங்கில் பலர் கொதித்து எழுந்தனர். 1997 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து ஹொங்கொங்கை சீனா கையேற்ற போது சீனா அதற்கு அதிக அதிகாரங்களை கொடுத்து சம்மதித்தது. சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வெளிநாட்டு மூலதனங்களைப் பெறும் பாலமாக ஹொங்கொங் இருந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தால் நிலைமை கட்டுக்குள் வருமா அல்லது இன்னும் மோசமாகுமா என்பது பற்றித் தெரியாத நிலையில்சீனா இருக்கின்றது.

## கட்டுப்பாட்டுக்குள் இரு தீவுகளும் வேண்டும்

தொடர்ந்தும் சீனாவில் சவாலே இல்லாத ஆதிக்கம் செலுத்துவதற்கு அடிப்படையாக இருப்பது சீனாவின் பொருளாதார வளர்ச்சியே. சீனா படைத்துறையில் மேற்கு நாடுகளுக்கு சவாலாக உருவெடுப்பதும் அதன் பொருளாதார வளர்ச்சியே.





சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவான வகையில் அதன் உலக ஆதிக்கம் வளர வேண்டும் என சீனா பல தொடர் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. உலகெங்கும் இருந்து தனது உற்பத்திப் பொருட்களுக்கு தேவையான மூலப்பொருட்களை தடையின்றி கிடைக்கவும் தனது உற்பத்திப் பொருட்களை உலகெங்கும் தடையின்றி விற்பனை செய்யம் முத்துமாலைத் திட்டம், பட்டுப்பாதை முன்னெடுப்பு என்னும் பெயர் கொண்ட புதிய பட்டுப்பாதைத் திட்டங்களையும் தீவிரமாக செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது. முன்பு சீனாவின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங் தீவையும் தாய்வான் தீவையும் மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தனது பாணியிலான பொதுவுடமை ஆட்சியையும் பொருளாதாரக் கட்டமைப்பையும் அங்கு நிலைநாட்ட கடும் முயற்சி எடுக்கின்றது.

## உன்னை நான் பார்க்கும் போது என்னை நீ பார்க்கின்றாயே

சீனாவை எப்படிக் கையாள்வது என்பது தொடர்பாக ஹொங்கொங் மக்களும் தாய்வான் மக்களும் ஒருவரை ஒருவர் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு தீவின் மீது தன் கட்டுப்பாட்டைக் கொண்டு வர சீனா எடுக்கும் நடவடிக்கைகளின் வெற்றிதோல்வியில் மற்றத் தீவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் வெற்றி தோல்வி தங்கியிருக்கின்றது என்பதை சீனப் பொதுவுடமைக் கட்சியினர் நன்றாக அறிவார்கள். சீனாவின் பிடிக்குள் அகப்பட்டால் என்ன நடக்கும் என்பதை ஹொங்கொங்கைப் பார்த்து தாய்வானியர்கள் அறிந்து கொள்கின்றார்கள். ஹொங்கொங் மக்களின் போராட்டத்திற்கு தாய்வான் ஜனாதிபதி சை இங் வென் தனது சமூகவலைத்தளப் பதிவுகள் மூலம் தெரிவிக்கும் ஆதரவு தாய்வான் மக்களிடையே அவரது மதிப்பை உயர்த்தி வருகின்றது.

## சீனப்பெருமையும் அச்சமும்

சீனா தாய்வானைக் கைப்பற்ற நினைப்து அதன் பெருமையைக் காட்டுகின்றது. அது ஹொங்கொங்கை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயல்வது ஹொங்கொங்கின் பொருளாதாரம் தொடர்பான அச்சத்தைக் காட்டுகின்றது, ஹொங்கொங்கின் குற்றவியல் நீதித் துறையை சீனா தான் கையாள வேண்டும் என நினைக்கின்றது. அதற்கான முயற்சியாகத்தான் ஹொங்கொங்கில் சீனாவிற்கு எதிரான குற்றங்கள் செய்வோரை சீனாவிற்கு நாடு கடத்தும் சட்டத்தை சீனா ஹொங்கொங்கில் நிறைவேற்ற முயன்றது. ஹொங்கொங்கின் ஆர்ப்பாட்டத்தில் சீனாவின் மென்மைத் தன்மையை சீனர்கள் உணர்ந்து அவர்களும் ஆர்ப்பாட்டம் செய்யலாம் என்ற அச்சம் சீனப் பொதுவுடமைவாதிகளை ஆட்டிப்படைக்கின்றது. சீனப் பொதுவுடமைக் கட்சியின் மத்திய குழு ஹொங்கொங் பிரச்சினையை முழுமையாக ஜனாதிபதி ஜீ ஜின்பிங் கையாள அனுமதிக்கத் தயங்குகின்றது.

## அமெரிக்காவின் இரட்டை நாக்கு

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ஹொங்கொங் பிரச்சினை சீனாவின் உள்நாட்டு விவகாரம் என ஜப்பானில் நடந்த ஜீ 20 மாநாட்டில்சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்கிடம் தெரிவித்திருந்ததாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் அமெரிக்காவின் மற்ற அதிகார மையங்களான பாராளுமன்றம் மற்றும் வெளியுறவுத் துறை போன்றவற்றில் உள்ளோர் வெளியிடும் கருத்துக்கள் அதற்கு மாறாக உள்ளன. அமெரிக்காவின் இரு கட்சியையும் சேர்ந்த பாராளுமன்றத்தின் இரு அவைகளினதும் உறுப்பினர்கள் பலர் ஹொங்கொங்கில் சீனா கடுமையாக நடந்து கொண்டால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கு என எச்சரித்தும் உள்ளனர்.

**வேல் தர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PLUG 'n' PLAY
MUSIC ACADEMY

# முதலாவது இசை நிகழ்ச்சி
























'Concerto 2019' கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி Toronto Fairview Library அரங்கத்தில் academyயின் இயக்குனர்கள் திரு.தர்ணன் யோகேந்திரநாதன் மற்றும் திரு.தர்ஷாந்தன் ஞானசேந்தன் ஆகியோரின் நெறியாள்கையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. இயக்குனர்கள் தர்ணன் மற்றும் தர்ஷாந்தன் ஆகியொர், இலங்கையில் திரு. L.B.Anton Dias இன் வழிகாட்டலில் பெற்ற கற்பித்தல் அனுபவத்தினாலும், கற்பித்தலில் உள்ள அதீத ஆர்வத்தினாலும் Plug 'n' Play Music Academyயை 2018ம் ஆண்டு கனடா, Toronto, Scarborough நகரில் நிறுவினர். Concerto 2019 நிகழ்வில் சிறுவர் முதல் இளையோர் வரை ஆர்வத்துடன் கற்று சிறப்பாக இசைக்கருவிகளை வாசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கனடா தேசிய கீதத்துடன் தொடங்கி, ஒவ்வொரு வயது பிரிவிலான மாணாக்களின் குழு வாத்திய இசை மற்றும் தனி வாத்திய இசை என நிகழ்வு களைகட்டியது. மாயநதி, ஆளப்போறான் தமிழன், ஊலாலா போன்ற சமீபத்திய பாடல்கள் பலவற்றுடன் நீ பார்த்த பார்வை, காதல் ரோஜாவே, மன்றம் வந்த தென்றலுக்கு போன்ற பாடல்களும், ஜெய் ஹோ, Pirates of the Caribbean, Feeling good, Final countdown போன்ற பல பிற மொழி பாடல்களையும் கொண்டமைந்து இந்நிகழ்வு கேட்போரின் ஆர்வத்தை நிகழ்வின் இறுதி வரை தொடரச் செய்தது. இந்நிகழ்வில் தம்மிடம் கற்கும் மாணாக்களின் பிற கலைத்திறன்களையும் (Guitar, drums வாத்திய இசை) மேடையேற்றியது பாராட்டத்தக்கது.

Plug 'n' Play Music Academy இல் சிறுவர்களுக்கான முநலழுழயசன வாத்திய மற்றும் Piano வாத்தியத்திற்கான இசை வகுப்புகள் வழங்கப்படுவதுடன் மட்டுமின்றி Trinity College London மற்றும் University of West London இன் London College of Music பரீட்சைகளுக்கான Keyboard பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டு, டிப்ளோமா தரத்தின் மேல் University of West London இனால் பட்டமளிப்பு விழாவும் நடைபெறும் Royal Conservatory of Music பரீட்சைகளுக்கான Piano வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. (தர்ணன் 647-887-2320 தர்ஷாந்தன் 647-620-9775)

Plug 'n' Play Music Academyயின் இயக்குனர்கள் மற்றும் ஆசிரியர்களான திரு.தர்ணன் யோகேந்திரநாதன் மற்றும் திரு.தர்ஷாந்தன் ஞானசேந்தன் ஆகிய இருவரும் இலங்கையில் 2012 ம் ஆண்டு, Nelum Pokuna Mahinda Rajapaksa Stadium இல் திரு. L.B.Anton Dias இனால் Largest Electronic Keyboard Ensemble இற்கான கின்னஸ் சாதனையிலும் பங்கு வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் மேலும் இந்நாட்டில், அடுத்த தலைமுறையினருக்கு கலைச்சேவை புரிய வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகுள் உங்கள் அன்றாட நடவடிக்கையை காட்டிக் கொடுக்கும் துரோகி!




ஆதார் அட்டையும், செல்போனுமாகி விட்ட நம்மில் சகலருக்கும் தெரிந்த விஷயம்தான்.. இந்த 'கூகுள்' இருக்குதே அது அனைத்து இடங்களிலும் ஒவ்வொரு நொடியும் நம்முள் ஊடுருவி அதை பதிவு செய்துக் கொண்டே வருகிறது. நவீன மயமாகி விட்ட உலகில் இந்த கூகுளுடன் தொடர்பு கொள்ளாமல் ஒரு நாளை கழிப்பது என்பது சிம்ம சொப்பனம். ஏனெனில், கூகுள் 'மேப்' , யூடியூப் இன்றி யாரும் இருப்பதும் இல்லை, அவையின்றி இருக்க விரும்புவதும் இல்லை. அதே சமயம் கூகுள் பிளாட்ஃபாமில் இயங்கும், இமெயில் சர்வீஸ், மேப் அப்பிகேஷன் உள்ளிட்ட கூகுள் சார்ந்த அப்ளிகேஷன்களை ஒரு மாதத்தில் மட்டும் 1 பில்லியன் மக்கள் சராசரியாக பயன்படுத்துகிறார்கள். ஆனால் நம்மில் யாருக்கும், தெரியாது கூகுள் நம்மை ரகசியமாகக் கண்காணித்து வருகிறது என்று. இதைப் பற்றி என்றாவது சிந்தித்து இருக்கிறோமா?

இதோ, கவனியுங்கள் கூகுள் நம்மை கண்காணிப்பதை...

ஆக்டிவ் கலக்ஷன், பேசிவ் கலக்ஷன் என இரண்டு வகையாக கூகுள் நமது தகவல்களைச் சேகரிக்கிறது.

யூடியூப், ஜிமெயில் இதர கூகுள் அப்களை பயன்படுத்தும் போது, 'sign in' கேட்கப்படும். நாமும் யோசிக்காமல் நமது முழு விவரங்களையும் பதிவேற்றம் செய்து விடுவோம். இதன் மூலம் கூகுள் நமது தகவல்களை நேரடியாகப் பெற்று விடுகிறது. இது அக்டிவ் கலக்ஷன்.

ஆண்டிராய்டு ஓஎஸ், க்ரோம் உள்ளிட்ட செயலியில் வரும் கூகுள் விளம்பரங்கள் மூலமாகவும் நாம் கண்காணிக்கப்படுகிறோம். நம்ப முடிகிறதா? இது பேசிவ் கலக்ஷன்.

சரி, மொபைல் போனில் 'லொகேஷன்' ஆப்ஷனை turn off செய்துவிட்டால் கூகுள் நம்மைப் பின்தொடராது என்று எண்ணினால்.. அது தவறு.

உதாரணத்திற்கு, சென்னை சென்டரல் ரயில் நிலையத்தில் இருந்து மெட்ரோ ரயில் நிலையத்துக்கு செல்கிறோம் என்று எடுத்துக் கொள்ளுங்கள். அந்த சமயத்தில் நாம் மொபைல் போனில் பாட்டுக் கேட்டுக் கொண்டு சென்றாலும் அல்லது செய்தி வாசித்துக் கொண்டே நடந்தாலும், கூகுள் நம்மைப் பற்றிவிடும்.

இது எப்படி சாத்தியம்... கேள்வி எழுகிறதா?

மொபைலில் நீங்கள் எந்த வகையான செய்திகளை விரும்பி படிக்கிறீர்கள் என்பதை 'history' ஆப்ஷன் வாயிலாக அறிந்து கொண்டு தகவல்கள் சேகரிக்கப்படுகிறது. ப்ளே ஸ்டோரில் உள்ள கூகுள் மியூசிக்கில் வழியாக இசைகளைக் கேட்கும் போதும் நமது தனிப்பட்ட விருப்ப தகவல்களைக் கூகுள் எடுத்து விடுகிறது.

அண்மையில், அறிமுகம் செய்யப்பட 'Google Pay'–வை உபயோகிப்பதால், நமது கிரெடிட், டெபிட் கார்டு தகவல்களை மட்டும் கூகுள் சேகரிப்பதில்லை. அதே சமயம், நாம் யாரிடம் எங்குப் பொருட்களை வாங்குகிறோம், எத்தனை முறை பண பரிவர்த்தனை செய்கிறோம் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் தன வசப்படுத்தி விடுகிறது கூகுள். இவ்வாறு, நமது தகவல்களை கூகுள் சேகரித்துக் கொள்ள ஆண்டிராய்டு செயலி உதவுகிறது.

ஆக இனி கூகுள்தான் உங்கள் துரோகி.. இது சகலத்தையும் காட்டிக் கொடுத்து விடும்!

---

# விண்டோஸ் கணனியில் கூகுள் வாய்ஸ் டைப்பிங் பயன்படுத்த ஆரம்பிச்சாச்சா?

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்னரே 'உங்கள் மொபைலுடன் பேசுங்கள்; அதுவும், தமிழில் பேசுங்கள்' என்றது, கூகுள். இந்த கூகுள், அதையொட்டி, 30 புதிய மொழிகளில் பேச்சு உணர் மென்பொருளை அறிமுகப்படுத்தி இருந்தது. அதில், தமிழும் ஒன்று. அது வந்த பிறகு, கூகுளில் தேடுவது, தட்டச்சு செய்வது போன்ற எல்லாவற்றுக்கும், இனி நீங்கள் இரு விரல்களை பயன்படுத்த வேண்டியது குறைந்து விட்டது. தமிழிலேயே பேசினால், ஜிபோர்டின், 'வாய்ஸ் டைப்பிங்' மென்பொருள் புரிந்து கொண்டு தட்டச்சு செய்யும். தட்டச்சு செய்வதை விட, மூன்று மடங்கு வேகமாக பேச முடியும் என்பதால், இனி, பத்திபத்தியாக குறுஞ்செய்திகளை, வினாடிக்கு வினாடி அனுப்புவது அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவ்வளவாக பலர் அப்டேட் ஆக வில்லை. ஆனாலும் இன்று இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் என்பதை பேசியே தமிழில் டைப் செய்தோம் என்றும் சிலபலர் தெரிவித்தார்கள். அது எப்படி சாத்தியம் என்பதை ஒரு சில நுணுக்கங்களை தெரிந்து கொண்டு பயன்படுத்தினாலே போதும்.

முதலில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது நாம் நேரடியாக கூகுள் வாய்ஸ் டைப்பிங்கை கம்ப்யூட்டரில் பயன்படுத்த முடியாது. அதனால் நீங்கள் செய்ய வேண்டியது முதலில் கம்ப்யூட்டரில் ஒரு ரிமோட் சர்வரையும் மொபைலில் அதற்குண்டான கிளையன்ட்டையும் பயன்படுத்தினால் மொபைலில் இருந்து பேசிக் கொண்டே நாம் கம்ப்யூட்டரில் டைப் செய்து கொள்ளலாம். இது எப்படி சாத்தியம்




என்பதை நீங்களே கண்டு உணரலாம்

உங்களுக்குத் தேவையானது ஒரு கம்ப்யூட்டர் ஒரு மொபைல் போன் இந்த இரண்டுமே ஒரே வை.ஃபை இணைப்பில் இணைந்து இருக்க வேண்டும். இதற்கு சர்வர் சாப்ட்வேர் ஒன்றை கம்ப்யூட்டரில் நிறுவ வேண்டும் அதேபோல் ஒரு ஆப்பை உங்கள் மொபைல் போனில் நிறுவ வேண்டும் யுனிஃபைட் ரிமோட் எனும் ப்ரோக்ராமை நீங்கள் இரண்டு இடங்களிலும் பயன்படுத்த வேண்டும். இந்த யூனிஃபைட் ரிமோட் இணைப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

https://play.google.com/store/apps/details...

https://www.unifiedremote.com/download

இதைப் பயன்படுத்தி உங்கள் கம்ப்யூட்டரில் முதலில் புரோகிராமை நிறுவிக் கொள்ளுங்கள் பிறகு கூகுள் ப்ளே ஸ்டோர் சென்று அதே பெயர் கொண்ட ஆப்பையும் அங்கேயும் ஒன்று நிறுவிக்கொள்ளுங்கள் இது இரண்டும் ஒரே வைஃபை இணைப்பு இருந்தால் இரண்டும் ஒன்றோடு ஒன்று சுலபமாக இணைந்து விடும்.

அதன் பிறகு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்கள் மொபைலில் அந்த ஆப்பை திறந்து அதிலுள்ள கீபோர்ட் என்பதை தொட்டு அதன் உள்ளே உள்ள கூகுள் வாய்ஸ் டைப்பிங் எனும் பொத்தானை அழுத்தி பயன்படுத்தி கம்ப்யூட்டரில் உள்ள எந்த புரோகிராமிலும் நீங்கள் தமிழில் பேசிக்கொண்டே டைப் செய்யலாம். இந்த பதிவு முழுக்க முழுக்க கூகுள் வாய்ஸ் டைப்பிங் பயன்படுத்திய தமிழில் எழுதப்பட்டுள்ளது.

இருந்தாலும், இப்போதைக்கு, அது பலராது தமிழ் உச்சரிப்புகளை எழுத்தாக மாற்றுவதில், சில தவறுகள் இருக்கும். என்றாலும், லட்சக்கணக்கான தமிழர்கள், குரல் தட்டச்சை பயன்படுத்தும் போது, அதன் துல்லியம் வெகுவாக அதிகரிக்கும் என்று நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக வலைதள மற்றும் இணைய குற்றங்களும் பாதுகாத்ததலும்

"கடந்த தலைமுறையில் அதாவது 2000 ஆண்டிற்கு முன் பிறந்த ஒருவருக்கு துறை சார்ந்த ஒரு தகவல் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், பல்வேறு இடங்களுக்கு அலைந்து திரிந்து, பல நூல்களைப் படித்து, அதிலுள்ள குறிப்புகளை தெரிவு செய்து, அதனை மற்றொரு தளத்தில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டு உண்மை நிலையை உணர்ந்து, அதன் பிறகே தகவல்களை சேகரிப்பார்கள். ஆனால் தற்போது அனைத்து வகையினதான தகவல்களும் மிக மிக எளிதாக இணையத்தில் கிடைக்கின்றன.

பாடசாலையிலுள்ள வகுப்பறையில் மாஸ்ரர் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்றால், மாணவர்கள் ஆசிரியர் நடத்தும் பாடத்தை கவனிக்காமல், தம்மிடமுள்ள கைபேசியின் ஊடாக இணையத்தை கவனித்துக் கொண்டிருக்கிறார். அந்த மாணவர்களிடம் இது தவறல்லவா? என்று கேட்டால்.. ஆசிரியர் நடத்துவதைவிட இணைய டிஜிற்றல் ஆசிரியர் நன்றாகவே பாடம் நடத்துகிறார் என்று அலட்சியமாக பதிலளிக்கிறார்கள்.

மாணவர்கள் மற்றும் இன்றைய தலைமுறையினருக்கு இப்படி எளிதாக தகவல்களும், அவர்களின் விருப்பத்திற்கேற்ற விடைகளும் கிடைப்பதால், மாணவர்களும், இளைய தலைமுறையினரும் இணையத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அதிகமாகிறது. இணையக் குற்றங்களும் அதிகரிக்கிறன." என்ற தகவலைப் பகிர்ந்து கொண்டே எம்முடன் உரையாடத் தொடங்குகிறார் சைபர் க்ரைம் செக்யூரிட்டி ஸ்பெஷலிஸ்ட் சங்கர் ராஜ்சுப்ரமணியன்.

இவர் தமிழகமாநகரானகோவையில் தனியார் இணைய தொழில்நுட்ப பாதுகாப்பு நிறுவனத்தை நடத்துகிறார். அத்துடன் இந்திய அரசு, தமிழக அரசு மற்றும் கேரள அரசின் காவல் துறையில் சைபர் க்ரைம் பிரிவிலும், இந்திய விஞ்ஞான தொழில்நுட்பக் கழகமான இஸ்ரோவிலும், இந்திய கப்பற்படையிலும் தொழில்நுட்ப ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார். அவரிடம் இணையக் குற்றங்கள் குறித்தும், ஹேக்கர்ஸ் எனப்படும் இணைய குற்றவாளிகள் குறித்தும் விளக்கங்களை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டோம்.

எப்ஸ் ஒன்றை பதிவிறக்கம் செய்யும் பொழுது, தங்களுடைய ஸ்மார்ட்போனில் இருக்கும் அனைத்து விடயங்களும் அந்த எப்ஸை அறிமுகப்படுத்திய நிறுவனம் பகிர்ந்து கொள்ளும் என்றும், அது வழியாக ஹேக்கர்கள் எனப்படும் இணைய உளவாளிகள் உங்களதுஸ்மார்ட்போன்களைஹேக்செய்யவும், கண்காணிக்கவும் முடியும் என்கிறார்களே உண்மையா?

ஒரு எப்ஸ் பதிவிறக்கம் செய்தால், அதற்கான பணிக்குரியவற்றை பொருத்தமாக செய்யும். உதாரணத்திற்கு ஒரு போட்டோ எடிட் தொடர்பான எப்ஸ் ஒன்றை நீங்கள் பதிவிறக்கம் செய்தால், அது உங்களது ஸ்மார்ட்போனில் உள்ள கமராவில் உள்ள அனைத்து விடயங்களையும் அக்ஸஸ் செய்யட்டுமா என்று அனுமதி கேட்கும். நீங்கள் சரி என்று சொல்வீர்கள். அதன் முதல் உங்கள் ஸ்மார்ட்போனிலுள்ள கெமரா அதன் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும். அந்த எப்ஸை நீங்கள் இன்ஸ்டால் செய்யும்பொழுது, எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் உங்களது கெமரா தொடர்பான விடயங்களை பகிர்ந்து கொள்ளலாமா? என அனுமதி கேட்கும். இந்த அனுமதி விவரத்தை, நீங்கள் இன்ஸ்டால் செய்யும் போது, உற்று கவனித்து, அதற்குரிய பதிலை வழங்க வேண்டும். நீங்கள் அதனைக் கடந்து சென்று விட்டீர்கள் என்றால், ஒவ்வொரு விடயமும் அதன் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும். சீனாவின் தயாரிப்பில் உருவான எப்ஸாக இருந்தால், உங்களது கெமராவை ஓபன் செய்து, என்னென்ன பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை கண்காணிக்கும். ஹாக்கிங் செய்யும்.

நல்ல எப்ஸாக இருந்தால்... அது நல்ல பலனை அளிக்கும். அதே தருணத்தில் ஒருவர் ஹேக்கராக இருந்தால்... உங்கள் ஸ்மார்ட்போன் பதிவிறக்கம் செய்திருக்கும் எப்ஸை போலவே வேறு சலுகைகளை கொண்ட எப்ஸை பதிவிறக்கம் செய்ய கேட்டுக்கொள்வார். ஆனால் இவர்களுடைய நோக்கம், உங்களுடைய புகைப்படத்தை அழகுபடுத்துவதல்ல. தங்களுடைய சுயநலத்துக்காக பயன்படுத்திக் கொள்வார்கள். நீங்கள் அந்த எப்ஸ் கொடுக்கும் சலுகைகளுக்கு மயங்கி, அந்த எப்ஸை இன்ஸ்டால் செய்தால், இணைய உளவாளிகள் மற்றும் இணைய தாக்குதல் தொடுப்பவர்கள் உங்களுடைய ஸ்மார்ட்போனை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவிடுவார்கள்.

இதைவிட மற்றொரு விடயம் ஆச்சரியமான விடயம் என்றால், நீங்கள் ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட்போனை வைத்துக் கொண்டிருந்தால், நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளையும் கூகுள் google ஒட்டு கேட்கிறது என்று உறுதியாய் சொல்வேன். இதற்கு அந்த நிறுவனங்கள் அளிக்கும் பதில் என்ன தெரியுமா? எங்களது பயனாளி என்னென்ன வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ... அதை மிக விரைவாக வழங்க வேண்டும் என்பதற்காக தான் அதனை மேற்கொள்கிறோம் என்பார்கள்.

அவர்களது பேச்சு நாங்கள் கேட்கிறோம். கண்காணிக்கிறோம் என்று ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அது பயனாளியான உங்களுக்கு வேண்டுமா? வேண்டாமா? என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

கூகுள் சென்று, Mail பகுதிக்குள் சென்று, அங்குள்ள செட்டிங்ஸில் சென்று, வொய்ஸ் அன்ட் ஒடியோ ஒக்டிவிட்டி என்று ஒரு ஒப்ஷன் இருக்கும். அதை நீங்கள் stop செய்ய வேண்டும். நீங்கள் ஸ்டாப் என்று அதற்கு உத்தரவிட்டால், உங்களது பேச்சை google கேட்காது, கண்காணிக்கும். நீங்கள் லொகேஷனை எப்ஸையும் லொக் செய்து விட்டால்,, நீங்கள் எங்கு செல்கிறீர்கள்? என்பதை கண்காணித்து, அவர்கள் பின் தொடர மாட்டார்கள்.

ஸ்மார்ட் போன், செல்போனில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன? நிறுவனங்கள் என்னென்ன பணிகளை மேற்கொள்கிறார்கள்? என்பதை பற்றி தெளிவாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். பிறகு அவர்கள் வழங்கும் சேவை, உங்களுக்கு தேவையா? இல்லையா? என்பதில் நீங்கள் உறுதியாக தீர்மானிக்க வேண்டும். நீங்கள் இதை தெரிந்து கொள்ளாமல்.., அப்ளிகேஷனை பதிவிறக்கம் செய்வதால்தான் ஹேக்கர்ஸ் உங்களது செல்போனுக்குள் நுழைகிறார்கள்.

சைபர் செக்யூரிட்டி என்பது என்ன?

சைபர் செக்யூரிட்டி என்பது ஒரு நிறுவனத்தில் சைபர் கிரைம் குற்றங்கள் நடைபெறாமல் பாதுகாப்பது, ஒரு நிறுவனத்தில் வேலை செய்தவர்கள், செய்பவர்கள் மட்டுமல்லாமல் அந்த நிறுவனத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் அவர்களின் இணையத்திலோ அல்லது சர்வர்களிலோ சேகரித்து வைப்பது வழக்கம். அந்த சர்வரில் தாக்குதல் ஏற்படும் பொழுது... அது யார் மூலமாக நடைபெற்றது மற்றும் புதிதாக சர்வர் பொருத்தும் போது, அது பாதுகாப்பாக உள்ளதா? என்று ஆய்வு செய்வதுதான் சைபர் செக்யூரிட்டி அதாவது உங்களது ஆவணங்களை யாரும் திருடாமல் பாதுகாக்கும். அத்துடன் அதனை எவ்வாறு பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவேண்டும்? என்று ஆலோசனை வழங்குவதும் அதன் துணை பணி.

பொதுவாக ஒரு இணையத்தை அமைக்கும் பொழுது. அதற்கான கோடிங் (Coding) சரியாக இருக்க வேண்டும். இதை பலர் தற்போது செய்து வருகிறார்கள். சிலர் இணையத்தை வடிவமைத்து தருகிறார்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர, அதிலுள்ள கோடிங் எனப்படும் தொழில்நுட்பம் பாதுகாப்பாக உள்ளதா? என்று பார்ப்பதில்லை. அதனால் எந்த ஒரு இணையதள பக்கத்தை வடிவமைத்து உருவாக்குவது என்றாலும், அவை பாதுகாப்பாக அமைப்பது நம்முடைய பிரதான கடமை. ஏனெனில் ஒரு இணையத்தளத்தின் கடவுச்சொற்களை google மூலமாகவே எளிதாக கண்டறிய முடியும்.

உங்களுடைய இணைய பக்கமோ அல்லது சமூக வலைத்தளமும் பலவீனமாக இருந்தால் அல்லது உங்களுடைய இணைய பக்கத்தின் சேர்வரின் தாக்கம் குறைவாக இருந்தால் அதை பயன்படுத்தி கூகுள் மூலமாகவே கடவுச்சொற்கள் மற்றும் அனைத்து விடயங்களையும் துல்லியமாக கண்டறியலாம். இது நடைபெறாமல் தடுப்பதற்காக சிறிய அளவிலான பாதுகாப்பு அம்சங்களை உருவாக்கவேண்டும். அதை செய்ய தவறினால் நம்முடைய தரவுகள் அனைத்தையும் இழக்க நேரிடும்.

சைபர் குற்றத்தில் டி ஓ எஸ் மற்றும் டி டி ஓ எஸ் அட்டாக் என்று சொல்கிறார்களே அது குறித்து..?

DOS அட்டாக் என்றால் ( Denial Of service )என்றும், DDOS அட்டாக் என்றால் (Distribute Denial Of Service) என்றும் பொருள். அதாவது உங்களது இணையதளத்தை =இணையத்தை= இணையத் தொடர்பை ஹேக்கர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்றால் இதன் மூலமாக எளிதாக மேற்கொள்வார்கள். பொதுவாக காம்ப்யூட்டர் பொக்கெட் மூலமாகத்தான் பேசிக்கொள்ளும். அதாவது ஒரு கொம்ப்யூட்டரிலிருந்து நாம் மற்றொரு கணினிக்கு மின்னஞ்சல் அனுப்புவோம். அவ்வாறு அனுப்பப்படும் போது அது பொக்கெட் மூலமாகத்தான் பெற்றுக் கொள்ளும். இந்த பொக்கெட் மூலமாக உங்களின் சர்வரை செயலிழக்க செய்ய முடியும். அதாவது உங்களது மின்னஞ்சலில், உங்கள் கணினியில் வருவதற்கு 100 பொக்கெட் தேவைப்படும்.

அதற்கு பதில், நான் பத்து லட்சம் பொக்கெட் அனுப்புவேன். அந்த திறனை பெற்றுக் கொள்ளும் வசதி உங்களின் சர்வருக்கு இருக்காது. அப்போது அது மிகவும் தாமதமாக செயல்படும். இந்த தாமதத்தை தான் ஹேக்கர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வார்கள். இதற்குப் பெயர் தான் டி ஓ எஸ் இதை இப்பொழுது ஒவ்வொரு நாடுகளும் இடையே நடைபெறும் இணையத் தாக்குதல் என்றே சொல்லலாம்.

தனிப்பட்ட ஒரு நபரின் தகவல்களை சேகரிக்க அவரின் கைபேசி அல்லது கொம்ப்யூட்டருக்கு நான் வைரஸ் அனுப்ப வேண்டும். இந்த வைரஸ் ஒரு லிங்க் ஃபைலாக தான் வரும். அது உங்கள் கைபேசி மற்றும் கணினியை மொத்தமாகச் செயலிழக்கச் செய்துவிடும். இதில் நீங்கள் யார்? நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? யாருக்கு தகவல் அனுப்புகிறீர்கள்? யாரிடம் பேசுகிறீர்கள்? என்பது மட்டுமில்லாமல் உங்கள் செல்போனிலுள்ள கெமரா முதற்கொண்டு எம்மால் இங்கிருந்து இயக்கமுடியும். தனிப்பட்ட நபரை கண்காணிக்க அவரின் செல்போன் நம்பர் மற்றும் மின்னஞ்சல் தெரிந்தால் போதும். அவரின் மூலம் ஹேக் செய்ய முடியும். இதற்குப் பெயர் சோசியல் இன்ஜினியரிங் அதாவது ஏதாவது ஒரு சமூக வலைதளம் மூலம் ஒரு செய்தி அனுப்பும் போது அது என்ன என்று நீங்கள் கண்டிப்பாக பார்ப்பீர்கள். அந்த செய்திக்குள் ஒரு வைரஸ் சேர்த்து அனுப்புவார்கள். அது உங்கள் செல்போனில் அல்லது கணினியில் நீங்கள் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை, அவர்களுக்கு அப்படியே தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டும்.

இதற்கு உங்கள் செல்போனின் IMEI எண்கள் தேவையில்லை.

DOS அட்டாக் என்பது ஒரு தொழில் ரீதியான போட்டியாளரை நேரடியாக எதிர்கொள்வது. DDOS அட்டாக் என்பது தொழில்ரீதியான போட்டியாளரை, அதே அளவிற்கு வலிமை வாய்ந்த சக போட்டியாளர்களை கூட்டு சேர்ந்து, கூட்டணியாக எதிர்கொள்வது என்று எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.

இது குறித்த மேலதிக தகவல்களை தற்போதைய எந்த நாடு அல்லது எந்த அமைப்பு எதன் மீது இத்தகைய தாக்குதலை நடத்துகிறது என்பதையும், நடத்திக்கொண்டிருக்கிறதுஎன்பதையும் நீங்கள் இணையம் வழியாகவே அறிந்து கொள்ள இயலும்.

## டெக்னோகிராபிக் டெக்னிக்

தற்பொழுது கூடுதலாக தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக உங்களது வட்ஸ் அப்பில் ஒரு புகைப்படம் அனுப்புவேன்.

அதற்குள் இன்னொரு படம் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும்.

நீங்கள் இந்தப் புகைப்படத்தை ஓபன் செய்து பார்த்தவுடன் அதற்குப் பின்னால் வேலை நடக்கும். இதற்கு டெக்னோகிராபிக் டெக்னிக் என்று பெயர். இதன் மூலம் ஒருவர் எங்கிருக்கிறார் என்று கண்டறிய முடியும்.

அதுமட்டுமில்லாமல் நமக்கு தேவையான அனைத்து விடயங்களையும் நாம் இதில் செய்ய முடியும். அதாவது உங்களது தொடர்பில் உள்ள விபரங்கள், உங்களுக்கு வரும் குறுஞ்செய்திகள், whatsapp செய்திகள், உங்கள் போனில் உள்ள மைக் ஒன் செய்து என்ன பேசுகிறார் என்பதையும் கண்டறிய முடியும்.

அதுமட்டுமல்ல நீங்கள் என்ன எப்ஸைப் பார்க்கிறீர்கள் என்பதை கூட பார்க்க முடியும் .சொல்லப்போனால் உங்கள் போனை அவர்கள் தங்களிடத்திலிருந்து இயக்க முடியும். இதன் மூலம் தான் வங்கிக் கொள்ளை சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது.

## விர்ச்சுவல் கீபோர்ட்

இப்போது பலர் இணையத்தின் வழியாகத்தான் தான் தங்களின் வங்கி கணக்கினை இலத்திரனியல் பரிமாற்றம் செய்கிறார்கள்.

உங்கள் கணினியில் கீலாக்கர் என்ற சொஃப்ட்வேரை ஹேக்கர்கள் செலுத்துவார்கள். அதன் மூலம் நீங்கள் கீபோர்டில் என்ன டைப் செய்கிறீர்களோ அது அப்படியே அவர்களுடைய கணினியில் தெரியும். நீங்கள் வங்கி கணக்கினை இணையம் மூலம் பயன்படுத்தும்போது, அதில் யூசர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை டைப் செய்ய செய்ய அது என்ன என்பதை அவர்களால் அங்கிருந்தபடியே பார்வையிட முடியும். இதனால் தான் எல்லா வங்கி இணையத்திலும் விர்ச்சுவல் கீ போர்ட் வசதி இருக்கும். நாம் யாரும் அதை பயன்படுத்துவதில்லை. அதை பயன்படுத்தினால் மட்டுமே இதை தடுக்க முடியும்.

நாம் பயன்படுத்தும் இன்டர்நெட் பாதுகாப்பு கிடையாது. நாம் பயன்படுத்தும் பெரும்பாலான கொம்ப்யூட்டரில் ஆன்ட்டி வைரஸ் சொப்ட்வேர் தான் போட்டிருப்போம்.

ஆனால் அதில் எந்த பாதுகாப்பும் கிடையாது. இன்டர்நெட்டை பொறுத்தவரை பிரைவசி எதுவுமே கிடையாது. ஒருவர் நினைத்தால் மற்றவரின் தகவல்களை எளிதாக திருட முடியும். இது எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். என்னதான் தொழில்நுட்பம் வளர்ந்து இருந்தாலும், அதில் சின்னதாக ஒரு ஓட்டை இருக்கும். அதை கண்டுபிடிப்பதுதான் ஹேக்கர்களின் வேலை.

இந்த ஓட்டையை அடைக்க மற்றொரு வெர்ஷனை அப்டேட் செய்வார்கள். அதிலும் பிரச்சினை இருக்கும். இது தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். அதனால் தேவையில்லாத படங்கள் அல்லது மின்னஞ்சல் செய்திகளை டவுன்லோட் செய்யாமல், கைபேசியை பேசவும், உங்களுக்கு வரும் மின்னஞ்சல் செய்திகளை மட்டுமே பார்த்தால் ஓரளவு இதை கட்டுப்படுத்த முடியும்.




## ஹேக்கிங்


ஹேக்கிங்கைப் பொறுத்தவரை பல வகை உள்ளது. சிலர் இதை தொழிலாகவே செய்கிறார்கள். இது தினமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஃபேஸ்புக் செய்தியில் ஆரம்பித்து, சர்வதேச அளவில் இரண்டு நாடுகளுக்கிடையே இந்த இணைய தாக்குதல் நடந்து கொண்டுதான் இருக்கிறது. தேவையற்ற சொப்ட்வேர் அல்லது நமக்கு அறிமுகமில்லாத எண்களிலிருந்து வரும் செய்திகளை தவிர்த்துவிடுவது நல்லது. தொழில்நுட்பம் வளர்ந்து வருவது நல்ல விடயம் தான். அதே சமயம் அதை பாதுகாப்பாக செயல்பட வேண்டும். சைபர் கிரைம் நடந்துகொண்டுதானிருக்கும். நீங்கள் எப்படி பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.அதற்கான விடயங்களைப் பற்றி முழுவதுமாக தெரிந்து கொள்வது நல்லது.

பிட்காயின் எனப்படும் cryptocurrency விரைவில் சந்தை பயன்பாட்டிற்கு வரக்கூடும் என்று தொழில் துறையினர் கருதி வரும் நிலையில், ஹேக்கிங் செய்வதையும் தொழில் வாய்ப்பாக உருவாகுமா?

இன்றைய திகதியில் பல முன்னணி நிறுவனங்கள் ஹேக்கிங் செய்வது குறித்த பயிற்சியினை வழங்கி வருகின்றன. இதற்கான தொழில் வாய்ப்புகளும், பணி வாய்ப்புகளும் பிரகாசமாக உள்ளன. ஒவ்வொரு தனியார் மற்றும் முன்னணி நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களை சார்ந்த தரவுகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், போட்டி நிறுவனத்திடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணைய தாக்குதலை தடுத்து நிறுத்தி, தற்காத்துக் கொள்வதற்கும் இத்தகைய ஹேக்கர்கள் அவசியபடுகிறார்கள். தற்பொழுது ஒவ்வொரு நிறுவனமும் தங்களது தரவுகளை பாதுகாப்பதற்கான செக்யூரிட்டி கன்சல்டன்ட்டுகள் என்ற பணியிடத்தை உருவாக்கி, அதற்கு தகுதியான ஹேக்கர்களையும், ஹேக்கிங் தொழில்நுட்பத்தில் தேர்ச்சிப் பெற்றவர்களையும் நல்ல சம்பளத்தில் பணியமர்த்துகிறார்கள்.

சைபர் கிரைம் பிரிவில் பணியாற்றும் அனைத்து காவல்துறையினரும் சைபர் கிரைம் குறித்த அனைத்து விவரங்களும் துல்லியமாக தெரியும். ஆனால் அவர்கள் தகவல்களை திருடுவதில்லை. இணைய தாக்குதல் நடைபெற்றவுடன், எதன் வழியாக அந்த தாக்குதல் நடைபெற்றிருக்கும் என்பதனை அறிந்து கொள்ளவே அவர்கள் ஹேக்கிங் தொழில்நுட்பத்தை கற்கிறார்கள். இவர்கள் ஹாக்கிங் தொழில்நுட்பத்தை துல்லியமாக தெரிந்து கொண்டு எதிரிகள் இணைய தாக்குதலை தொடுக்காமல் தற்காத்து அதில் ஒரு நிறுவனத்தின் நேர் மறையான விடயங்களுக்காகப் பயன்படுத்துவார்கள்.

ஹேக்கிங் தொழில்நுட்பம் குறித்து முதல் இணையதள தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்து...?

குறிப்பிட்ட பிரபலமான வங்கியிலிருந்து பேசுகிறோம் என்று சொல்லி, உங்களது ஒன் டைம் பாஸ்வேர்டு அல்லது கடவுச்சொற்கள், கணக்கு எண் உள்ளிட்ட சில விவரங்களை கேட்டால், நான்காண்டுகளுக்கு முன்னர் கொடுத்துவிடுவோம். ஆனால் தற்போது இது குறித்த விழிப்புணர்வு இருப்பதால் இத்தகைய விவரங்களை யாரும் தருவதில்லை. அறிமுகமற்ற முகவரியில் இருந்து உங்களுக்கு வரும் மின்னஞ்சல்களை திறந்து பார்ப்பதில்லை என்பதையும் தற்போதுள்ள இணையதள தலைமுறையினர் தெரிந்து வைத்து இருக்கிறார்கள். ஏனெனில் உங்களது தேவை என்ன? உங்களது விருப்பம் என்ன? என்பதை கூகுள் வழியாக யார் வேண்டுமானாலும் அறிந்து கொள்ள இயலும். உதாரணத்திற்கு உங்களுக்கு பயணம் பிடிக்கும் என்றால்.. நான் இந்த பயண ஏற்பாட்டாளர் நிறுவனத்திலிருந்து பேசுகிறோம். உங்களுக்கு இத்தகைய சலுகைகளை வழங்க முன் வந்துள்ளோம். என்பது போன்ற மின்னஞ்சல்களை உங்களுக்கு அனுப்புவார்கள். இதனை தொடர்ந்து பல ஆண்டுகள் வரை அனுப்பிக்கொண்டே இருப்பார்கள். எப்போதோ ஒருமுறை நீங்கள் கிளிக் செய்தால் போதும். அவர்களது வலையில் நீங்கள் விழுந்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

உங்களிடத்தில் கைபேசி இருந்தால்.. அந்த கைபேசி ஹேக் செய்யப்பட்டால்... உடனடியாக என்ன செய்ய வேண்டும்? என்பது குறித்த விவரங்களை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நீங்கள் எப்பொழுது ஹேக்கிங் குறித்த விடயங்களை இணையத்தில் தேட தொடங்குகிறீர்களோ.. அந்த நிமிடத்தில் இருந்து உங்களது இணையதள தொடர்பு, இணையதள சேவை, மின்னஞ்சல், செல்போன் போன்றவை எப்போது வேண்டுமானாலும் ஹேக் செய்யப்படலாம். நீங்கள் ஏதேனும் சபலப்பட்டு, மனம் சஞ்சலப்பட்டு ஆபாச இணையதள பக்கத்திற்கு ஒரு முறை சென்றால் கூட... அவர்கள் உங்களது மடிக்கணினி அல்லது மேசைக் கணினியை ஹேக் செய்வதற்கு சாத்தியக் கூறுகள் அதிகம்.

உதாரணமாக ஒரு ஐபோனின் விலை 60000 என்று வைத்துக் கொள்வோம். அதை பத்தாயிரத்திற்கு தருகிறேன் என்று இணையத்தில் அறிவிப்பு வெளியாகும். உடனே எம்முடைய இளம் தலைமுறையினர், அது குறித்து விவரங்களை குறிப்பிட்ட பக்கத்திற்கு சென்று தேடுவார்கள். இதனை உணர்ந்த மோசடியாளர்கள், அடுத்தது அறிவிப்பையும் உடனடியாக வெளியிடுவார்கள். நீங்கள் பத்தாயிரத்தையும் உடனடியாக தர வேண்டும் என்ற அவசியமில்லை. முதலில் நான்காயிரம் ரூபாய், பிறகு நான்காயிரம் ரூபாய் பிறகு இரண்டாயிரம் ரூபாய் என தவணைமுறையில் செலுத்தலாம் என்பார்கள். இதற்கு விரும்பி 4 ஆயிரம் ரூபாய் அனுப்பியவுடன், உங்க கையில் செல்போன் கிடைக்கும் என்று ஆசையை தூண்டுவார்கள். உடனே மாணவர்கள் தங்களுடைய வங்கி கணக்கில் இருந்து 4 ஆயிரம் ரூபாவை அவர்களுடைய வங்கி கணக்கிற்கு இலத்திரனியல் பரிமாற்றம் மூலம் மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் உடனடியாக இவர்களது வங்கி கணக்கு எண் மற்றும் வங்கி இருப்பு ஆகியவற்றை தெரிந்து கொண்டு அதனை தற்காலிக கடவுச்சொற்கள் மூலமாக அவர்களுக்கே தெரியாமல் எடுத்துக் கொண்டு விடுவார்கள்.

முதலில் வழக்கினை பதிவு செய்ய வேண்டும். முதல் தகவல் அறிக்கையை காவல் துறையிடம் புகார் அளித்து பெற வேண்டும். காவல்துறையினர் இந்த புகாரை பதிவு செய்து. ஒரு பதிவெண்ணை வழங்குவார்கள். அதன் பிறகுதான் காவல்துறையினர் படிப்படியாக விசாரணையில் ஈடுபட்டு, இணையதள குற்றவாளிகளை கண்டறிந்து, அதற்குரிய நிவாரணத்தையும், இழப்பீட்டையும் நமக்கு பெற்றுத்தருவார்கள். இதற்கு போதிய கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

ஒருவேளை உங்களது கைப்பேசி ஹேக் செய்யப்பட்டிருந்தால் உடனடியாக அதனுடைய டேட்டாவை டவுன்லோட் செய்துவிட்டு, கைபேசியை பார்மெட் செய்து விட வேண்டும். மீண்டும் அதற்கு புதிய கடவுச் சொற்களை பதிவிட வேண்டும். பழைய கடவுச் சொற்களை பயன்படுத்தக் கூடாது. மின்னஞ்சலை புதிதாக மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனெனில் உங்களது மொபைல் ஃபார்மேட் செய்யப்படுவதை அவர்கள் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள்.

**சங்கர் ராஜ் சுப்ரமணியன்**
சைபர் க்ரைம் தொழில்நுட்ப நிபுணர்

சந்திப்பு **ஆர் ஜி**


For over 30 Reputable and well known bridal and formal wear boutique with consistent 5-star online ratings available for sale.




**30 வருடங்களாக ஸ்காபரோ மத்தியில் லாபகரமாக இயங்கிவரும் ரெக்ஸ்ரைல் விற்பனைக்குண்டு.**

for more info, please call Ragu Mahesu
Sales Representative
**Direct 416-450-6833**

Home Life Top Star Realty Inc., Brokerage
Independently Owned and Operated
209-9889 Markham Road Markham ON L6E 0B7
Not intended to solicit buyer or seller already under contract


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?

Super Visa 100% Refund if Visa Denied




போதுமான பாதுகாப்பே குடும்பத்தில்
நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான
பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா?
இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

உங்களுக்கு விரும்பிய காப்புறுதி
நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

திலீபன் இராமநாதன் BBM (Hons)
(Thileepan Ramanathan) Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 13 | 12 | 15 | 14 | 19 | 18 | 26 | 22 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 492 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 326 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 762 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 56 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 154 | 128 | 201 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 115 | 102 | 142 | 126 | 178 | 149 | 234 | 195 | 280 | 239 | 370 | 303 | 476 | 393 | 641 | 541 | 878 | 744 |

Non medical- Term & Permanent Products

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 41 | 64 | 53 | 92 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 389 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 36 | 64 | 51 | 113 | 83 | 197 | 134 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 48 | 92 | 67 | 147 | 104 | 243 | 164 | 398 | 257 | 675 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 101 | 72 | 165 | 112 | 268 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 91 | 230 | 152 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 98 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 92 | 78 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 124 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 164 | 223 | 181 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 584 |



Call me for your free consultation.

Life100
INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் கலாசார நிலையம் அமைப்பது தொடர்பான இரண்டாவது ஆலோசனை கூட்டம் நிகழ்வு @ Scarborough Civic Centre on Aug 18,2019.






கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளன ஒருநாள் குழிப் பந்தாட்டம் 2019












கனேடிய தமிழர் பேரவையின் 'தெரு விழா 2019' @ மார்க்கம் தெரு, ஆவணி 24,2019.

'Taste of தமிழ்' ஸ்கேபுரோ முற்றத்தில் நிகழ்வின் இசைவெள்ளத்தில் @ Morningside & Finch on Aug 10,2019





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









செல்வா வெற்றிவேல் அவர்களின் Homelife Future First Annual cricket Tournament @ Joyce Trimmer Park - City of Toronto. on aug 23,2019.






ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம், ரொறண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்கான 25,000.00 கனேடிய டொலர் நிதி வழங்கும் நிகழ்வுக்காக 'சங்கே முழங்கு' கலை நிகழ்வும், நிதி வழங்கும் நிகழ்வும் @ Canada Sri Ayyappan Hindu Temple Cultural Hall. on Aug 29,2019.

கனடியத் தமிழ் வானொலியின் ( CTR) நட்சத்திரத் விழா 2019 @Morningside & Finch on Aug 3i,2019.







'NEWTOWN PLAZA' Fun Fest @ 7393 Markham Rd on Aug 17,2019.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RE/MAX Community 2nd Annual Community BBO நிகழ்வில் @ 300 Rossland Road Ajax on Aug 11,2019.







## அற்புத நர்த்தனாலய நடனப் பள்ளி மாணவி செல்வி. Sathana Senthan. பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் @ City Playhouse Theatre on Aug 10,2019.











## கனடா ஐயப்பன் இந்து ஆலய வருடாந்த மாபெரும் ஜோதி விழா 2019 இரண்டாம் நாள் நிகழ்வில் @ Canada SriAyyapan Canada

## மதுரை முரளீதரனின் நெறியாள்கையில் Niro Dance Creations இன் "கர்ணா" நாட்டிய நாடக நிகழ்வில் @ Chinese Cultural Centre Of Greater Toronto on Aug 02,2019.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளன ஒன்றுக்கூடல் நிகழ்வு. Aug 14,2019



**Canada announces (Global Affairs Canada) up to $540,000 support thru IMHO Canada to improve gender equality for women and girls in the Northern and Eastern Provinces of Sri Lanka.**





## கனடா /நெடுந்தீவு மக்களின் வருடாந்த கோடைகால ஒன்றுகூடல்-2019 @ Morningside Park on Aug17,2019.






## "நண்பேன்டா" (FCIR ) கனடா அமைப்பினரின் நண்பர்களின் கோடைகால ஒன்றுகூடல் நிகழ்வில் @ 376 Taunton Rd Ajax on Aug, 2019.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு சொல், ஒரு சொல் தமிழில் இயம்பிக் காட்டமாட்டாயா?

ஈழத்தமிழர்கள் கனடிய மண்ணில் கால்பதித்து சுமார் 40 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. தொடக்கத்தில் சிறிய அளவினரே கனடா நாட்டிற்கு வந்திருந்தனர். அதனால் தாய் மொழியில் அவர்கள் அதிக கவனம் செலுத்தவில்லை. அதிக அளவில் தமிழர்கள் புலம் பெயர்ந்து சுமார் 30 வருடங்களுக்கு மேலாகி விட்டன. முதல் 10 வருட காலமும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த தமிழர்கள் 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின் அதிக அளவில் புலம் பெயர்ந்ததால் இனம் மொழி என்ற உணர்வுக்குள் தள்ளப்பட்டனர். தாயகத்தின் சூழ்நிலையும், அவர்கள் பட்ட அவலமும் புகுந்த மண்ணில் மொழி உணர்வை அவர்களுக்கு அதிகமாகவே ஊட்டியது. புலம் பெயர்ந்த தமிழர்களில் அதிகமானவர்கள் கனடா நாட்டிற்குத்தான் வந்திருந்தனர். இவர்களில் இனப்பற்றாளர்கள், மொழிப்பற்றாளர்கள், தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் குறிப்பாக முத்தமிழான இயல் இசை நாடகத்தில் ஈடுபாடு கொண்டவர்களும் அடங்குவர். ஒன்றாகவும், தனித்தனியாகவும் தமிழ் மொழியைப் புலம் பெயர்ந்த மண்ணில் தக்க வைக்க வேண்டும் என்ற விருப்போடு இவர்கள் செயற்பட்டார்கள். இதுவரை காலமும் தமிழ் ஊடகங்கள் மூலமும் கலை நிகழ்ச்சிகள் மூலமும் தமிழர்களிடையே தமிழ் மொழிதான் முன்னுரிமை பெற்றிருந்தது.

கல்விச் சபையில் கல்வி கற்பிக்கும் அனுபவம் இருப்பதால் எவ்வளவு ஆர்வத்தோடு பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வருகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. இதைவிட அந்தப் பிள்ளைகளின் தமிழர் என்ற அடையாளத்தை நிலை நிறுத்துவதற்காக பெற்றோர் படும்பாடு, அதாவது இந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக அவர்கள் செய்யும் தியாகம் அளப்பரியது. கடும் உழைப்புக்கு மத்தியில் அவர்கள் விரும்பினால் ஓய்வெடுக்கலாம், ஆனாலும் சனிக்கிழமை விடுமுறை நாளாக இருந்தாலும் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வருவதும், பின் வகுப்பு முடிந்ததும் அழைத்துச் செல்வதும் எவ்வளவு கடினமாக காரியம் என்பது எல்லோருக்கும் புரியும். போக்குவரத்துக் கஷ்டத்தால்பிள்ளைகளைப்படிப்பிக்காமல் விட்டவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும் அப்படிக் கஷ்டப்பட்டுப் படித்த தமிழ் பிள்ளைகள்தான் இன்று சமூகத்தில் பெயரும் புகழும் பெற்றுத் திகழ்கிறார்கள் என்பதை நினைக்கப் பெற்றோருக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் பெருமையாக இருக்கின்றது.

கடந்த 30 வருடங்களில் இந்த நாட்டில் தமிழ் மொழி வளர்ச்சியில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அவதானித்திருந்தேன். ஒரு ஆசிரியன் என்ற வகையிலும், ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்ததாலும் சில விடயங்களை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்பது பற்றியும் கல்விச்சபை அங்கத்தவர்களுடன் ஆலோசித்து இருக்கின்றேன். தமிழ் மொழி கற்கும் பிள்ளைகளில் சுமார் 3000 தமிழ் பிள்ளைகளுக்கு ஒவ்வொருவருடமும் தமிழ் மொழியில் பரீட்சை வைத்து அவர்களுக்குப் பரிசுகள் கொடுத்து ஆக்கமும் ஊக்கமும் கொடுத்திருக்கிறோம். கற்பித்தலில் சில மாற்றங்கள் தேவை எனக் கருதியதால் கல்விச் சபைக்கு விண்ணப்பித்தபோது, நடைமுறை காரணங்களால் அதை நிறைவேற்ற முடியாது என்று அவர்கள் கைவிரித்துவிட்டார்கள். ஆனாலும் எங்கள் முயற்சியைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறோம்.

தொடக்கத்தில் அனேகமான தமிழ் பிள்ளைகள் தமிழ் மொழியில் பேசவும், வாசிக்கவும், எழுதவும் தெரிந்தவர்களாக இருந்தார்கள். முதல் பத்து வருட காலத்தில் சிறிய தொகையினரான பிள்ளைகள் தமிழில் எழுதுவதை நிறுத்தி விட்டார்கள். தொடர்ந்து வந்த பத்து வருடகாலத்தில் சிலர் வாசிப்பதையும் நிறுத்தி விட்டார்கள். இப்போது தமிழில் பேசுவதையும் அலட்சியம் செய்கிறார்கள். சிலர் தங்கள் சுயநலத்திற்காகத் 'தமிழ் கனடியன்' என்ற பெயரை முன்வைத்து இந்த நாட்டிற்கு ஆங்கிலமே போதும் என்று மறைமுகமாகச் செயற்படுகின்றார்கள். காலம் கடந்து விடாமல், எங்கே தவறு நடந்தது, அதை எப்படி நிவர்த்தி செய்யலாம், தாய் மொழியை எப்படித் தக்க வைக்கலாம் என்பதைக் கண்டறிவதே இப்போது எமது அவசர தேவையாக இருக்கின்றது.

மாணவர்கள் வழக்கமாக எந்தவகுப்பில் படிக்கிறார்களோ அந்த தரத்தில்தான் தமிழ் மொழியையும் கற்க வேண்டும் என்பது மொழி அறிவைப் பொறுத்தவரையில் தவறான கொள்கையாகும். பல பிள்ளைகள் இந்தக் கொள்கையால் பின்னடைவை எதிர் கொள்கிறார்கள். மாணவர்களின் மொழி அறிவுக்கு ஏற்ப ஓரளவு வயது வித்தியாசம் பார்க்காமல் அவர்களைத் தரம் பிரிப்பதே இப்போது உடனடியாகச் செய்யக்கூடியது. அப்படி முடியாவிட்டாலும் விசேட வகுப்புகளை ஆரம்பித்து அவர்களின் மொழி அறிவுக்கு எற்ப கற்பித்தலை நடத்தலாம். பல தடவை அந்த தவற்றைச் சுட்டிக்காட்டினாலும்பொறுப்பானவர்கள் அதை ஏற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை.

சென்றவாரம் இரண்டு நிகழ்வுகளுக்குச் சென்றிருந்தேன். அழைப்பிதழ் வந்ததாலும் நேரடியாக தொலைபேசியில் அவர்கள் கேட்டுக் கொண்டதாலும் அந்த நிகழ்வுகளுக்குச் சென்றிருந்தேன். 'சதங்கையும் சங்கீதமும்' என்றதொரு நிகழ்வு, பரதநாட்டிய, தமிழ் இசையை வளர்ப்பதாக அந்தப் போட்டி நிகழ்வு அமைந்திருந்தது. அத்தனையும் இந்த மண்ணில் பிறந்த பிள்ளைகள். முதற்கட்டத் தெரிவாகப் பங்கு பற்றியவர்களில் திறமையானவர்களைத் தெரிவு செய்தார்கள். இசைப் போட்டியில் பக்திப்பாடல்கள், தாயகப்பாடல்கள் போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தார்கள். குறிப்பாகத் தமிழ் உச்சரிப்பில் தவறுகள் இருந்தால் அதை அந்தஇடத்தில்வைத்துசுட்டிக்காட்டாமல், தனித்தனியே ஒவ்வொருவரும் விட்ட தவறுகளை பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோர், ஆசிரியருக்கும் மனம் நோகாமல் தனித்தனியே எடுத்துச் சொன்னார்கள். பங்குபற்றிய பிள்ளைகளுக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார்கள்.

பிள்ளைகளை எப்படி ஊக்கப்படுத்தலாம் என்பதற்கு அது நல்லதொரு எடுத்துக் காட்டாக இருந்தது. போதிய நிதி வசதிகள் இல்லாவிட்டாலும் தன்னார்வத் தொண்டர்களான உண்மையான தமிழ் உணர்வு உள்ளவர்களின் துணையுடன் அந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதை, எங்கோ ஒரு மூலையில் தங்களால் முடிந்த அளவு தமிழ் வளர்க்கிறார்கள் என்பதை நினைக்கவே பெருமையாக இருந்தது. இன்றைய சூழலில் இது போன்ற நிகழ்வுகள்தான் எமது இனத்திற்கு இந்த மண்ணில் முகவரி ஒன்றைத் தரும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல அழகு தமிழில் அந்த நிகழ்ச்சியைக் கொண்டு நடத்திய சிறந்த பாடகியான அந்தச் சிறுமி என்னிடம் தமிழ் கற்றவர் என்பதில் எனக்குப் பெருமையாகவும் இருந்தது. அடுத்த தலைமுறையினர் தாய் மொழியாம் தமிழில் தெளிவாகக் கதைக்கும் போது அதைக் கேட்பதில் உள்ள மகிழ்ச்சி ஒரு தனி ரகம்!

நான் பங்கு பற்றிய இன்னுமொரு நிகழ்வு பரதநாட்டிய அரங்கேற்றம். அந்த மாணவியும் என்னிடம் தமிழ் கற்றவர். புதிய நல்ல விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வமானவர் மட்டுமல்ல, கடினமான உழைப்பாளியும் கூட என்பதைத் தமிழ் கற்பிக்கும் போதே தெரிந்து கொண்டேன். தனக்குக் கொடுத்த உருப்படிகளை நன்றாகவே பயிற்சி செய்து அரங்கேற்றம் செய்திருந்தார். ஆடும்போது உடலை மட்டுமல்ல, மனதையும் செம்மைப்படுத்துவது இந்த நடனக்கலைதான். இசைக் கலைஞர்கள் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டதால், அவரது கடின உழைப்புக்கான பலன் சபையோரின் பாராட்டுக்களாய் குவிந்தபோது மகிழ்ச்சியாக இருந்தது. வேற்று மொழிகளில் இரவல் வாங்கிப் பழகிப்போன எம்மினத்திற்குத் தமிழில் பாடல்களைத் தந்த மதுரை ஆர். முரளிதரனுக்குப் பாராட்டுக்கள்.

பேராசிரியர் சுதர்சன் துரையப்பா நிகழ்ச்சியை மிகவும் நன்றாக வழிநடத்தினார். மிக அழகான தமிழிலும் இளம் தலைமுறையினருக்காக ஆங்கிலத்திலும் விளக்கங்கள் தந்தார். சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த ஒரு அரங்கேற்றத்தில் சபையில் இருந்து யாரோ விசில் அடித்தபோது விருப்பமில்லாவிட்டால் சபையைக் குழப்பாமல் எழுந்து செல்லவது வரவேற்கத் தக்கது என்றார் சற்றுக் கோபத்துடன், இம்முறையும் மண்டபத்தில் யாரோ விசில் அடித்தார்கள், ஏச்சு வாங்கப் போகிறார்கள் என்று நினைத்தேன். ஒரு விரலாலா அல்லது இரண்டு விரலாலா விசில் அடித்தீங்க என்று சிரித்துக் கொண்டே கேட்டார். தனது தாடி நரைத்து விட்டது என்பதையும், யோகா படித்ததாகவும் அவரே சபையில் குறிப்பிட்டார். காலம் தந்த அனுபவங்கள்தானே மனசைப் பக்குவமடையச் செய்கின்றன.

நிகழ்ச்சி தொடங்கும்போது ஒலி ஒளிப் பதிவுகள் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். யாரும் அதை காதில் போட்டதாகத் தெரியவில்லை, ஆங்காங்கே செல்போனில் பதிவுகள் நடந்து கொண்டுதான் இருந்தன. எனது இருக்கைக்குப் பின்னால் இருந்த சிலர் எதற்கு கரவோசை எழுப்புகின்றோம் என்று தெரியாமல் கரவோசை எழுப்பினார்கள். ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந்த அவர்களில் சிலர் ஓவென்று சத்தமும் போட்டார்கள். குருவின் காலில் குனிந்து வணங்குவது ஆசீர்வாதம் வாங்குவதற்கே, அதற்கும் கைதட்ட வேண்டாம் என்று சுதர்சன் அவர்களுக்கு விளக்கம் தந்தார். எத்தனையோ அரங்கேற்றங்களுக்குச் சென்றிருக்கின்றேன், ஒரு சில நடன ஆசிரியைகளைத் தவிர மற்றவர்கள் தங்கள் திறமையைக் காட்டுவதாக நினைத்து எப்படியாவது வேற்று மொழிப் பாடல்களைப் புகுத்தி விடுவார்கள். சபையோரில் குறைந்தது 98 வீதமானவர்கள் அவர்களின் இனத்தவர்களாகவும், குடும்ப நண்பர்களாயும் தான் இருப்பார்கள். இதில் என்ன மகிழ்ச்சியோ தெரியாது. புரியாத பாடல் பிள்ளைக்கும் விளங்காது, சபையோரும் குழம்பிவிடுவார்கள், சில அரங்கேற்றங்களில் யாருக்காக இதைச் செய்கிறார்கள் என்பது இதுவரை புரியாத புதிராகவே இருக்கின்றது.

திரும்பி வரும்போது வண்டியில் இசைத்த ஓ.எஸ்.அருணின் பாடல் மனதைத் தொட்டு நின்றது. பாரதிதாசனின் 'துன்பம் நேர்கையில்' என்ற பாடல் தான் அது. ஆசிரியையின் குரல் வளம் நன்றாக இருந்தது, தமிழ் இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல், ஒரு சொல் தமிழில் இயம்பிக் காட்டமாட்டாயா? என்று அவரிடம் கேட்டிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றியது.

**குரு அரவிந்தன்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி இருந்தது யாழ் புத்தகத் திருவிழா?

"மக்கள் ஆதரவு வழங்குகிறார்கள்; புத்தக விற்பனையாளர்கள் அக்கறையாக இல்லை."

"வாசிப்புநோய்" இருக்கிறதா என்ற அபத்த வாசகங்கள் உலாவும் இந்த நாட்டிலே யாழ் மண்ணில் புத்தகத் திருவிழா என்ற செய்தியை கேட்டதுமே மகிழ்வாக இருந்தது எனக்கு.

மிக மிக சிறப்பாக விளம்பரப் படுத்தப்பட்ட இந்த நிகழ்வு சமூக வலைத் தளங்களில் "வெண்பா" புத்தகநிலைய அன்பர்களால் உருவாக்கப்பட்ட பேஸ்புக் நிகழ்வு பக்கத்தின் மூலமும் பெருமளவில் நாடு முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த விழா சிறப்பாக வெற்றி பெற வேண்டும், மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று இரண்டு தடவைகள் நான் இங்கே எழுதியிருக்கிறேன். இதுவரை நான்கு முறை அங்கே சென்று வந்துவிட்டேன். புத்தகங்களும் வாங்கியாச்சு.

இப்பொழுது பத்தியின் ஆரம்பத்தில் உள்ள கேள்வி தான் என்னை நோக்கி பாயும் தோட்டா.

புத்தகத்திருவிழா எப்படி இருந்தது?

நாடு முழுவதும் உள்ள பல்வேறு புத்தக நிலையங்களும் தங்களது அரங்குகளை அமைத்திருக்கும் நிலையில் மக்களும் மாணவர்களும் தமது பரிபூரண ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். புத்தகங்களும் பெருமளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. காலையில் இருந்து மாலை வரை சனக்கூட்டத்துக்கு பஞ்சம் இல்லை. நல்ல புத்தகங்களை சுமந்து நிற்கும் சில தமிழ் அரங்குகள் நிரம்பி வழிகிறது. சிங்கள புத்தக அரங்குகள் ஆங்கிலப் புத்தகங்களை பிரதானப்படுத்தியிருக்கிறது. அவற்றில் சில ஈழப்போர், புலிகள் தொடர்பான சிங்கள எழுத்தாளர்களின் ஆங்கில நூல்கள் மூலம் கவனம் ஈர்க்கிறது. சில அரங்குகள் சிறுவர்களை மையப் படுத்தி இயங்குகிறது. சரசவி புத்தகநிலையத்தை மருத்துவ மாணவர்கள் மொய்த்துக்கொண்டே இருக்கின்றனர். சில நிலையங்கள் இலையான் கலைத்தபடியும் இருக்கிறது.




அனேகஇந்தியதமிழ்எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். மொழிபெயர்ப்பு புத்தகங்களும் வரிசைகட்டி காத்திருக் கின்றன. அண்மைய நாட்களில் ஈழ எழுத்தாளர்களின் பிரபலமாக பேசப் பட்ட புத்தகங்களை காணவில்லை.

இந்த விழா புத்தகக் கண்காட்சி போல் இல்லாது புத்தக நிலையங்களின் கூட்டுச் சந்தை போல இருப்பது விழாவின் மிகப்பெரிய தோல்வி. மக்கள் குமிந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்வில் ஒழுங்கமைப்பு அலங்கோலங்களை பார்க்க தலையிடியுடன் கூடவே சத்தியும் சேர்ந்தே வருகிறது. புத்தகத் திருவிழாவிற்கான சந்தோஷ அலைகள் அங்கே நிச்சயமாக இல்லை.

புத்தக கண்காட்சி என்பது புத்தகங் களை வாங்க செல்லும் கடை அல்ல. புத்தகம் வாங்க வருபனுடன் சும்மா கூட வருபவனையும் புத்தகம் வாங்க வைப்பதற்கு பெயர் தான் புத்தக கண்காட்சி. இது சாத்தியமாவதற்கு புத்தகங்கள் அடுக்கப்பட்டிருக்கும் ஒழுங்கும் பார்வையாளர்களுக்கு வசதியான அளவு இடமும் மிக மிக முக்கியமானது. இந்த இரண்டும் அங்கு இல்லை. பார்வையாளர்கள் அதுவரை பெயரேயறியாத ஒரு புதிய புத்தகங்களை எடுத்து பிரித்து மேலோடிப்படித்து அதனை அவர்கள் வாங்கும் நிலை வரை கொண்டுவர வேண்டியது தான் புத்தகத்திருவிழா ஒழுங்கமைப்பதன் மையச்சரடு.




வெண்பா அரங்கில் அனேகமாக இலக்கிய வாசகர்கள், வரலாற்று பிரியர்கள் விரும்பும் அத்தனை புத்தகங் களையும் பெற்றுவிடலாம். ஆனால் அவர்களது அரங்கு மிக மிக சிறியது அதனுள் பத்து பேர் கூட முழுசா நிற்கமுடியாத நிலையில் எங்கே போய் புத்தகங்களை மேலோடிப்படித்து வாங்குவது? இதே இடவசதி பற்றாக்குறை அங்கே பல அரங்குகளின் பிரதான பிரச்சினை.

பூபாலசிங்கம் அரங்கில் இல்லாத புத்தகமேயில்லை. இருப்பதிலேயே பெரிய அரங்கும் அது தான். ஆனால் அங்கே நீங்கள் தேடும் புத்தகத்தை கண்டுபிடித்துவிட்டால் அந்த சாதனைக்காக உங்களுக்கு "நோபல்" பரிசே தரலாம். அங்கே நிற்கும் பணியாளரிடம் கேட்டு ஒரு புத்தகத்தை வாங்கினால் உண்டு, மற்றும் படி அங்கே புத்தகம் தேடுவதெல்லாம் சீமானின் "வாய்ப்பே இல்லை ராஜா" வகையறா தான். கடையில் உள்ள அலுமாரிகளை அப்படியே கொண்டுவந்து வைத்துவிட்டு குப்பைகளாக வகுப்பு பிரிக்காது அங்கும் இங்குமாக சிந்தியும் சிதறியும் சில இடங்களில் குவிக்கப்பட்டும் இருக்கும் புத்தகங்களை பார்க்கும் போதே புத்தகம் வாங்கும் ஆசையே போய்விடுகிறது.

அடுத்தது விலை. சும்மாவே புத்தகங்களில் விலையை கேட்டால் தலைசுற்றும். தள்ளுபடி என்ற பெயரில் மக்களை ஈர்ப்பது தான் புத்தகத்திருவிழாவின் இன்னொரு நோக்கம். ஆனால் இங்கே தள்ளுபடியே தள்ளாடுகிறது. இருபது சதவீத கழிவு பொதுவாக இருக்க சில அரங்குகள் தள்ளுபடி சதவீதத்தை குறைத்து வைத்திருக்கின்றன. வெண்பாவில் எல்லாம் பத்து சதவீதம் தான். ஒரே புத்தகம் வேறு வேறு அரங்குகளில் வேறுவேறு விலை. ஒழுங்கமைப்பு வாந்தி வர வைக்கிறது என்றால் வியாபார அரசியலும் சோதிக்கிறது.

இந்த சலிப்பினால் கீழே உள்ள புத்தகங்களில் பாதி மட்டுமே புத்தக திருவிழாவில் வாங்கியது. மீதி நல்லூரில் அமைக்கப்பட்டிருக்கும் பூபாலசிங்கம் புத்தகசாலையின் நேர்த்தியாக ஒழுங்கமைப்பில் நல்லவிலைக்கழிவுடன் சந்தோஷமாக வாங்கியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈகைத்திருநாள் (ஈத்) அல்லது நோன்புத்திருநாள் கொண்டாட்டங்களை நிர்மூலமாக்கி, ஜம்முகாஸ்மீர் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாழாக்கி, வழிவழியாக வந்த அரசியல்விழுமியங்களையும், உறுதி மொழியையும், ஒப்பந்தங்களையும் உதறியெறிந்துவிட்டு ஆகஸ்ட் 2 ம் திகதி காஸ்மீரிகளுக்கு கொடூர மாக விடிந்திருந்தது. காஸ்மீரின் சிறப்புச் சட்டமான 370 மற்றும் 35ஏ ஐ நீக்கி ஜம்மு காஸ்மீர் மற்றும் லடாக்கை யூனியன் பிரதேசங்களாக மோடியின் மதவெறி அரசு பிரகடனம் செய்துள்ளது. இந்தியா, சீனா, பாகிஸ்தான் என்று போட்டிபோட்டுக் கபளீகரம் செய்யப்பட்டுள்ள காஸ்மீரப்பகுதி ஏற்கனவே முத்தரப்பாலும் சின்னாபின்னாமாகி சிதையுண்டு கிடக்கின்றது. அதன் தொடர்ச்சியாக இந்தியப்பகுதிக் காஸ்மீரிகளின் அன்றாட வாழ்க்கையையை சிதைத் இராணுவத்தை முடுக்கிவிட்டுள்ள பிரதமர் மோடி அவர்கள் பாகிஸ்தான் நாட்டின் ஒரு மாநிலமாகத் திகழ்கிற பலுசிஸ்தான் மாநில மக்கள் தனித்துவ நாட்டிற்கான போராடடத்தை நிகழ்த்த வேண்டுமென்கிற விசித்திரமான உரை நிகழ்த்தியிருக்கின்றார். இவ்வாறுதான் தோழர்களே இந்தியா தன் வல்லாண்மையை தக்க வைக்க தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி தனக்கொரு நீதி பிறர்க்கொரு நீதி பேசி காலம் காலமாய் தன்னை நம்பியவர்களின் முதுகிலே குத்தியும், நம்பியவர்களை நட்டாற்றில் கைவிட்டும் வந்திருக்கின்றது.

இப்படித்தான் அமைதிகாக்கும் படை எனற போர்வையில் 1987 ல் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திட்ட ஒப்பந்தப்படி இலங்கையில் அமைதி ஏற்படுத்தவென இந்தியாவினால் அனுப்பப்பட்ட இராணுவம்







## இந்துப் பிராந்தியமெங்கணும் சதி வலை பின்னும் இந்திய இராணுவம் ....

# வல்வெட்டித்துறையிலிருந்து காஸ்மீர் வரை....

தெறிந்து இந்திய இராணுவம் கலகம் அடக்குதல் எனும் பெயரில் ஊரடங்கு உத்தரவு 144 ஐ பிறப்பித்து அங்குள்ள மக்களை வீட்டுக்காவல் எனும் சிறைப்படுத்தப் பட்ட வாழ்விற்குள் தள்ளியுள்ளது. அங்குள்ள சர்வதேச வணக்கத்தலங்கள் வியாபார நிலையங்கள் பாடசாலைகள் யாவும் மூடப்பட்டுள்ளது. தொலைத்தொடர்புச் சாதனங்கள் சமூக ஞீவலைத்தளங்கள் யாவும் முடக்கப்பட்டுள்ளன. ஜனநாயகம் என்பது இருண்ட அவசரகாலப் பிரகடனங்களுக்குள் மக்களை அழித்தொழிக்கும் சட்டங்களை நிறைவேற்றுதல் என்பதாக அர்த்தம் கொள்கின்ற பொழுது இது. இதுவரை தனித்துவமாக மிளிர்ந்த காஸ்மீரத்தில் தன் கொடூர ஈழத்தமிழருக்கு எமனாகிப் போயிற்று. ஈழத்தமிழரின் எந்தப்பிரச்சனையும் தீர்க்கமுனையாமல் பாராமுகமாக இந்திய இராணுவப் பிரசன்னம் இருந்தவேளை தான் புலிகளுடனான முறுகல் நிலை தோன்றுகின்றது. இக்காலப்பகுதியில்தான் தமிழர் நலனிற்காக 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் யாழ்ப்பாண நல்லூரில் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தார்.

உயிர்க்கொலை செய்யார் காந்திதேச கருணை சீலர்கள் என்று ஈழமக்கள் நம்பிய அமைதிப்படை அப்பாவிகள் மீது பெரும் போரை நடாத்தினார்கள். தமிழர் மாநிலமெங்கும் இரத்த பேராற்றிலும் தமிழர்களின் சதைக்குவியலிலும் தங்களின் வீர சமாதானத்தை எழுதி நின்றது அமைதிப்படை. போரைத்தடுக்க வந்தவர்களே போர் புரிந்த விசித்திரம் அது. ஐநா விதிகளை மதித்து ஈழத்திற்கு சமாதானம் கொண்டுவருவதாக சொல்லிவந்த காந்தீயவாதிகள் காண்டீபதாரிகளாக மாறி ஈழத்தை மற்றுமொரு வியட்னாமாக மாற்றினார்கள். வைத்தியசாலைகளை வதைக்கூடங்களாக்கினர். சமாதான விமானங்கள் அப்பாவிகளின் தலைகளில் குண்டுமழை பொழிந்தது. பாடசாலைகளை பிள்ளைகள் பிடிக்கின்ற முகாம்களாக மாற்றினார்கள். பெண்கள் வன் கொடுமைக்கு ஆளாக்கப் பட்டார்கள். கேட்பார் எவருமின்றி எந்நேரமும் எவர் வீட்டிலும் அவர்கள் புகுந்து கொல்வதற்கும், கொள்ளையடிப்பதற்குமான மயான பூமியாக அம்மண்ணை அவர்கள் மாற்றினார்கள். பற்றி எரியும் மனதோடும் வயிற்றோடும் இயலாமையோடு தவித்துப் போனார்கள் தமிழர்கள். கண்ணீர் விட்டு கதறி அழக்கூட அவர்களுக்கு தடை. ஈழத்தை தங்களுக்குக் கிடைத்த வியட்னாம் போலவே புரட்டி எடுத்தது இந்தியப்படை. 1989 ம் ஆண்டு ஆகஸ்ட் 2 ம் நாள் வல்வெட்டித்துறையிலிருக்கும் ஊரிக்காடு, பொலிகண்டி இராணுவ முகாம்களிலிருந்து புலிகளை அழிக்கவென புறப்பட்ட பெரும் படை ஒன்றுமறியாத அப்பாவிகள் மீது போர்தொடுத்தது. ஆகஸ்ட் 2, 3, 4ம் திகதிகளில் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துவிட்டு கொடூர வெறியாட்டம் புரிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிப்படை. வல்வெட்டித் துறையிலிருந்து யாரும் வெளியேறவோ அல்லது உள்ளே வரமுடியாமல் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்திருந்த அந்த கோர வெறியாட்டம் தமிழர்களின் வரலாற்றில் இந்திய இராணுவம் ஏற்படுத்திய "மைலாய் "ப் படுகொலை என்று வர்ணிக்கப்படுகிறது. அந்தப் பெரு அழிப்பில் 63 பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், உயிரோடு எரித்தும் கொடூரமாகக் கொல்லப் பட்டிருந்தார்கள் 100ற்கு மேலானாவர்கள் படுகாய மடைந்திருந்தார்கள். 173 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன 45 கடைகள் சூறையாடப்பட்டபின் முற்றிலுமாக எரிந்து கருகின மக்களின் வாழ்வாதாரமாக இருந்த 176 மீன் பிடிவள்ளங்கள் எரியூட்டித் தகர்த்தப்பட்டது. மக்களின் இறுதி நம்பிக்கையாய்த்திகழ்ந்த சிவன் கோயில், முத்துமாரியம்மன் கோயில், கப்பலுடையவர் கோயில், ஆதி கோயிலென அத்தனை வணக்கத்தலங்களும் நாசமாக் கப்பட்டது.

இறந்தவர்களின் சடலங்களை எடுத்து அடக்கம் செய்யக்கூட இந்திய இராணுவம் அனுமதிக்கவில்லை. செய்தி ஊடகங்களும் ஊடகவிலாளர்களும் வாய்பொத்தி இருந்தார்கள். வியட்னாம் பெரும்போரில் அமெரிக்கப்படைகள் செய்த அட்டூழியங்களை கொலைகளை மனச்சாட்சியுள்ள அமெரிக்கர் சிலர் கேள்விக்குள்ளாக்கி கிளர்ச்சி நாடாத்தினார்கள் அவர்களது கிளர்ச்சி அமெரிக்க இராணுவத்தின் பல இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய ஏதுவாக இருந்தது. ஆனால் ஈழத்தில் இந்திய இராணுவப் பேய்கள் நிகழ்த்திய இத்தகு மிகப்பெரிய கொலைகளுக்கும் வெறியாட்டத்திற்கும் இன்றுவரை எந்த இராணுவத்தான் மேலும் வழக்கு பதிவாகவில்லை. தண்டிக்கப் படவில்லை அது குற்றமென்று கூட உலக சமாதானவாதிகள் ஒப்புக்கொண்டதையோ, அல்லது அது தொடர்பில் கவலை தெரிவித்ததையோ நாமறியவில்லை.

எனக்குத்தெரிந்த இந்தியாவின் தமிழகத்து முக்கிய எழுத்தாளர்கள் கூட அமைதிப்படை பெரும் அக்கிரமம் எதையும்ஈழ மண்ணில் நிகழ்த்தவில்லை என்று அன்று பதிவு செய்தார்கள். சீக்கியபடுகொலைகளுக்காக சீக்கிய மக்களிடம் மன்னிப்புக் கோரி பிரிவினை தூண்டிய வீரன் குரு கோவிந்த் சிங்கிற்காய் முத்திரை வெளியிடுகின்ற நரேந்திரமோடி மற்றும் இந்தியாவின் அமிர்தசரஸில் 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 இல் (ஜாலியன்வாலாபாக்) படுகொலை என வர்ணிக்கப்படும் ஆங்கிலேயரின் கொடூர படுகொலைகளுக்காக ஏப்ரல் 2019 ல் படுகொலை நடந்து நூறு ஆண்டுகளிற்குப் பிறகாவது பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரீசாமே வருத்தம் தெரிவித்துள்ளார். ஆனால் தன் நாட்டின் இராணுவத்தால் சிதைக்கப்பட்ட ஈழ தேசத்தவருக்காய் மோடி எந்த வார்த்தையும் இதுவரை பேசவில்லை.மாறாக30 ஆண்டுகளுக்கு பின்னும் வல்வைப் படுகொலைகளை இன்று காஸ்மீரத்தில் நிகழ்த்தி மகிழ்கிறது இந்தியா.

குற்றம்புரிந்தவர்கள் காலம் கடந்து நாகரிகமாக மன்னிப்புக் கேட்கிற காலம் இது. ஆனால் இந்திய இலங்கை இராணுவங்களிடம் அந்த நாகரிகங்கள் இல்லை. இறந்தவர்களை நினைவு கூர்வது கூட கொடிய குற்றம் என்பதாக அச்சுறுத்தல் செய்யப்படுகிற காலமிது. அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி எல்லோரும் பாராமுகமாக இருந்த இந்த காலகட்டத்தில்தான் வல்வை மண்ணின் மைந்தரும், கல்லூரி அதிபரும், முன்னாள் வல்வை பிரசைகள் குழு உறுப்பினருமான மதிப்பிற்குரிய ந. அனந்தராஜ் அவர்கள் பலத்த சிரமங்களுக்குஇடையே வல்வைப் படுகொலைகளின் சத்திய பிராமண வாக்குமூலங்களையும், சம்பவங் களையும் ஆவணப்படுத்தப்பட்ட சாட்சியாகவும், சத்தியமாகவும் ஆங்கிலத்திலும் தமிழிலும் "வல்வைப் படுகொலைகள்" ('Massaccre at Valvettiturai 'INDIA'S MYLAI") என்கின்ற ஆவண வெளியீடாக வெளியிட்டு உலகநாடுகளின் கவனத்தை ஈர்க்கவைத்தார்.

இந்திய இராணுவம் செய்த வல்வையின் இனச்சுத்திகரிப்பை அன்றே இனம் காட்டி நின்ற இனமானப்பெருமகனார் அவர். இனச்சுத்தீ கரிப்பிற் கும், இனஅழிப்பிற்கும் இனப் படுகொலைக்கு எதிராக அவர் ஆவணப்படுத்திய அவ்வெளியீடு களால் அவர் மிகுந்த சிரமங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளா னார். அவர் எழுதிய அந்த ஆவணப் பதிவிற்கான அணிந்துரையை இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் அவர்கள் எழுதியிருந்தார்.

அவரின் முன்னுரையில் வல்வைப் படுகொலைகளை தென் வியட்னாமின் அதியுச்ச கோரக் கொலைகள் நடந்த மைலாய் கொலைகளுக்கு இணையானது என்று தன் மனச்சாட்சியின் பதிவாக உருக்கமாகப் பதிவாக்கியிருந்தார். அவரும் இன்று நம்மிடையே இல்லை. இந்திய இராணுவத்தின் அடவடித்தனங்களை அங்கீகரித்த உலக நாடுகளின் முகத்தில் கரிபூசி எழுந்த ஆவணம் இது. பாதுகாப்பு வேலியே பயிர்களை அழித்த வரலாற்றைப் பேசியிருக்கிற ஆவணம் இது. ஈழ தேசிய போராட்ட வாரலாற்றில் பெரும் ஆவணப்படுத்தலாக அன்று கருத்தப்பட்ட இதன் பதிப்பானது 30 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் மறுபதிப்பாகியுள்ளது என்கின்ற செய்தியும் அதனை ஆவண ஒளிப்படமாக தயாரித்துள்ளார்கள் என்கின்ற செய்தியும், எம் வரலாற்றை அறிய முனைகின்ற எம் இளையவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

வரலாறும், ஆவணமும் கடந்தகால நிகழ்வை மட்டுமன்றி நமக்கு, நம் வழி வழி வந்த வாழ்வை, சமூக மேம்பாட்டை, ஒழுங்கமைப்பைக் கற்பிப்பது. ஆனால் இப்புவியில் பெரும்பாலான வரலாறுகள் வலியவனின் வரலாறே ஒட்டுமொத்த மனிதர்களின் வரலாறு என்பதாக திரிக்கப்பட்டிருக்கிறது. இனி பல முகங்களும் பலநாக்குகளும் பொருந்திய இந்தியா காஸ்மீரின் வரலாற்றை எப்படி எழுதப்போகிறது???

**மா.சித்திவினாயகம்** (Dip in Journalism)


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில் மிகவும் விரும்பிப் பார்த்த திரைப்படம் நேர்கொண்ட பார்வை. நவீன பெண்கள் எதிர்கொள்ள நேரிடும் பாலியல் சிக்கல்களை இப்படம் வெவ்வேறு கோணங்களில் ஆழமாக அலசியுள்ளது. பெண் வெளிப்படுத்தும் 'மறுப்பை', ஆண் எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும், 'ஒப்புதல்' (consent) என்பதை, எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது குறித்த தெளிவை, இந்தத் திரைப்படம் அழுத்தம் திருத்தமாகப் பேசுகிறது.

ஒரு பெண் 'வேண்டாம்' என்று தெரிவிப்பதைப் புரிந்துகொள்ளும் நுண்ணுணர்வுடன் ஆண் வளர்க்கப் படுவதில்லை.

பெண் தனது மறுப்பை வெளிப்படுத்தச் செய்யும் அத்தனை செயல்களையும், அவள் பாசாங்கு செய்வதாகத் தவறுதலாகப் புரிந்துகொள்வதுதான் பொதுவாகவே ஆண்களின் இயல்பு. அப்படிப் புரிந்து கொள்ளும்படியாகத்தான் அவர்கள் வளர்க்கப்படுகின்றார்கள். 'பெண் மனம் ஆழம்', 'பெண் முரண்களின் மூட்டை' என்றெல்லாம் காலங்காலமாகப் பெண்ணைப் புரிந்துகொள்ள மறுக்கும் ஆண் மய்யச் சமூகமானது, பெண்ணைப் புரிந்து கொள்ள முடியாத புதிராகவே சித்திரித்துப் பழகிவிட்டது.

'பெண்ணின் மௌனம் சம்மதம்" "பெண் இல்லை என்று சொன்னால், ஆமாம் என்று அர்த்தம்', 'வேணாம் என்று சொன்னால், வேண்டும் என்று அர்த்தம்' இப்படி முட்டாள்தனமான கற்பிதங்கள் வேறு. இந்தக் கற்பிதங்களைத் தான் இத்தனை காலம் தமிழ் சினிமாக்களும் பிதற்றிக்கொண்டிருந்தன. இவற்றுக்கு நடுவே, "ஒரு பெண் 'நோ' என்று சொன்னால், அதற்கு அர்த்தம் 'நோ'தான்" என்று அஜித் போன்றவணிகரீதியானபெருவெற்றிகண்ட "மாஸ்" ஹீரோவிடமிருந்து வசனம் வருவதென்பது தமிழ்ச் சினிமா பாவ விமோசனம் தேடும் அற்புதத் தருணம் என்றே கொள்ளலாம்.

சொல்லப்போனால், பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண் களுக்கு இந்திய சினிமா அவ்வப்போது குரல் கொடுத்துவந்திருக்கிறது. ஆனால், பாலியல் ஒப்புதல்/மறுப்பு என்ற தளத்தில் இந்திய வெகுஜனத் திரைப்பட உலகிலிருந்து ஒலித்த முதல் குரல், 2016இல் வெளியான 'பிங்க்' என்ற இந்தித் திரைப்படம். அதன் தமிழ் மறுஉருவாக்கமாக வெளிவந்த 'நேர்கொண்ட பார்வை' மூலக் கதையின் அடர்த்தி குறையாமல் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டிருப்பது தமிழ்ச் சினிமாவில் நிகழ்ந்திருக்கும் புதிய திறப்பு. முன்பின் தெரியாத பெண், தோழி, காதலி, பாலியல் தொழிலாளி ஏன் மனைவியே ஆனாலும், ஒரு பெண் 'நோ' என்று சொன்னால், அதற்கு அர்த்தம் 'நோ'தான் என்பதை சமூகத்துக்கான திரைக்கதை என்றே கொண்டாடலாம்.

உடை, சமூக அந்தஸ்து, சம்பந்தப்பட்ட ஆணும் பெண்ணும் சந்தித்துக்கொள்ளும் இடம், தோழனுடன் செல்லுதல், முந்தைய பாலியல் உறவுநிலை இவற்றில் எதை வைத்தும் ஒரு பெண் பாலியல் உறவுக்கு உடன்படத் தயாராக இருப்பதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. நவீன பெண்களுக்கு இப்படியான சிக்கல் என்றால், மறுமுனையில் 'குடும்பப் பெண்' என்ற சட்டகத்துக்குள் திணிக்கப்படும் பெண்கள் தங்களுடைய பாலியல் விருப்பத்தை ஒருபோதும் வெளிப்படுத்த மாட்டார்கள்.

ஆகையால், அவர்கள் 'வேண்டும்' என்பதை 'வேண்டாம்' என்பதன் மூலமாகத்தான் வெளிப்படுத்துவார்கள் என்று நம்பப்படுகிறது. ஆக, ஒருபுறம் எதையுமே சொல்லவில்லை என்றாலும் நடை, உடை, பாவனை மூலமாகப் பாலியல் உறவுக்குப் பச்சைக்கொடி காட்டும் நவீனப் பெண். மறுபுறம், 'வேண்டாம்' என்று சொல்வதன் மூலமாக 'வேண்டும்' என்று மறைமுகமாகச் சுட்டிக்காட்டும் பாரம்பரியப் பெண். இந்த இரண்டு வகை பெண்கள் மட்டுமேஇருப்பதாகத்தான் ஆண் மய்ய சமூகம் புரிந்துகொண்டிருக்கிறது. ஆனால், பெண்ணின் பாலியல் ஒப்புதலைச் செயல், நடத்தை மூலமாகப் புரிந்துகொள்ள ஆண்கள் பழக வேண்டியுள்ளதை நேர்கொண்ட பார்வை பதிவு செய்திருக்கிறது.

இதில் நடத்தை என்பது மனதளவில் தான் தயார் என்பதை விருப்பமாக வெளிப்படுத்துவது. செயல்வழியாக ஒப்புதலை வெளிப்படுத்துவது என்பது 'தலையசைத்தல்', 'ஓகே', 'சரி' என்ற சைகை, வார்த்தைகளில் வெளிப்படலாம். சில நெருக்கடியான சூழலில் 'சரி' என்று சொல்வதுகூட சம்மதம் ஆகிவிடாது. அதேபோல, ஒப்புதலோடு தொடங்கும் செயல் ஒருகட்டத்தில் அசௌகரியமாக மாற விலகிப்போகக்கூடும். ஆக, ஒப்புதலாக இருப்பதுகூட வேறுகட்டத்தில் மறுப்பாக மாறலாம். இவை எல்லாவற்றையும் சம்பந்தப்பட்ட இருவர் பரஸ்பரம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். சில சந்தர்ப்பங்களில் நாகரீகம் கருதி பெண் "நோ" என்று நேரடியாகச் சொல்வதற்குப் பதில் வேறு வழிகளில் வெளிப்படுத்தவும் முடியும்.

பெண்ணுக்கான சுதந்திரத்தின் எல்லை என்பதையே ஆண் மய்ய சமூகம் இன்னும் தீர்மானித்து முடிக்கவில்லை. பாலியல் கல்விக்கு இன்னும் ஆதரவான நிலை உருவாகவில்லை. இப்படி எல்லாமே இல்லை என்றிருக்கும் சமூக அமைப்பைக் கேள்விக்குட்படுத்தி, செவிட்டில் அடித்துச் சிந்திக்க வைக்கும் சினிமாக்கள் அவ்வப்போதுதான் வருகின்றன. பெண்ணின் எல்லா எல்லைகளையும் தீர்மானிப்பவர்களாகத் தங்களையே வலிந்து நிறுத்திக் கொள்வதையே ஆணியம் விரும்புகின்றது. பெண்ணின் செயல்களையும், அவள் பேசுகின்ற பேசாத சொற்களுக்குமான அகராதிகளையும் சுமந்து திரிகின்ற ஆண்கள், பெண்ணின் மௌனத்தைச் சம்மதமாகப் பாவித்துக்கொள்ளுதல், மறுப்பையே ஏற்பாகக் கற்பனை செய்துகொள்ளுதல் ஆகிய கற்பனைகள் இனியேனும் கலையவேண்டும்.

இதற்கு அப்பால் சென்று சிந்திப்போமென்றால், நம் பிள்ளைகளுக்கு "நோ" சொல்வதற்குக் கற்றுத் தருவதும் இந்தக் காலத் தேவைகளில் ஒன்று என்பது புரியும். நல்ல தொடுகை, கெட்ட தொடுகை பற்றி நம் பிள்ளைகளுக்குக் குழந்தைப் பராயத்தில் சொல்லித்தரவேண்டும் என்பதில் பெரும்பாலான பெற்றோர்கள் உடன்படுகின்ற ஆரோக்கியமான சூழல் உருவாகி வருகின்றது. குழந்தைகளைப் பாலியல் வன்புணர்வுகளிலிருந்து காப்பாற்ற வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவது கடமை என்று கருதுகின்ற எந்தவொரு பெற்றோரும் குழந்தைகளுக்குப் பாலியல் கல்வி புகட்டுவதை மறுக்கவே மாட்டார்கள். பாலியல் கல்வி என்றால் அது புணர்தல் பற்றியது, ஆணுறை பாவிப்பதையும் கருத்தடை மாத்திரை எடுக்கவும் சொல்லித் தருவது என்று முட்டாள்தனமாகப் புரிந்து கொண்டு, பாலியல் கல்வியையும் குடும்பக் கட்டுப்பாட்டையும் குழப்பித் திரியும் அரைவேக்காடுகள்தான் பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை இணைப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றன.

தன்னில் படும் தொடுகை "கெட்டது" கெட்ட நோக்கத்துடனானது என்பதைச் சொல்லித் தராமல், ஒரு பிள்ளை எப்படித் தெரிந்துகொள்ளும்? கெட்ட தொடுகையின் விளைவுகள் தெரியாமல் எப்படி ஒரு குழந்தை அதனை மறுக்கும்? தன்னைத் தொடும் விரல்களும், தன்னில் விழும் பார்வையும் கெட்டது கெட்ட நோக்கத்துடனானது என்று உணரும் மறு நொடியே "நோ" என்ற மறுப்பை உரத்தோ, உரத்துச் சொல்லாமலோ வெளிப்படுத்திவிட்டுக் கடந்துவரப் பிள்ளைகளுக்குக் கற்றுத்தருவது காலத்தின் தேவையாயிருக்கிறது.

"நோ" என்பதை "நோ" என்று நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல உறுதியாகச் சொல்வதுதான் பெண்ணுக்கு அழகு. மௌனமாக இருந்து ஆணே தீர்மானித்துக் கொள்ளட்டும் என்ற காவியக் கால நிலையிலிருந்து நம் காலத்தை மீட்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அம்பாறை திருமலை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 35 பாடசாலைகளில் பிரத்தியேக வகுப்புகளையும் 44 தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடன் நடத்தி வருகின்றோம்.
- 22 மருத்துவ முகாம்களைநடத்தி பல்துறைசார் நிபுணர்கள் மூலம் சமூக முன்னேற்றத்திற்கான கலந்துரையாடலையும் 150 பேருக்கு இலவச Cataract surgery யும் நடத்தியுள்ளோம்.
- திருமலை உப்பூறல் சிவசக்தி பாடசாலைக்கு குடிநீர்வழங்கி பள்ளிக்குடியிருப்பு சின்னத்தளவாய் வாகநேரி போன்ற கிராமங்களில் தண்ணீர் கொள்கலன்களும் வழங்கியுள்ளோம்.
- பட்டிப்பளை பிரதேசத்தின் விடுதிக்கல், 40வட்டை, மாவடிமுன்மாரி, கச்சக்கொடி கிராமங்களை சேர்ந்த 219 பிள்ளைகளுக்கு சீருடையும் பஜனை வழிபாட்டுக்குரிய இசை கருவிகளும் அரசடித்தீவு கிராமத்திற்கும் வழங்கியுள்ளோம்.
- "வாசம்" என்னும் ஊதுபத்தி சிறுதொழிற்சாலை அமைத்து அதன் மூலம் வேலைவாயப்பினை வழங்கியுள்ளோம்.
- தீரணியம் உளவளம் குறைந்த மாணவர்களின் குறிப்பிடத்தக்க தேவைகளுக்கும் உதவி வருகின்றோம்.
- பெண்கள் வலுவூட்டும் திட்டத்திற்கான "WEP" சுயதொழில் திட்டத்துடன் மருத்துவதுறையில் பெண்களுக்கான வேலையினை பெறக்கூடிய பயிற்சி வழங்கவுள்ளோம்.
- எம் இனத்தின் இருப்பிற்கும் அவர்களின் மேன்பாட்டிற்கும் உதவும் அத்தனை உள்ளங்களுக்கும் அதனை முன்னெடுத்து செயற்படுத்த தங்கள் நேரத்தை அர்ப்பணித்து எமதுசமூகத்தை சிறப்பாக கட்டி எழுப்பஉதவும் தொண்டர்களான களப்பணியாளர்களுக்கும் எமது நன்றி.

Sponsored by:

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS

WE OFFER SERVICES IN:

Real Estate | Corporate Law | Litigation

10 Milner Business Court, Suite 210 Toronto, ON M1B 3C6
416.321.1100 | info@navawilson.law
416 321 1107 | www.navawilson.law

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகம் OUR SOCIETY

## தமிழர் மேன்பாட்டிற்கான ஒன்றியம் - கனடா

## TAMILS' DEVELOPMENT ASSOCIATION - CANADA

REGISTERED NPO#1989878

**தமிழர் மேன்பாட்டிற்கான இலாப நோக்கற்ற, அரசியல் சார்பற்ற மனிதாபிமான அமைப்பு.**
**NON PROFITABLE, NON POLITICAL, HUMANITARIAN BETTERMENT FOR TAMILS**

நலிவுற்ற கிராமங்களில் சமூகபொருளாதார, கல்வி அபிவிருத்திக்கான
எமது சமூகத்தின் பயணம்.

கிழக்கிலங்கையில் தமிழினம் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் அரசியல்வாதிகளாலும் அரசஅதிகாரிகளாலும் கைவிடப்பட்டதனை சாதகமாகப் பயன்படுத்தி எமது கல்வி, வேலைவாய்ப்பு, நிலம் என்பனவற்றை அடாத்தாக தமதாக்கி கலாசார சீரழிவினை ஏற்படுத்திவருகின்றனர்.

இதனை தடுத்து எமது மண்ணையும் மக்களையும் காப்பாற்றும் நோக்கில் 2016இல் கிழக்கில் வாழும் பல்துறைசார் தமிழ்க்கல்விமான்களால் உருவானதே "எமதுசமூகம்".

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, கல்குடா மற்றும் கனடா, லண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் எமதுசமூகம் இயங்கி வருகின்றது. மலையகம் மன்னார் கிளிநொச்சிக்கும் எமது சேவையினை விரிவு படுத்தவுள்ளோம்.

எமது திட்டங்களை முன்னெடுக்க நிதியுதவியவர்களை கௌரவித்து 2018 March முலாவது "Appreciation Night" ரொரன்ரோவில் இடம்பெற்றது. இவ்வருடம் 2வது நிகழ்வு எதிர்வரும் November 2nd 2019, சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை வெற்றியாகவும் சிறப்பாகவும் நடத்துவதற்கு உங்களை நாம் நட்புடன் அழைக்கின்றோம்.

**MUSIC, DANCE, MOUTH WATERING DELICIOUS FOOD AND MORE FUN!!!**

**SATURDAY, NOVEMBER, 2nd 2019 @ 6:00 PM**

GRAND CINNAMAN BANQUET HALL 3895, McNicoll Ave. MARKHAM, ON. M1X 1E7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் 25 மாவட்டங்களிலும் கிளிநொச்சி மாவட்டம் தான் அதிகமாக வறுமையால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக இருக்கின்றது என்பது வெறும் பொய் அந்த தகவல் பிழை. ஏனெனில் அண்மையில் நடந்தசம்பவம் ஒன்றைஇதற்காக சுட்டிக்காட்டுகிறேன்.

கடந்தவாரம் ஒரு நாள் காலை எனது தோட்டத்தில் வேலை செய்வதற்காக ஆட்களை பிடிப்பதற்கு காலை 6. 30 தொடக்கம் 9.00 மணி வரை அலைந்தேன். 18 பேரிடம் வேலைக்கு வர முடியுமா என விசாரித்தேன். 18 பேரில் ஒருவர் கூட வேலைக்கு வர சம்மதிக்கவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் வேலைக்கு வர முடியாது என்பதற்கான பல்வேறு காரணங்களை கூறினர். ஒருவர் சொன்னார் தூரத்திற்கு வேலைக்கு வரமாட்டேன் என்றார். இன்னொருவர் திருவையாறுக்கு வேலைக்கு வரமாட்டேன் என்றார். இன்னும் ஒருவர் தோட்ட வேலைக்கா என நமட்டுச்சிரிப்போடு சொன்னார் தோட்ட வேலைக்கு வந்தால் அது கௌரவம் இல்லையாம் ஊருக்குள்ள கூலி வேலை என்று சொல்வார்களாம்.

இன்னும் இரண்டு பேர் ஏதாவது வேலை கிடைக்கும் என்று வைரவர் கோயில் மதிலில் உட்கார்ந்திருந்தனர் அவர்களிடம் கேட்டபோது அவர்களின் விளக்கம் சற்று வித்தியாசமாக இருந்தது. “நாங்கள் தோட்ட வேலைக்கு போக மாட்டம். கட்டிடப்பொருட்கள் ஏற்றி இறக்க அல்லது யாராவது வீடு மாறுகின்றவர்களுக்கு பொருட்கள் ஏற்றி இறக்க இப்படியான வேலைகளக்குத்தான் போவோம். தோட்டத்தில நாள் முழுக்க நிண்டு சாகிறத விட இரண்டு மணித்தியாலத்தில் வேற வேலை செய்து அதே சம்பளத்தை உழைச்சிருவம்“ என்றார்கள். இப்படியே ஒவ்வொருவரும் விளக்கமளித்தனர்.

இப்போது விடயத்துக்கு வருகிறேன். கிளிநொச்சி மாவட்டம் முழுமையாக விவசாயத்தையும் மீன் பிடியையுமே தமது வாழ்வாதாரமாக கொண்ட மாவட்டம். அப்படிப் பார்த்தால் எத்தனை பேர் விவசாய நடவடிக்கையிலும் மீன் பிடியிலும் ஈடுபடுகின்றனர். சிலர் சொல்லாம் வறட்சி அதனால் விவசாயம் செய்ய முடியாதென்று. ஆனால் கிளிநொச்சி திருவையாறு பகுதிக்கு பல மில்லியன் ரூபாய்கள் செலவில் ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால் திருவையாறில் மூன்றில் ஒரு பகுதி கூட விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை. இதற்கான பிரதான காரணம் வேலையாட்கள் பற்றாக்குறை. தற்போது விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சில விவசாயிகளும் எதிர் காலத்தில் விவசாய நடவடிக்கைகளை கைவிட தீர்மாணித்துள்ளனர். நிலைமை இப்படியே தொடருமாக இருந்தால் வறுமை இன்னும் உயரும். வறுமை ஏற்படுவதற்கு பிரதான காரணம் மக்களின் சோம்பேறித்தனமேயன்றி வேறில்லை.

2009இற்கு முன்னர் அரசாங்கம் விவசாய உள்ளீடுகள், விதை பொருட்கள், விவசாய உபகரனங்கள், எரிபொருள் உள்ளிட்ட அனதைதையம் தடை செய்த போதும் கிளிநொச்சியில் இப்போதிருப்பதைப் போல வறுமை இருந்ததில்லை. ஆனால் இப்போது விவசாய நடவடிக்கைக்குத்தேவையான அனைத்துப் பொருட்களும் தாராளமாக கிடைத்தும் கூட வறுமை தலைவரித்தாடுகிறது என்றால் பிழை எங்கே இருக்கிறது என்பதை கண்டு பிடிக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை அரசாங்கமும் அரசியல்வாதிகளும், புலம்பெயர்ந்தவர்களும் மக்களை சோம்பேறிகளாக்கும் திட்டங்களை கைவிட வேண்டும். உதாரணமாக சமுர்த்தி போன்ற திட்டங்கள் உழைக்கக் கூடிவர்களுக்கு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை காரணம் காட்டி தொடர்ந்து தங்கி வாழ்வேரின் எண்ணிக்கையை குறைக்க அரசாங்கம் நடவடிககை எடுக்க வேண்டும்.

கிளிநொச்சியிலிருந்து **சிவா கரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்துக்குமுதலீடுகள் திரட்டுவதற்காக, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, இலண்டன், அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு, 14 நாள்கள் பயணமாகப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். முதன் முதல் 2016இல் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், “அதிமுக ஆட்சி எத்தனை நாளைக்கு நீடிக்கும்?” என்ற கேள்வி எழுப்பப்பட்டு, நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர் வெற்றி பெற்றவுடன், “எத்தனை மாதங்களுக்கு இந்த ஆட்சி நீடிக்கும்?” என்ற கேள்வியோடு பட்டிமன்றமே நடத்தப்பட்டது. இப்போது வெளிநாட்டுக்குச் சென்று முதலீடு திரட்டி வருவோம் என்று அமெரிக்கா சென்றுள்ள முதலமைச்சர் பழனிச்சாமியின் தைரியத்தை, அரசியல்வாதிகள் பலர் பாராட்டத்தான் செய்கிறார்கள்.

மக்களிடம் வாக்குகளைப் பெற்றுவந்த முதலமைச்சர், இப்படி வெளிநாடு போவது வழக்கம். ஆனால், அதிமுகவுக்குள் பல





கடந்த கிழமை அமெரிக்க வந்த போது நயாகரா நீர்விழ்ச்சியை பார்க்க சென்ற முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் Buffalo உள்ள ஈழத்தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் Dosa Place உணவகத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

# எடப்பாடியின் வெளிநாட்டு விஜயமும் திரைமறை தமிழக அரசியலும்

போட்டியும் பொறமையும் நிலவி வருகின்ற நேரத்தில், பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம், 100 சட்டமன்ற உறுப்பினர்களுடன் வலுவான கட்சியாக இருக்கின்ற நேரத்தில், வெளிநாடு செல்வது என்பது சற்று வித்தியாசமானது.

“என் ஆட்சியை 2021 வரை யாரும் கவிழ்க்க முடியாது” என்று அடிக்கடி எடப்பாடி பழனிச்சாமி பேசிவந்தார். அதை இந்த வெளிநாட்டுப் பயணத்தின் மூலம் நிரூபித்தும் உள்ளார் என்பது, தமிழக அரசியலில் புதிய அத்தியாயமாகப் பார்க்கப்படுகிறது.

வெளிநாடு போகின்ற இந்த நேரத்தில், முதலமைச்சருக்கான பொறுப்புகளை வேறு யாரிடமும் கொடுக்கவில்லை. வழக்கமாக, சீனியர் அமைச்சர் ஒருவரிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கடந்தகால முதலமைச்சர்கள் வெளிநாடு சென்றிருக்கிறார்கள். அப்படி இந்தமுறை கொடுக்க வேண்டும் என்றால், துணை முதலமைச்சராக இருக்கும் ஓ.பன்னீர்செல்வத்திடம் ஒப்படைக்க வேண்டும். ஆகவே, எடப்பாடி பழனிச்சாமி வெளிநாட்டுக்குச் சென்றபோது, துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்திடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டுப் போகத் தயாராக இல்லை. முதலமைச்சர் புறப்பட்டுச் செல்லும்போது, துணை முதலமைச்சரே வந்து வாழ்த்தி அனுப்பி வைத்தாலும், இருவருக்கும் இடையில் பரஸ்பர அவநம்பிக்கைதொடர்கிறதுஎன்பதைத்தான் இந்த வெளிநாட்டுப் பயணத்தின் தொடர் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

அதிமுகவுக்குள் இந்தப் பனிப்போர் கொடி கட்டிப் பறந்தாலும், இருவருமே ஒருவருக்கு ஒருவர் ஓர் உண்மையைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அது, அதிமுக ஆட்சி 2021 வரை நீடிக்கும் என்பதுதான். ஆட்சி கையிலிருக்கும் போது, நாம் ஏன் பிரச்சினைகளைப் பூதகரமாக்கிக் கொள்ள வேண்டும் என்று, “போருக்குப் போக” எடுத்த வாளைப் பின்னால் வைத்துக்கொண்டு அமைதிகாக்கிறார்கள் என்பதுதான் உண்மை. முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வமும், ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்று சொல்வதை விட, அவர்களின் ஒற்றுமைக்குப் பிராதன எதிர்கட்சியாக இருக்கும் திமுக தான் காரணம் என்றால் மிகையாகாது.

இன்றைய சூழ்நிலையில், தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்ற, திமுகவுக்கு வெறும் 17 சட்டமன்ற உறுப்பினர்கள்தான் தேவை. அண்டை மாநிலமான கர்நாடகாவில் உள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான எடியூரப்பா, இது போன்று அம்மாநில முதலமைச்சர் குமாரசாமி வெளிநாடு சென்றிருந்த நேரத்தில்தான், அங்கிருந்த ஆட்சியையே கவிழ்த்தார். ஆனால், தமிழகத்தில் ஏன் எந்த மாற்றமும் நடக்கவில்லை என்ற கேள்வியை திமுக எதிர்ப்பாளர்களும் திமுகவால் ஆட்சிக்கு வரமுடியாது என்று பிரசாரம் செய்வோரும் கேட்காமல் இல்லை.

ஆனால், திமுக தலைவராக ஓராண்டை நிறைவு செய்திருக்கும் ஸ்டாலினைப் பொறுத்தமட்டில், ஆரம்பத்திலிருந்து ஒரு கொள்கையில் உறுதியாக இருக்கிறார். “கொல்லைப்புறமாக ஆட்சிக்கு வரமாட்டேன். ஜனநாயக முறைப்படி தேர்தலைச் சந்தித்தே ஆட்சிக்கு வருவேன்” என்று கூறி வருகிறார். ஜெயலலிதா இறந்த போதும் அதைக்கூறினார். ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சரான போதும் அதைக் கூறினார். இப்போது, முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி இருக்கும் நேரத்திலும் அதை கூறிவருகிறார்.

திமுக இப்படியொரு முடிவை எடுத்ததற்கு பல காரணங்கள் உண்டு. ஜெயலலிதா இறந்தபோது, “அதிமுகவுக்குள் நாம் குழப்பத்தை ஏற்படுத்தினால், ஜெயலலிதா மறைவின் அனுதாபத்தில் நம்மீது பழி விழுந்துவிடும்” என்று திமுக நினைத்தது. ஓ.பன்னீர்செல்வம் இருந்தபோது, “எப்படியும் அவர் தலைமையிலான ஆட்சி விரைவில் கவிழ்ந்துவிடும்” என்று கருதியது. இந்த இரு எதிர்பார்ப்புகளும் திமுக நினைத்தது போலவே நடைபெற்றது.

ஓ.பன்னீர்செல்வம், “ஓவர் நைட்டில்” தனது முதலமைச்சர் பதவியை இழக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அடுத்ததாக, எடப்பாடி பழனிச்சாமி முதல்வரானதும் “இந்த ஆட்சியும் நீடிக்காது” என்றே திமுக கருதியது. ஆனால், பாஜகவுடன் கூட்டணி வைக்க திமுக மறுத்ததால், திமுகவின் எதிர்பார்ப்புக்கு மாறாக, எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான ஆட்சி நீடிப்பதை, மத்தியில் உள்ள பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு உறுதிசெய்தது. அதன் பிறகு நிலைமை தலைகீழாக மாறி விட்டது. இன்றைக்குள்ள அரச நிர்வாகம், நிதி நிலைமை உள்ளிட்ட பல குழப்பங்கள் இருப்பதாகக் கருதும் ஸ்டாலின், இனி இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, மற்றொரு ஆட்சியமைக்க முயற்சிக்க வேண்டாம் என்ற இறுதி முடிவை எடுத்து விட்டதாகவே தெரிகிறது.

சமீப காலங்களில், ஸ்டாலினின் பொதுக்கூட்டப் பேச்சுகளில், “சட்டமன்ற தேர்தல் எப்போது வந்தாலும், திமுக வெற்றி பெறும்; ஆட்சி அமைக்கும்” என்று கூறி வருகிறார். ஆகவே, ஜெயலலிதா மறைந்தபோது எடுத்த கொள்கை முடிவின்படி, “ஜனநாயக முறையில் தேர்தலைச் சந்தித்து ஆட்சிக்கு வருவோம்” என்று எடுத்த முடிவில், ஸ்டாலின் உறுதியாகவே இருக்கிறார்.

ஸ்டாலினின் இந்தநிலைப்பாடு, அதிமுக ஆட்சி தொடர்வதற்குப் பாதகமாக இருந்த காரணங்களை முற்றிலும் விலக்கிவிட்டது. ஸ்டாலினின் இந்த முடிவுக்கு மத்தியில், மீண்டும் பாரதீய ஜனதாக் கட்சியே ஆட்சிக்கு வந்ததும் காரணம். இரண்டாவது முறை ஆட்சிக்கு வந்த பாஜக, அதிமுகவுக்குக் கூடுதல் பலமாகக் கிடைத்திருக்கிறது. இந்த ரவுண்டில், “அதிமுகவுக்கும் பாஜகவுக்கும் மிக நெருக்கமான உறவு இல்லை” என்றாலும், “பாஜகவை எதிர்க்கும் திமுகவுக்கு நாம் ஏன் உதவ வேண்டும்” என்ற எண்ணம், பாஜக தலைவர்களுக்கு இருப்பது எடப்பாடி பழனிச்சாமிக்கு ஒரு சாதகமான அம்சமாக இருக்கிறது. அதை ஸ்டாலினும் உணர்ந்திருக்கிறார்.

“ஆட்சி அமைக்க திமுக முயற்சி எடுத்தால், அதற்கு ஆளுநரோ மத்திய அரசோ ஒத்துழைக்காமல் போகலாம். அப்படி மத்திய அரசின் ஆதரவு இல்லாமல் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் செய்யமுடியாது” என்பதும் ஸ்டாலினுக்குத் தெரியும். “ஒருவேளை ஆட்சிக் கவிழ்ப்பு நிறைவேறி விட்டாலும், உடனே தேர்தல் வராமல் போகலாம். ஒரு வருடத்துக்கு மேல் தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி என்றால், அது பாஜகவின் ஆட்சியாகவே இருக்கும்” என்பது அவருக்கு மட்டுமல்ல, திமுகவில் உள்ள முன்னணித் தலைவர்களுக்கு எல்லாம் நன்றாகவே தெரிகிறது. ஆகவே, “ஆட்சி அமைப்பது” அல்லது “ஆட்சிக் கவிழ்ப்பு” என்ற இரு ஆயுதங்களையும், திமுக கீழே போட்டுவிட்டது.

ஆகவே, இன்றைக்கு அதிமுக ஆட்சி தமிழகத்தில் தொடர்கிறது என்றால், முதலில் திமுகவும் பிறகு பாஜகவும் எடுத்துள்ள கொள்கை முடிவே தவிர, எடப்பாடி பழனிச்சாமிக்கும் ஓ. பன்னீர்செல்வத்துக்கும் இடையில் உள்ள ஒற்றுமை அல்ல. அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாரும், இந்த இரு தலைவர்களுக்கும் மிகவும் விஸ்வாசமாக இருக்கிறார்கள் என்றும் அர்த்தம் அல்ல.

திமுக ஆட்சிக்கு வர, எந்த “அரசியல் விளையாட்டுகளிலும் ஈடுபடாது” “பாஜகவோ திமுகவின் அந்த விளையாட்டுகளுக்கு உதவி செய்யாது” என்பதை, அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றாகவே புரிந்து கொண்டு விட்டார்கள். அதேபோல், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் துள்ளியமாக கணித்து வைத்திருக்கிறார். துணை முதலமைச்சரும் இந்த சூழ்நிலைகளை புரிந்து கொண்டார். ஆகவேதான், வெளிநாடுகளில் முதலீடு தேடிச் செல்லும் நேரத்தில், தன்னிடம் முதலமைச்சர் பொறுப்புகளைக் கொடுக்காமல், 14 நாள்கள் அரசப் பயணமாகச் சென்ற எடப்பாடி பழனிச்சாமியை வாழ்த்தி அனுப்பி வைத்துள்ளார் துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம்.

இன்றைய சூழ்நிலையில், தமிழகத்தைப் பொறுத்தவரை ஸ்டாலின் தலைமையில் திமுகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும், “சட்டமன்றத் தேர்தலை” நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றன. 2021 சட்டமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கான அரசதிட்டங்கள் ஒவ்வொன்றாக அறிவித்துக் கொண்டிருக்கும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணிச்சலான முடிவுகளை எடுக்கிறார். தன் அமைச்சரவையில் முதன் முறையாக ஓர் அமைச்சரை டிஸ்மிஸ் செய்தார். யாரும் எதிர்பாராத வகையில், ராஜ்ய சபைக்கு முக்கிய அதிமுக தலைவர்களைப் புறக்கணித்து, அவரது விருப்பத்துக்கு ராஜ்ய சபை உறுப்பினர் பதவியை வழங்கினார். இப்போது யாரிடமும் முதலமைச்சர் பொறுப்புகளைத் தற்காலிகமாக ஒப்படைக்காமல் வெளிநாடு சென்றிருக்கிறார். தமிழக அரசியில் “ஸ்டாலினுக்கும் எடப்பாடி பழனிச்சாமிக்குமான” களமாக முற்றுப் பெற்றுவிட்டது. இந்தக் களம், “ரஜினி அரசியல் பிரவேசத்தால்” மாறுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடாவிடினும் சுடும் அமேசன் தீ!



இந்தப் பூமி தனி ஒருவருக்கு சொந்தமானது அல்ல. மற்றும் மனிதன் என்ற ஓர் உயிரினம் மட்டும் வாழ்வதற்கானதும் அல்ல. இது எல்லோருக்கும் எல்லா ஜீவராசிகளுக்கும் உரியது. மனிதன் எப்படி நீரை, காற்றை, நிலத்தை அனுபவிக்கிறானோ அதே உரிமை சிங்கத்துக்கும் சிட்டுக்குருவிக்கும் ஏன் கண்களுக்குப் புலப்படாத சிறு புழுவுக்கும் உள்ளது. இயற்கையின் படைப்பு எல்லோருக்குமானதே. ஆனால் மனிதன்மையை அழித்துவிட்டு மனிதன் என்ற உடலுக்குள் இருக்கும் பேராசை கொண்ட கொடூரமான பெருவிலங்குகள் இயற்கையின் கொடைகளை அழித்து அத்தனையையும் வெறும் பணமாக்க முனைகின்றன. இந்தப் பேராசையின் விளைவுகள் உலகில் பெரும் இயற்கை அழிவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

ஓசோனில் ஓட்டை விழுந்ததற்கும் பல நாடுகள் நீரில் மூழ்கி நிர்மூலமானதற்கும் சுத்தமான காற்று இல்லாமல் ஒட்சிசன் குறைபாட்டால் சில தேசங்கள் விழி பிதுங்கி நிற்பதற்கும் இதுவே மிக முக்கிய காரணம். இந்த இயற்கையின் பேரழிவுகளை யாருடைய விளைவால் யாருக்கோ நடப்பதாக எண்ணி நாம் கண்டும் காணததும் போல விலகி நடக்க முடியாது. ஏனெனில் இந்தப் பூமிக்கிரகம் நம்முடையது. நமக்கானது. இதில் எங்கு எந்த விளைவுகள் நடந்தாலும் அதற்கான பொறுப்பு நமக்கும் உள்ளது.

இந்நிலையில் உலகின் மிகப்பெரிய மழைக்காடான அமேசன் தீ பற்றி எரிந்தமை உலக மக்களின் கவனத்தை முழுமையாக ஈர்த்துள்ளதோடு இது தொடர்பில் பல்வேறு சர்ச்சைகளும் விவாதங்களும் எழுந்துள்ளன.

கடந்த சில நாட்களாகவே சமூக வலைத்தளங்கள் ஊடகங்கள் என அனைத்திலும் 'பூமியின் நுரையீரல் அமேசன்' என்ற வாக்கியத்தை நிச்சயம் கடந்து வந்திருப்பீர்கள். அறிவியல் ரீதியாக பார்த்தால் அது 100% உண்மைதான். ஒட்சிசன் வெளியிடுவது மட்டுமல்லாமல் நாம் வெளியிடும் கரியமிலவாயுவை(காபனீரொட்சைட்) உட்கொள்வதிலும் மிகப்பெரிய பங்கை அமேசன் காடுகள் வகிக்கின்றன. மாறிவரும் உலகில் காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதற்கு நம்மிடம் இருக்கும் ஒரே ஆயுதம் காடுகள்தான். அதில் அமேசன் மிக முக்கியமானது.

காடுகள் தீப்பற்றி எரிவது வழமை. சில வெப்ப காலநிலைக் காலங்களில் உலகில் பல காடுகள் தீப்பற்றி எரிவதும் பின்னர் செழிப்பதும் இயற்கை. ஆனால் இயற்கைக்கு மாறாக அமேசன் பற்றி எரிவதுதான் பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. அமேசன் மழைக்காடு என்பது 9 நாடுகளில் பரந்து விரிந்துள்ளதோடு 1100 நதிகளையும் ஒரு கோடிக்கும் அதிகமான விலங்கு பறவை மற்றும் பூச்சி வகைகளையும் பல்லாயிரக்கணக்கான மூலிகைத் தாவர வகைகளையும் கொண்ட ஒரு மாபெரும் வனப்பரப்பு. அமேசன் காடுகளின் பெரும்பாலான பகுதிகள் பிரேஸில் மற்றும் பொலிவியாவில் தான் உள்ளன. உலகின் வேறு எந்தப் பகுதிகளிலும் காணக்கிடைக்காத அரிய வகை மரங்கள், விலங்குகள், பறவைகள் என்று பல்வேறு உயிரினங்களின் வாழ்விடமாக இக்காடு உள்ளது. இப்படி பல்வேறு அற்புதங்களைக் கொண்டுள்ள உலகின் மிகப்பெரிய மழைக்காடான அமேசன் பூமிக்குத் தேவையான ஒட்சிசனில் 20 வீதத்தை உலக மக்களுக்காக வழங்குகின்றது.

ஆனால் கடந்த சில வருடங்களாக இக்காட்டில் தீ விபத்து ஏற்படுவது அதிகரித்துள்ளது. அதுவும் கடந்த வருடங்களை விட இவ்வருடம் அதிகளவில் தீ பற்றி எரியும் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 9500க்கும் மேற்பட்ட தீ விபத்துச் சம்பவங்கள் இக்காட்டில் இடம்பெற்றுள்ளன. பிரேஸில் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இது தொடர்பில் கூறுகையில், கடந்த வருடத்தை விட 84 சதவீதம் அதிகமாக தீப்பற்றிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் முந்தைய காலங்களை விட 88 வீதம் அதிகமாக காடு அழிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் கடந்த 3 வாரங்களாக அமேசனில் கொழுந்துவிட்டு எரிந்த தீ உலக அளவில் இயற்கை ஆர்வலர்களிடமும், விஞ்ஞானிகளிடமும் பெரும் கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இத் தீ விபத்தில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்களும் இயற்கை மருத்துவக் குணங்களைக் கொண்ட மூலிகைச் செடிகள், மரங்கள் என்பனவும் அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு அக்காட்டில் வாழ்ந்த ஆதிவாசிகளின் நிலை என்னவாயிற்று என்பதும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. மேலும் பிரேஸில் அரசு இந்த விவகாரத்தில் துரிதமாக செயல்படவில்லை என்ற குற்றசாட்டு பரவலாகப் பேசப்படுகின்றது.

இது பிரேஸில் என்ற ஒரு தனி நாட்டுக்குரிய விடயம் அல்ல. இது இந்தப் பூமியின் பிரச்சினை. அமேசனுக்குள் நடந்துகொண்டிருப்பதைச் சாதாரண இயற்கை நிகழ்வாகவோ விபத்தாகவோ கடந்துவிட முடியாது. இதற்குப் பின் இருக்கும் அரசியல் அவதானிக்க வேண்டிய மிக பெரியதொன்றாகும்.

இந்தப் பாதிப்புகளுக்கு பெரும் காரணமாகக் கூறப்படுபவர் தற்போதைய பிரேஸில் ஜனாதிபதி ஜெய்ர் பொல்சொனாரோ.

2018 ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தில் அமேசன் காடுகளின் வளங்களை வணிகமாக்கி நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்போம் என்பது அவரது முக்கிய கோஷமாக இருந்தது. அப்போதுதான் பிரேஸில் பொருளாதாரம் சரிவிலிருந்து மீளத்தொடங்கியிருந்தது. விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் முதல் எண்ணெய் எடுக்கக் காத்திருக்கும் பெரும் முதலாளிகள் வரை பலரும் இந்தக் கொள்கையால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். பிரேஸிலிலிருந்து பெருமளவில் மாட்டிறைச்சி ஏற்றுமதி நடக்கிறது. பெருமளவில் இந்த

30 வருடங்களுக்கு
மேலாக ஸ்காபரோ நகரின்
மத்தியில் இயங்கிக்
கொண்டிருக்கும், திருமண
வைபோக ஆடைகள்,
பட்டுப் புடவைகள்,
சேலைகள், அலங்காரப்
பொருட்கள் விற்பனையகம்
விற்பனைக்குண்டு.
மேலதிக தொடர்புகட்கு:
4164506833




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாடுகளை வளர்ப்பதற்கான மேய்ச்சல் நிலங்களாக அமேசன் அவர்களுக்குத் தேவைப்பட்டது. இப்படியான ஆசைகளிலிருந்துதான் காடு அழிப்பு பிரச்சினை தொடங்கியதாக கூறப்படுகின்றது

இந்தத் தீ பரவல் இயற்கையாக நடந்ததுதான் என்கிறார் பிரேஸில் நாட்டின் சுற்றுச்சூழல் அமைச்சர் ரிகார்டோ சேல்ஸ். ஆனால், இதை முற்றிலுமாக மறுக்கின்றனர் சூழலியலாளர்கள். பொதுவாக இந்த ஜூலை முதல் செப்டெம்பர் வரையிலான காலத்தில் காட்டுத் தீ ஏற்படுவது வழக்கம்தான். ஆனால், இது மனித நடவடிக்கைகளால் நடந்ததாகவே தெரிகிறது. எப்போதையும் விட இந்த வருடம் அதிகஎண்ணிக்கையில் இந்த காட்டுத்தீ பாதிப்புகள் காணப்படுகின்றன. இதைப் பிரேஸில் நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி மையமே (INPE) உறுதி செய்கிறது. இந்தக் காட்டுத் தீ பாதிப்புகள் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 84% அதிகம் என்கிறது அந்த அமைப்பு. பொல்சொனாரோ ஆட்சிக்கு வந்த பிறகு பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டிருப்பதையும் இந்த அமைப்பு கடந்த மாதம் சுட்டிக்காட்டியது. ஆயினும் "இது சுத்தப் பொய்" என்று மறுத்ததுடன் இந்த அமைப்பின் இயக்குநரான ரிக்கார்டோ கால்வோவை பணி நீக்கம் செய்தது பிரேஸில் அரசு. இதைப்போன்றதவறான தகவல்களால் உலக அரங்கில் பிரேஸிலுக்கு கெட்ட பெயர்ஏற்படும்என்று இதற்குவிளக்கம் தெரிவித்தார் பொல்சொனாரோ. இதேவேளை முற்றிலும் வலதுசாரி சிந்தனைகள்கொண்ட பொல்சொனாரோ குறுகிய காத்தில் கிடைக்கும் பொருளாதார நன்மைகளை மட்டுமே பார்க்கிறார், அவருக்கு சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை பாதுகாப்பு மீது துளியும் அக்கறை இல்லை என்று பிரேஸில் சூழலியலாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

அமேசன் குறித்த இவரது திட்டங்கள் குறித்து சில முக்கிய ஆவணங்கள் கசிந்ததாக Open Democracy மற்றும் Independent ஆகிய இரண்டும் செய்தி வெளியிட்டன. அதில் அமேசன் காடுகளை அழிப்பதே பொல்சொனாரோவின் திட்டம் என்பது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

அமேசனில் 3 வாரங்களாக தொடர்ந்து எரிந்த தீ பல்வேறு அதிர்வலைகளை உலகளவில் ஏற்படுத்தியது. ஆனால் அமெரிக்கா, ரஷ்யா,சீனா போன்றபெரியவல்லரசு நாடுகள் இதனை பெரிதுபடுத்தாமல் அமைதியாகவே இருந்துவிட்டன. முதலில் இந்தத் தீயை அணைக்க போதிய சக்தி எங்களிடம் இல்லை, அமேசன் மீது எங்களுக்கும் அக்கறை இருக்கிறது எனக் கைவிரித்தார் பொல்சொனாரோ. மேலும், தன் மேல்வெறுப்புணர்வுகொண்டழிநிளி க்களின் வேலைதான் இது என்றும் குற்றம் சாட்டினார். ஆனால், நேரில் களமிறங்கிய ஊடகவியலாளர்கள் பெரும்பாலும் பொல்சொனாரோ ஆதரவு விவசாயிகள் மற்றும் முதலாளிகள்தான் இதற்குக் காரணம் என்று தெரிவித்தனர். சிறிய பகுதிகளை கைவசப்படுத்திக்கொள்ள வைக்கப்பட்ட சிறிய நெருப்புகள் கட்டுக்கடங்காமல் பெரும் நெருப்பாக மாறியதாக நேரடி அறிக்கைகள் தெரிவித்தன.

அமேசன் காட்டுத்தீ பெருமளவில் பரவத் தொடங்கியதும் "நமது வீடு எரிகிறது, நாம் விரைந்து செயல்பட வேண்டும்" என ட்வீட் செய்திருந்தார் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன். அதற்கு பொல்சொனாரோ, "இது காலனித்துவ மனப்பான்மையின் எடுத்துக்காட்டு" என தன் எதிர்ப்பை பதிலாக அளித்தார்.

இதேவேளை காட்டுத் தீ ஏற்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற பொருளாதாரத்தில் உயர்ந்த நாடுகள் பங்கேற்கும் ஜி 7 மாநாட்டிலும் அமேசன் ஒரு முக்கிய பொருளாகப் பேசப்பட்டது. இதன்போது பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் அமேசன் காட்டுத் தீயை அணைப்பதற்கு பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் உதவத் தயார் என்று தெரிவித்திருந்தார். ஆனால் ஜி7 நாடுகள் கோரிய உதவியை பிரேஸில் அரசு நிராக்கரித்தது.

இது குறித்து பிரேஸில் ஜனாதிபதி ஜெர் பொல்சொனாரோவின் அலுவலக மூத்த அதிகாரியான லோரென்சோனி கூறும்போது, "நாங்கள் ஜி 7 நாடுகளின் உதவியைப் பாராட்டுக்கிறோம். ஆனால் இதனை அவர்கள் ஐரோப்பிய நாடுகளின் மறுசீரமைப்புக்கு பயன்படுத்தலாம். பிரான்ஸின் உலக பிரசித்தி பெற்ற தேவாலயத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க முடியாதவர் மக்ரோன். அவர் என்ன பிரேஸில் நாட்டுக்கு பாடம் புகட்டுகிறார்" என்றார்.

இவ்வாறு முதலில் பிரேஸில் விவகாரங்களில் யாரும் தலையிட வேண்டாம் என்று கூறிய பொல்சொனாரோ உலக அளவில் தரப்பட்ட பெரும் அழுத்தத்தால் இந்தத் தீயை கட்டுக்குள் கொண்டுவர இராணுவப் படைகளை பணியமர்த்தினார். இதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுவது பிரான்ஸ் ஜனாதிபதி இம்மனுவல் மக்ரோனின் திடமான எதிர்ப்புதான். "பிரேஸிலில் பிரச்சினை கையாளப்படும் விதத்தைப் பார்த்தால் கடந்த ஜூன் மாதம் ஜப்பானில் நடந்த G20 மாநாட்டில் என்னிடம் அவர் பொய் கூறியிருக்கிறார்" என பொல்சொனாரோவை கடுமையாக சாடியிருக்கிறார் மக்ரோன். மேலும், இந்த நிலை நீடித்தால், ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரேஸிலுக்கு இருக்கும் வர்த்தகத் தொடர்பை துண்டிப்போம் என அதிரடியாகத் தெரிவித்துள்ளார் மக்ரோன். முக்கியமாக பிரேஸிலிலிருந்து வரும் மாட்டிறைச்சி இறக்குமதியை தடுக்கத் திட்டம் போடப்பட்டது. இதற்கு அயர்லாந்து போன்ற நாடுகள் ஆதரவும் தெரிவித்துள்ளன. இதற்குப் பணிந்துதான் பொல்சொனாரோ பணிகளை தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

பிரேஸில் நாட்டிலுள்ள அமேசன் காடு அதற்கு மட்டும் சொந்தமாக இருக்கலாம். ஆனால், அதுஇருப்பதால் பெய்யும் மழை உலக நாடுகளுக்குக் கொடையாகவும் உரிமையுள்ளதாகவும் திகழ்கிறது. கனிம வளத்துக்காகவும் தொழில் துறை வளர்ச்சிக்காகவும் அந்த அமேசன் காட்டின் பெரும் பகுதியை வேறு பயன்பாட்டுக்கு மாற்றிக்கொண்டிருக்கிறார் பிரேஸில் ஜனாதிபதி பொல்சனாரோ என்பது சூழலியலாளர்களின் குற்றச்சாட்டு. இதனை முழுமையாக தடுத்து நிறுத்தாவிட்டால் அழிவுகள் வரப்போவது அனைவருக்கும்தான். புவி வெப்பமாவதால் ஏற்படும் தீமைகளையும் மாற்றங்களையும் உணர்ந்துள்ள உலகம், அதற்கு மேலும் காரணமாக இருக்கப்போகும் அமேசன் காடு அழிப்பை எப்படி தடுக்கப்போகின்றது என்பது கேள்விக்குறியே. மனிதனின் நுரையீரலில் புகை புகுந்தாலே புற்றுநோய் போன்ற கொடுமைகள் அவனை கொன்று புதைத்து விடுகின்றன. இன்று பூமியின் நுரையீரலில் பற்றியுள்ள தீ அதனால் உண்டான புகைமூட்டங்கள் எத்தனை கொடுமைகளை காலநிலை மாற்றங்களாக எமக்குத் தரபோகிறதோ தெரியவில்லை.



எது எப்படியோ இன்று அமேசன் காடு எரிவது அணைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது எப்போது வேண்டுமானாலும் மீண்டும் பற்றிக்கொள்ளக் கூடும். இந்தத் தீ நாம் அருகில் இல்லை என்பதற்காக எம்மைச் சுடாது, எமக்கு எந்தத் தீங்கும் வராது என்று நாம் அமைதியாக இருக்க முடியாது. இதனை நாம் நெருங்காவிடினும் இதை நாம் தொடாவிடினும் இயற்கைப் பேரழிவுகளாக என்றாவது எம்மை சுட்டே தீரும். காலநிலை மாற்றங்கள் உருவாகும். ஆனாலும் நாம் இயற்கையை காதல் கொள்வோம்.

மரம் வளர்போம். அமேசனை மட்டுமல்ல; நம் அருகிலுள்ள காடுகளையும் பாதுகாக்க முயற்சிப்போம்.

**குமார் சுகுணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணாமல் ஆக்கப்பட்டோர் என்றொரு இனம்

**எதிர்வரும் காலத்தில் இந்த நாளில் ஒட்டுமொத்தமாக காணாமல் போனோர் என்றொரு இனமாக ஈழத் தமிழரையும் நினைவு கூர வேண்டிய நிலை வரும்**

ஈழத் தமிழர்களின் இன விடுதலைப் போராட்டத்தை சிதைக்க நினைத்த சிங்கள அரசு அவர்களுக்கு இனப் பேரழிவை உண்டு பண்ணி, வரலாறு முழுதும் மீள முடியாத இனமாக ஆக்க நினைத்தது. ஈழப் போரின் இறுதியில் சிறிதும், தயக்கமின்றி ஈழத் தமிழ் இனத்தை வேட்டையாடியது சிங்கள அரசு.

அதற்கான உலகின் இடமளிப்புத்தான் சரணடைந்தவர்களும் கையளிக்கப் பட்டவர்களும் காணாமல் போய் விட்டனர் என்று கைவிரிக்கும் பெரும் தைரியத்தை சிங்கள அரசுக்கு கொடுத்தது. இது ஈழத் தமிழ் இனத்தையே காணாமல் ஆக்கும் தைரியத்தையும் கொடுத்திருப்பதைதான் இந்த நாளில் உணர வேண்டும்.

இலங்கேஸ்வரன் என்பது இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர் களுக்கு சூட்டப்படும் பெயர் என்று வரலாற்று பத்தி எழுத்தாளர் கலாநிதி த. ஜீவராசா எழுதியிருந்தார். அந்த அடிப்படையில்தான் இராவணனை இலங்கேஸ்வரன் என்கிறோம். கம்பராமாயணமும் அப்படிச் சித்திரிக்கிறது. ஒரு காலத்தில் இலங்கேஸ்வரர்களாக ஈழத்தை ஆண்ட தமிழினம் பின்னர், சிறுபான்மை இனமானது. இலங்கையில் இரண்டு சம அந்தஸ்துள்ள நாடுகள் அமையக் கூடிய சூழல் பிரித்தானிய வெளியேற்றத்தின்போது ஏற்பட்ட போதும் நல்லிணக்கம் பேசி அவ் வாய்ப்பு தவறவிடப்பட்டது.

வடக்கு கிழக்கு சிறுபான்மை தமிழர்கள் ஆக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்கள், இன்றைக்கு வடக்கு தமிழர்கள் என்கின்ற அளவில் கிழக்கின் சிங்கள மற்றும் இஸ்லாமியவாதக் குடியேற்ற சூழல்கள் தள்ள முற்படுகின்றன. தமிழீழமே இன்றைக்கு சுருங்கிப் போயிருப்பதைப் போன்றதொரு தோற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழீழம் குறித்து பேசும் ஒரு சிங்கள பேரினவாதிகூட வடக்கு கிழக்கிற்கு அதிகாரம் தரமாட்டோம் என்று சொல்லுவார். இன்று வடக்கிற்கு அதிகாரத்தை தர ஒரு போதும் இடமளிக்கோம் என்று பேசப் பார்க்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்த பெரும்பாலான நிலங்கள் இன்று காணாமல் ஆக்கப்பட்டுவிட்டன. எமது தலைமைகள் ஆளும் சிங்கள அரசை காப்பாற்றுகின்றன. மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியில் அமர்த்தினோம். அவரது ஆட்சியை தொடர்ந்து பாதுகாக்க உதவுகிறோம். சர்வதேசத்தை துணைக்கு அழைத்துவிட்டு, அதன் பிடியிலிருந்து தப்பவும் நாமே உதவிக் கொண்டிருக்கிறோம்.

மைத்திரியுடன் ரணிலுக்கு முரண்பாடு. ரணிலை நாம் காப்பாற்று கிறோம். ரணில் அரசு இன்றைக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால்தான் காப்பாற்றப்பட்டிருக்கிறது. ஒரு புறத்தில் தமிழ் தலைமைகளின் ஆதரவை பெற்றுக் கொண்டு மறுபுறத்தில் தமிழர்களின் உரிமைகளையும் பண்பாட்டு அம்மசங்களையும் திருடும் காணாமல் ஆக்கும் வேலையை சிங்கள அரசும் அதன் தலைவரும் பிரதமரும் செய்து கொண்டிருக்கின்றனர். இந்த நாளின் பெரும் சூத்திரதாரிகளும் இந்த நாளின் எதிரிகளுமே இலங்கை ஆட்சியாளர்களைப் போன்றவர்கள்தான்.

மணலாறு என்ற ஈழத் தமிழர்களின் பிரதேசத்தை காணாமல் ஆக்கி, வெலி ஓயா உருவாக்கப்பட்டது. இத்தகைய செயல்களுக்காகவே ஈழத் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் சூழலே ஏற்பட்டது.

ஆனால், இன்றைக்கு வந்து இலங்கை சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆமையன் குளம் என்ற தமிழ் குளத்தை காணாமல் ஆக்கிவிட்டு, அதை சிங்களக் குளமாக்கி திறந்து வைத்துச் செல்கிறார்.

ஈழ இன விடுதலைக்கான போராட்டம் இலங்கை தீவில் நடந்தது. அதனை சிதைக்க தமிழ் இன அழிப்பை சிங்கள அரசு மேற்கொண்டது. இவ்வளவு நடந்த பின்னரும், வவுனியா ஒதியமலையை அண்டிய பகுதியில் நாளும் பொழுதும் ஒரு சிங்களக் குடி குடியேறிக் கொண்டிருக்கின்றது. யாரோ ஒரு பிக்கு வந்து புத்தர் சிலையுடன் குடி ஊன்றிக் கொண்டிருக்கிறார்.

செம்மலையில் இந்து ஆலய வளாகத்தை அடாத்தாக பிடித்து, பௌத்த சிங்களப் பிக்கு பாரிய புத்தர் சிலை கட்டி விகாரை அமைக்கிறார். வடக்கு கிழக்கில் ஆயிரம் இடங்களில் புத்தர் சிலைகளை அமைக்க சனாதிபதி சிறிசேனதான் திட்டம் தீட்டியவர். இதனால்தான் கன்னியாவில் பாரிய நெருக்கடி உருவாகியது. அங்குள்ள இந்து ஆலய நிலத்தில், விகாரை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்றத்தால் அந்த முயற்சி தடுக்கப்பட்டாலும் அரசாணைப்படியும் அதிகாரபூர்வமற்ற முறையிலும் குடியேற்ற முயற்சிகள் வேறு இடங்களில் நடந்துகொண்டு தான் இருக்கின்றன.

ஆகஸ்ட் 30 காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினம். போர் முடிந்து பத்தாண்டுகள் ஆகின்றன. வருடம் தோறும் இந்த தினத்தை நினைவு கொள்கிறோம். போராட்டங்கள் செய்கின்றோம். தலைவர்கள் அறிக்கைக்களை விடுகின்றனர். எழுத்தாளர்கள் கட்டுரைகளை எழுதுகிறோம். கவிஞர் கவிதைகளை எழுதுகிறோம். இந்தப் பத்தாண்டுகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் என்ன முன்னேற்றம் நடந்தது? அந்த மக்கள் இன்றும் தெருவில் இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராடிப் போராடியே செத்துக் கொண்டிருப்பதுதான் நடந்தது.

ஒன்று மாத்திரம் நன்றாகப் புலப்படுகின்றது. முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் இராணுவத்தை நோக்கிச் சென்று சரணடைந்தவர்கள் மாத்திரம் காணாமல் ஆக்கப்படவில்லை. போர் முடிவுக்கு வந்த பின்னர், அருட்தந்தை பிரான்சிஸ் அடிகளாருடன் கையளிக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான போராளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் மாத்திரம் காணாமல் ஆக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடிய உறவுகளும் காணாமல் ஆக்கப்படுகிறார்கள். மெல்ல மெல்ல அவர்களும் இந்த மண்ணுக்குள் காணாமல் தொலைக்கப்படுகிறார்கள்.

ரணிலும் மைத்திரியும் முரண்படுகின்றனர். ரணிலும் மகிந்தவும் முரண்படுகின்றனர். மைத்திரியும் கோத்தாவும் முரண்டுகின்றனர். ஆனால் இவர்கள் யாரும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் வாய் திறப்பதில்லை. சிங்கள இராணுவத்தின், சிங்கள அரசுகளின் இனப்படுகொலைக் குற்றங்களை பாதுகாப்பதில் மிக கச்சிதமாக, மிக ஒற்றுமையாக செயற்பட்டு வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள், தந்தையர்கள் போராடுவது பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. துளியும் குற்றமில்லை.

அவர்கள் இதைத்தான் எண்ணுகின்றனர் போலும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடுகின்ற தாய் – தந்தையர்களும் மெல்ல மெல்ல காணாமல் ஆகிப் போவார்கள். அப்போது கேள்வி எழுப்ப எரும் இருக்க மாட்டார்கள் என்று.

இதே விடயத்தைத்தான் எல்லா இடத்திலும் சிங்கள அரசு பிரயோகிக்கிறது. நாம் நிலத்தின் அதிகாரத்தை கேட்கிறோம். அவர்கள் தொடர்ந்து நிலத்தை காணாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாம் நமது கடலைக் கோருகிறோம். அவர்கள் கடலை காணாமல் ஆக்குகிறார்கள். நாம் நமது காட்டை கோருகிறோம் அவர்கள் காட்டை காணாமல் ஆக்குகிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் காணாமல் ஆக்குவதைத்தான் தீர்வாகக் கொண்டுள்ளனர்.

இப்போது நாங்கள் ஆலயத்திற்கு பெரிதாக செல்வதில்லை. நல்ல தருணம். அவர்கள் ஆலயங்களை காணாமல் ஆக்கி புத்த விகாரைகளை கட்டுகிறார்கள். நாம் பண்பாட்டு உணர்வு உரிமையை மறந்துவிடுகிறோம். அவர்கள் அதனையும் காணாமல் ஆக்குகிறார்கள். எங்களை பக்கத்தில் வைத்திருந்தபடி, எங்களை துணையாக்கிக் கொண்டே எங்களை காணாமல் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஒன்றுபட்ட இலங்கையைப் பேசிக் கொண்டு ஈழ விடுதலைப் போராட்டத்தை காணாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதே நிலைமை தொடர்ந்தால், எதிர்வரும் காலத்தில் இந்த நாளில் ஒட்டுமொத்தமாக காணாமல்போனோர் என்றொரு இனமாக ஈழத் தமிழரையும் நினைவு கூர வேண்டிய நிலை வரும். இதே நிலை தொடர்ந்தால் ஈழம் என்றொரு காணாமல் போன நிலத்தையும் நினைவுகூர வேண்டி வரும். காணாமல் போன ஒரு தாயின் வலியை உணர்தலும் அதற்காய் இயங்குதலும்தான் இந்த நிலையை இல்லாமல் செய்யும் முதல் புள்ளியாய் இருக்கும்.

**தீபச்செல்வன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காணிகளும் வீடுகளும் வாங்கி விற்கப்படுவது போல, நாடுகளும் வாங்கி விற்கப்படுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

அவ்வாறு ஒரு நாட்டையோ, அதன் பகுதியையோ விலை பேசுவதும் விற்கச் சொல்லிக் கேட்பதும், அதற்காகத் தயாரித்திருக்கும்பேரமும் அபத்தமாகத் தெரியுமல்லவா?

ஆனால், இன்றைய உலக அரங்கு, அபத்தமும் அவலமும் ஆபத்தும் கலந்த கலவையாய் இருக்கின்றது. இதை மெய்யாக்கும் கதை ஒன்றையே, நாம் இன்று பார்க்கவிருக்கிறோம்.

காணிகளையும் கட்டடங்களையும் வாங்கி விற்கும் வியாபாரி, தனது 19ஆம் நூற்றாண்டு நினைவுகளுடன் உலகின் பலம் பொருந்திய நாட்டின் ஜனாதிபதியாக இருந்தால், நிலைமை இவ்வாறுதான் இருக்கும் என்பதைச் சுட்டுகிறது இந்தக் கதை.

கடந்த வாரம், அமெரிக்காவிலிருந்து வெளியாகும் முக்கிய நாளிதழான 'WallStreetJournal' அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்து நாட்டைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளார் என்ற அதிர்ச்சிகரமான செய்தியை வெளியிட்டது.

கிரீன்லாந்து நாட்டை நிர்வகிக்கும் டென்மார்க் நாட்டுக்கு, அடுத்த மாதம் அமெரிக்க ஜனாதிபதி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கின்ற நிலையில், இந்தத் தகவல் கசிந்துள்ளது.

வெளிப்பார்வைக்கு நகைச்சுவையாகவும் பைத்தியக்காரத்தனமாகவும் தெரிந்தாலும், இவ்வாறான செயற்பாடுகளை, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முன்னெடுக்கக் கூடியவர் என்பதும், அதை ஆமோதித்து முன்செல்ல அவருடன் இருக்கிற நிர்வாகிகளும் தயாராகவே இருக்கிறார்கள் என்பதையும், டரம்பினுடைய நிர்வாகத்தின் கடந்த மூன்றாண்டு ஆட்சிக்காலம் உறுதிப்படச் சொல்லுகிறது.

எனவே, இதை நகைச்சுவை என்றோ, முட்டாள்கள் தினத்தின் கதை என்றோ புறக்கணிக்க இயலாதபடி, கவனம் குவிக்க வேண்டி உள்ளது. உலக அரசியல் அரங்கு, 19ஆம் நூற்றாண்டு அரங்குக்கு ஒப்பானதாக இருக்கின்றதென எண்ணும்வர்த்தகரின் இந்த முனைப்பை, அலட்சியம் செய்யவியலாதபடி, உலக அரங்கில் அமெரிக்காவின் நடத்தை உள்ளது.

வரலாற்றில், நாடுகள் விற்கப்படுவதும் வாங்கப்படுவதும் நடைபெற்று வந்திருக்கின்றன. கடந்த அரை நூற்றாண்டுகால வரலாற்றில், இதற்கான சான்றுகள் இல்லாதபோதும், இரண்டு நூற்றாண்டு காலவரலாற்றை ஆழமாகநோக்கினால், இவ்வாறான கொள்வனவுகள் நடைபெற்றுள்ளதைக் காணலாம்.

இன்றுள்ள அமெரிக்காவின் மாநிலங்களில் பல, இவ்வாறு கொள்வனவுசெய்யப்பட்டு அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டவையே ஆகும்; அமெரிக்காவுக்கு இது புதிதல்ல. ஆனால் கேள்வி யாதெனில், உலக அரசியல் அரங்கம், சர்வதேசச் சட்டங்களை இயற்றி, இயங்கிவரும் நிலையில், இவ்வாறு வேறொரு நாட்டின் பகுதியைக் கொள்வனவு செய்வது சாத்தியமாகுமா? இந்தக் கொள்வனவு நடைபெறுமாயின், அது சர்வதேசச் சட்டங்களுக்குப் பொருந்தி வருமா? ஆகிய இரண்டு கேள்விகள் தொக்கி நிற்கின்றன.

ஒருவேளை இது சாத்தியமானால், உலகின் ஏனைய பெரிய சக்திகள் இதைப் பின்பற்றி, வெவ்வேறு பகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு முண்டியடிக்கும். இது, உலக அரசியலில் பாரதூரமான மாற்றங்களையும் நெருக்கடிகளையும் உருவாக்கும்.

கற்பனை செய்ய இயலாதபடி, நிகழ்வுகள் நடந்தேறலாம். நாளை, கொழும்பை ஒரு நாடும் யாழ்ப்பாணத்தை இன்னொன்றும், திருகோணமலையை மற்றொன்றும் நிர்வகிக்கும் நிலையை கற்பனை செய்து பாருங்கள்.

உலக அரசியல், பல்வேறுபட்ட கால கட்டங்களைத் தாண்டி வந்திருக்கிறது. தேசிய அரசுகளின் தோற்றம், நாடுகளுக்கு அதற்கான ஆட்புல எல்லையையும் அதற்குஉட்பட்ட மக்கள் தொகையையும், அவர்களுக்கான அரசாங்கத்தையும், இறைமையையும் வழங்கி, தேச எல்லைகளை மய்யப் படுத்திய நாடுகளின் தோற்றத்துக்கு வழிவகுத்தன.

இதைத்தொடர்ந்து, நாடுகாண் பயணங்களானவை, நாடுகளைக் கைப்பற்றி கொலனித்துவமாக்குவது, பிரித்தானிய, பிரெஞ்சு, போர்த்துக்கேய, டச்சு, அமெரிக்கக் கொலனிகளுக்கு வித்திட்டன. உலகப் போர்கள் அதைத்தொடர்ந்தன.

இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து, கொலனியாதிக்க விடுதலைப் போராட்டங்கள், புதிய சுதந்திர அரசுகளாகத் தோற்றம்பெற உதவின. உலகமயமாக்கலின் வருகை, தேச எல்லைகளைக் கடந்த பல்தேசிய கம்பெனிகள் எல்லைகளை மறுவரையறை செய்கின்ற பிராந்தியக் கட்டமைப்புகள், கட்டட வர்த்தகம் என்று பல கட்டங்களைத் தாண்டி, உலக அரசியல் நகர்ந்து வந்துள்ளது.

மேலாதிக்க நோக்குடையனவாக இருப்பினும், ஏதோ ஒரு வகையில் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலக ஒழுங்கு சார் நடைமுறை, சர்வதேச அரசியலையும் நாடுகளுக்கு இடையிலான உறவுகளையும் ஒரு பொதுத் தளத்தில் பேணி வளர்த்து உரையாடுவதற்கான வாய்ப்பை வழங்கி வந்துள்ளது.

கிரீன்லாந்தை வாங்குவதற்கு அமெரிக்கா எடுத்துள்ள முயற்சி எழுப்பும் பிரதானமான கேள்வி, ஒரு நாடு, தனது ஆட்புல எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதியை, இன்னொரு நாட்டுக்கு விலைபேசி விற்க முடியுமா என்பதேயாகும்.

இது, விற்பனைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்களின் இறைமை சார்ந்த கேள்வியை எழுப்புகிறது. அக்குறிப்பிட்ட மக்கள் தொகையின் அனுமதி இல்லாமல், அந்த மக்கள் வாழ்கின்ற பகுதியை, இன்னொரு நாட்டுக்கு தாரைவார்க்க முடியுமா என்பது சர்வதேச சட்டங்களில் புதிய கேள்விகளை நிச்சயம் எழுப்பும்.

கிரீன்லாந்து, டென்மார்க் முடியாட்சியின் கீழ் இருக்கிற சுயாட்சி நாடாகத் திகழ்கிறது. பாதுகாப்பு, அயலுறவுகள் ஆகிய இரண்டு விடயங்கள் தவிர்ந்த அனைத்தையும் தீர்மானிப்பதற்கான முழு உரிமை, கிரீன்லாந்தில் வாழும் மக்களுக்கு உண்டு. 57 ஆயிரம் பேர் கிரீன்லாந்து தீவில் வசிக்கிறார்கள். உலகத்தின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்து, அதிகளவான பனிப் பாறைகள் நிறைந்த பகுதியாகும்.

இதை, அமெரிக்கா வாங்க முயல்வது, இது முதல் முறையல்ல. இதற்கு முதலும் இரண்டு தடவைகள், கிரீன்லாந்தை வாங்க, அமெரிக்கா முயன்றிருக்கிறது. அமெரிக்கா இவ்வாறு பல பகுதிகளை இதற்கு முன்னரும் வாங்கியுள்ளது.

1867ஆம் ஆண்டில், ரஷ்யப் பேரரசிடமிருந்து 63 ஆயிரம் சதுர மைல்களைக் கொண்ட அலாஸ்காவை, இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அமெரிக்கா வாங்கியது. மேற்கிந்தியத் தீவுகளில் டென்மார்க்கின் கொலனிகளாக இருந்த St. Thomas, St. John, St. Croix ஆகிய தீவுகளை, 1917ஆம் ஆண்டில் 25 மில்லியன் பெறுமதியான தங்க நாணயங்களுக்கு, டென்மார்க்கிடமிருந்து அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கியது.

21ஆம் நூற்றாண்டில், காணிகளை வாங்கும் வேலையை, அரசுகள் செய்வதில்லை, மாறாக, பல்தேசிய நிறுவனங்கள் செய்கின்றன.

இத்தாலியின் பிரபல ஆடை உற்பத்தி நிறுவனமான பெனிட்டன் (Benetton), ஆர்ஜென்டீனாவின் மப்பூச்சே பழங்குடிகள் வாழும் பகுதியான பட்டகோனியாவில், 2.2 இரண்டு மில்லியன் ஏக்கர் நிலத்தை வாங்கியது. பெனிட்டன் நிறுவனம், இந்தப் பகுதியில் தனது ஆடை உற்பத்திக்குத் தேவையான பருத்தியை விளைவிக்கிறது. பழங்குடி மக்களின் அனுமதியைப் பெறாமல், அவர்களது வாழ்விடங்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு எதிராகப் போராடுகின்ற போராட்டக்காரர்கள் காணாமற் போய்,பின்னர் பிணங்களாக ஆறுகளில் மிதக்கிறார்கள்.

ஆனால், மப்பூச்சே பழங்குடிகள், தங்கள் நிலங்களுக்கு உரிமை கோரி, தொடர்ந்து போராடுகிறார்கள்.

2009ஆம் ஆண்டில், தென் கொரியாவின் Daewoo நிறுவனம், மடகஸ்காரில் 3.2 மில்லியன் ஏக்கர் நிலப்பரப்பை விலைக்கு வாங்கியது. இப்பகுதியில் உணவை உற்பத்தி செய்து, அதை நேரடியாகத் தென்கொரியாவுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டிருந்தது. ஆனால், உள்ளூர் மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக, இந்த முயற்சி தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டில், சீனா வின் நொங்கௌ குழுமம், அர்ஜென்டினா வில் 8 இலட்சம் ஏக்கர்களை உணவு உற்பத்திக்காக வாங்கியது.

இன்று இடங்களை வாங்குவது, குத்தகைக்கு எடுப்பது, கையகப் படுத்துவது என அனைத்தும், நாடுகளால் செய்யப்படாமல் நிறுவனங்களாலும் பல்தேசியக் கம்பனிகளாலும் செய்யப்படுகின்றன.

இந்நிலையில், கிரீன்லாந்தை வாங்குவதற்கு ட்ரம்ப் எடுக்கும் முயற்சியானது, உலக அரசியலை 19ஆம் நூற்றாண்டு நிலைமைக்குப் பின்தள்ளுகிறது.

கிரீன்லாந்தை வாங்குவதற்கு அமெரிக்கா காட்டுகிற முனைப்பு, தற்செயலானதல்ல; கிரீன்லாந்தின் நிலப்பரப்புக்கு அப்பால், உலக நன்னீரில் மிகச் சுத்தமான 10 சதவீதமான நன்னீர், கிரீன்லாந்தில் இருக்கிறது. இயற்கை வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

குறிப்பாக, 50 பில்லியன் பரல்களுக்கு மேற்பட்ட எண்ணெய் வளம் இங்கு இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது. உலகின் 'அரிதான இயற்கைக் கனிம வளங்கள்' இந்தப் பகுதியில் இருக்கின்றன. உலகில் உள்ள இவ்வகையான அரிய கனிம வளங்களில் 90 சதவீதமானவை, சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இதனாலேயே, நவீன அலைபேசிகள் தொட்டு நுண்ணிய நவீன இலத்திரனியல் உபகரணங்கள் வரை அனைத்தையும் சீனாவால் உற்பத்தி செய்ய முடிகிறது. எனவே, அதற்குப் போட்டியாக அரிய கனிம வளங்களைக் கட்டுப்படுத்துவது அமெரிக்காவுக்கு அவசியமாகிறது.

பூகோள பாதுகாப்பு என்கிற நிலையில், ஆர்டிக் அட்லாண்டிக் மீதான கட்டுப்பாட்டையும் பார்வையையும் செலுத்துவதற்கு, கிரீன்லாந்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் வாய்ப்பானது அட்லாண்டிக் கடலுக்கு நடுவே அமைந்துள்ளது.

1946ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹரி ட்ரூமன், கிரீன்லாந்தை 100 மில்லியன் டொலர்கள் பெறுமதியான தங்கத்துக்கு வாங்க முனைந்தார்.




அப்போதைய அமெரிக்க நாடாளுமன்றமும் இராணுவமும், இதை முழுமையாக ஆதரித்தன. அமெரிக்க நலன்களுக்கு கிரீன்லாந்து முக்கியமான பூகோள கேந்திர நிலையம் என்பது, அன்று தொட்டு அமெரிக்க இராணுவ வல்லுநர்களால் தொடர்ந்து முன்மொழியப்பட்ட வருகிறது.

எவ்வாறாயினும், ட்ரம்பின் இந்த முயற்சி வெற்றியளிக்கப் போவதில்லை. அதற்கு, கிரின்லாந்து மக்களும் டென்மார்க் மக்களும் அனுமதிக்கப் போவதுமில்லை. ஆனால்,இவ்வாறான ஒரு முயற்சியை அமெரிக்கா மேற் கொள்வதானது, ஒரு வலுவான செய்தியைச் சொல்கிறது.

அமெரிக்கா அடாவடியால் தன்னை நிலைநிறுத்தப் பாடுபடுகிறது. விழுமியங்களும் அறமும், உலக அரசியலில் வெற்றுக் கோஷங்களே.

உலக வரைபடத்தில், கீழ் மூலையில் உள்ள இலங்கை எவ்வாறு பூகோள அரசியலில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதைப்போலவே மேல் மூலையில் உள்ள கிரின்லாந்தும் முக்கியமானதே! இதையும் கவனிப்பது பயன்தரும்.

**தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ**


# PHARMA COLLEGE
Healthcare•Business•Technology

O/A North American College of Pharmaceutical Technology
(Registered as a Private Career College Under Private Career Colleges Act. 2005)

## NEW Programs! New Careers!
(Special programs, workshops & seminars available for Medical Professionals, Degree, Masters degree & Ph.D holders)



**Pharmaceutical Diploma programs are offered in the following fields:**
* Pharmaceutical Modern Technology
* Pharmaceutical Quality Control & Assurance
* Pharmaceutical Clinical Research
* Pharmaceutical Manufacturing & Validation

***Job opportunities:***
* Manufacturing Technologists
* Quality Control Analysts
* Clinical Research Associates
* Validation Scientists and many more
* Formulation Technicians
* Quality Assurance Associates
* Process Engineers

**Cannabis Diploma programs are offered in the following fields:**
* Cannabis Production Technology
* Cannabis Quality Control & Assurance
* Cannabis Head of Security
* Cannabis Master Grower



***Job opportunities:***
* Master Grower (MG)
* Quality Control Analysts
* Head of Security (HS)
* Quality Assurance Person (QAP)
* Responsible Person (RP)
* Extraction Technicians and many more

***Funding Options:***
You may be eligible to receive government grant,
If you are receiving EI benefits
Those who received EI after 2005
Those who received maternity / parental benefit within the last 5 yrs ( Certain conditions may apply)

School funded scholarships are available to those who qualify Call for details!

## Part- time courses:
***(Day time, Evenings & week-ends)***
Quick books, Simply Accounting, AccPac
Word, Excel, Access, Power Point
A+ exam prep., Programming languages
First Aid & CPR
Food Handler certification (one day course)
Real estate exam courses exam prep

**Toronto Campus**
(Markham & Finch)
5310 Finch Ave., E. Unit #9
Toronto, ON, M1S 5E8
**416.613.2323**

**Mississauga Campus**
(Hurontario & Watline)
25 Watline Ave., Unit #201
Mississauga, ON, L4Z 2Z1
**416.412.7374**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்துக்கான ரணிலின் இறுதிப் போர்!



தென்இலங்கைஅரசியல்ஒழுங்கும், அதன் சூத்திரங்களை இயக்கிக் கொண்டிருக்கும் பௌத்த பீடங்களும் தங்களுக்கான ஆட்சி முகமாக ரணில் விக்ரமசிங்கவை ஒருபோதும் கருதியதில்லை. சர்வதேச ரீதியில் தென் இலங்கைநெருக்கடிகளைச் சந்தித்துநின்ற போதெல்லாம், ஒரு ஆபத்பண்டவராக ரணில் செயற்பட்டிருக்கிறார்; காப்பாற்றியிருக்கிறார். ஆனாலும், அவரைநிறைவேற்றுஅதிகாரம்கொண்ட 'ஒற்றை' ஆட்சியாளராக கொள்வதற்கு தென் இலங்கை ஒருபோதும் தயாராக இருந்ததில்லை. அப்படிப்பட்ட நிலையில், உண்மையிலேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ரணில் விரும்புகிறாரா? என்றொரு கேள்வி பல தரப்புக்களினாலும் தொடர்ச்சியாக எழுப்பப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது எழுந்துள்ள முரண்பாடுகள், 'ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு' தொடர்பிலானது என்பது வெளிப்படையானது. ஆனால், அந்த முரண்பாடுகளின் உண்மையான புள்ளி, ஜனாதிபதி வேட்பாளர் என்கிற ஒற்றைப் புள்ளியில் நிற்கவில்லை. மாறாக, அடுத்த பிரதமர் யார், கட்சியின் தலைமைத்துவத்தை யார் கைப்பற்றுவது?, என்கிற விடயங்கள் சார்ந்ததாக இருக்கின்றன.

சஜித்பிரேமதாசவுக்கும்ரணிலுக்கும் இடையிலான உறவு என்பது கடந்த பத்து வருடங்களில் பெரும் விரிசல்களைக் கண்டிருக்கின்றது. ஒற்றைத்தலைமையாக நீடிக்க விரும்பும் எந்தவொரு நபரும், தனக்கு மாற்றாக இன்னொருவர் எழுவதை விரும்புவதில்லை. சஜித் நேரடி அரசியலுக்கு வந்தது முதல், அவரை நோக்கி தென் இலங்கையின் இளைஞர்கள் குறிப்பிட்டளவான திரட்சியைக் காட்டினார்கள். 2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணில் தோல்வியடைந்ததும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத் துவத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்கிற கோரிக்கை எழ ஆரம்பித்தது. ஆனாலும் கடந்த பதினைந்து வருடங்களாக அந்தக் கோரிக்கையை கோரிக்கை என்கிற அளவிலேயே ரணில் கடந்து வந்தார்; தலைமைத்துவத்தையும் காப்பாற்றினார். சஜித்துக்கு எதிராக ரவி கருணாநாயக்கவையும், அண்மைக்காலத்தில் சரத் பொன்சேகாவையும் ரணில் கட்சிக்குள் வளர்க்க விரும்பினாலும், அவரினால் சஜித்தின் வளர்ச்சியை தடுக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில், குறிப்பாக மைத்திரியின் சதிப்புரட்சிக் காலத்தில், அரசாங்கத்தை காப்பாற்றிக் கொடுத்ததில் சஜித்தின் பங்கு கணிசமானது என்று ரணில் பேசவும் வேண்டிய சூழல் ஏற்பட்டது. என்றைக்குமே மற்றவர்களை மேடைகளில் பாராட்டாத, கணக்கில் எடுக்காத ரணில், சஜித்தின் கைபிடித்து அடையாளப்படுத்த வேண்டி வந்தது. அதுதான், அப்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை ராஜபக்ஷக்களின் பேரம் பேசல்களில் இருந்து காப்பாற்றியது. கூட்டணிக் கட்சிகளை கலைந்து போகாமலும் தடுத்தது.

ரணிலை பிரதமர் பதவி யிலிருந்து நீக்கிவிட்டு சஜித்தை பிரதமராக்கு வதற்கான முயற்சிகளில் மைத்திரிபால சிறிசேன இரண்டு தடவைகள் இறங்கினார். அதனை அவர் வெளிப்படையாகவும் அறிவித்தார். ஆனால், அதற்கு சஜித் உடன்படவில்லை. அப்படியான சூழ்நிலை யிலேயே, மைத்திரி, சதிப்புரட்சிக்கு தயாரானார். அந்த விடயம், குறுக்கு வழிகளில் அதிகாரத்தை அல்லது கட்சியின் தலைமைத்துவத்தை அடையும் நோக்கம் சஜித்திடம் இல்லை என்பதை வெளிப்படுத்தியது. இதனால், அவரை நோக்கிய கட்சியினரின் திரட்சியைத் தடுக்கவும் முடியவில்லை. இன்றைக்கு, சஜித்துக்குப் பின்னால், மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம உள்ளிட்ட ரணிலின் விசுவாசிகளான சிரேஷ்ட தலைவர்களே திரள்வதற்கு காரணமானது.

**ரணில் அரைநூற்றாண்டுகளாக அரசியலில் இயங்கிக் கொண்டிருக்கிறார். கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இருக்கிறார். மூன்று முறை பிரதமராகவும் இருந்திருக்கிறார். இரண்டு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோற்றுமிருக்கிறார். ஆனால்,**

இப்போது, முதல் பந்தியில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலை நேரடியாக கூறினால், வெற்றிகொள்ள முடியாத தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு ரணில் விரும்பவில்லை என்பதே உண்மை. நிச்சயமாக ரணில் ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை போட்டியிட விரும்பவில்லை. ஜனாதிபதி பதவி மீதான ஆசை அவருக்கு இருந்தாலும், அவரினால் வெற்றிபெற முடியாது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்க ஏன், கட்சிக்குள் இருப்பதிலேயே, அதிக வெற்றி வாய்ப்பைக் கொண்டிருக்கிற சஜித்தை அவர், தட்டிக்கழிக்க நினைக்கிறார்?

ரணில் அரைநூற்றாண்டுகளாக அரசியலில் இயங்கிக் கொண்டிருக்கிறார். கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இருக்கிறார். மூன்று முறை பிரதமராகவும் இருந்திருக்கிறார். இரண்டு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோற்றுமிருக்கிறார். ஆனால், அவர் எழுபது வயது கடந்த பின்னரும் தன்னுடைய அரசியல் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறார். அதுதான், இந்தச் சிக்கல்களின் உண்மையான பின்னணி.

சஜித் அதிகாரத்துக்கு வந்தால், இரட்டைத் தலைமை என்கிற பேச்சுக்கே இடமளிக்க முடியாது என்கிற நிலைப்பாட்டில் இருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும், கட்சித் தலைமையை எடுத்துக் கொள்வதுடன், பிரதமராக எந்தவொரு காரணம் கொண்டும் ரணிலை நியமிக்கப்போதில்லை என்கிற விடயத்தில் கவனமாக இருக்கிறார். இதனை, சஜித் தரப்பு ஓரளவுக்கு பங்காளிக் கட்சிகளுடனான உரையாடல்களிலும் வெளிப்படுத்தி வருகின்றது. சஜித்தைப் பொறுத்தளவில், கரு ஜயசூரியவை பிரதமர் பதவியில் அமர்த்திவிட்டு ஒற்றைத் தலைமை, ஒன்றை ஆட்சியதிகாரம் என்கிற தோரணையில் அரசாங்கத்தை நடத்துவதையே விரும்புகிறார். அதன்போக்கில், ரணிலுக்கு அதிகபட்சமாக, புதிதாக அமைக்கப்படவுள்ள கூட்டணியில் தலைமைப் பதவி மற்றும் சபாநாயகர் பதவி ஆகியவற்றுக்கான பரிந்துரைகளே சஜித் தரப்பினால் முன்வைக்கப்படுகின்றன. இந்தவிடயம்தான், ஜனாதிபதிவேட்பாளர் தெரிவு சிக்கலைஐக்கியதேசியக்கட்சிக்குள் நீடிக்கச் செய்கின்றது.

மைத்திரி ரணில் என்கிற இரட்டைத் தலைமைப் பிரச்சினையும், அதனால் ஏற்பட்ட குழப்பங்களும் அரசாங்கத்தை தோல்வியின் பக்கத்தில் திருப்பியதாக பலரும் நம்புகிறார்கள். குறிப்பாக, தென் இலங்கையில் அந்த உணர்நிலை அதிகமாகவே உண்டு. அதுதான், தோற்கடிக்கப்பட்ட ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சிக்கும் ஒரு காரணமானது. இலங்கை போன்றதொரு நாட்டில் ஒற்றைத் தலைமை என்பது தவிர்க்க முடியாதது என்பது, தென் இலங்கையின் தொடர்ச்சியான வாதம். அப்படியான நிலையில், புதிய ஆட்சியொன்றை அமைக்கும் போது, அது குறைந்த பட்சம் ஒரு தசாப்த கால (இரு ஆட்சிக்கால) நீட்சிக்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்க வேண்டும் என்று ஒரு கட்சி நினைப்பது தவிர்க்க முடியாதது.

அதுதான், சஜித்துக்கு எதிராக கரு ஜயசூரிய என்கிற துருப்பினை ரணில் இறக்கிய போதும், அதற்கான ஆதரவு கட்சிக்குள் கிடைக்காமல் போனதற்கான காரணம். கடந்த காலத்தில் ரணிலுக்காக வில்லாகவும் அம்பாகவும் மங்கள, மலிக் சமரவிக்கிரம, ஹபீர் ஹாசிம் உள்ளிட்டவர்கள் செயற்பட்டார்கள். அவர்கள் கூட ரணிலின் இந்த நகர்வுக்கு எதிராக திரும்பினார்கள். ஒரு கட்டம் வரையில், ரணிலின் நம்பிக்கைப் பேச்சுக்களையடுத்து ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் தன்னையும் வெளிப்படையாக இணைத்துக் கொண்ட கரு, மங்கள உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்களே சஜித்தோடு இணங்கிச் செயற்பட ஆரம்பித்ததும், அமைதியாகிவிட்டார். கருவுக்கும், ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களின் போர்வெற்றிவாதத்தையெல்லாம்தாண்டி தன்னால் வெற்றிபெற முடியுமா, என்கிற சந்தேகம் வலுவாக இருந்த கட்டத்தில், பிரதமர் பதவிக்கான பரிந்துரை என்பது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றே. அதுதான், சஜித்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இருந்து அவரையும், அவரின் மருமகனான நவீன் திசாநாயக்கவையும் பின்வாங்க வைத்தது.

சஜித்தைக்காட்டிலும்கருமீதுபௌத்த பீடங்களுக்கு பாசமும் நம்பிக்கையும் அதிகம். தங்களை மீறி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செல்லமாட்டார் என்று அவை நினைக்கின்றன. அதையும் ஒரு காரணமாக வைத்துக் கொண்டுதான், கருவை முன்வைத்து ரணில் அதிகாரத்தினைத் தக்க வைக்கும் ஆட்டத்தினை ஆட நினைக்கிறார். குறிப்பாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முழுமையாக இரத்துச் செய்யும் நிலைப்பாட்டிற்கு கருவை இணங்கச் செய்துவிட்டு, அவரை பொது வேட்பாளராக அறிவிக்கும் போது, ஆட்சி அதிகாரத்திலும் சிக்கல் இருக்காது, கட்சித் தலைமைத்துவத்தையும் விட்டுக் கொடுக்க வேண்டிய தேவையிருக்காது. சஜித் தரப்பு, தன்னுடைய கட்டுப்பாடுகளை மீறி இவ்வளவுக்கு எழுந்துவிட்ட போதிலும், இறுதிக்கட்டம் வரையிலும் போராடுவது என்கிற முடிவில் ரணில் இன்னமும் இருக்கிறார். அதற்காக, அவர் மைத்திரியோடு பேசவும் தயாராக இருக்கிறார்.

ஆனால், ராஜித சேனாரத்ன என்கிற கூட்டணிக் கட்சியின் தலைவரைத் தாண்டி இன்னொரு கூட்டணிக் கட்சித் தலைவரைக் கூட ரணிலால் தன்னுடைய நிலைப்பாடுகளின் போக்கில் இணங்க வைக்க முடியவில்லை. ஒரு கட்டம் வரையில் சஜித் எதிர்ப்பு மனநிலையில் இருந்த, சம்பிக்க ரணவக்கவும், ரணிலைக் கைவிட்டு சஜித் பக்கம் வந்துவிட்டார். ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் உள்ளிட்டவர்கள், வெற்றிபெற முடியாத ஒருவரை வேட்பாளராக ஏற்க முடியாத என்கிற விடயத்தை வெளிப்படையாக அறிவித்துவிட்டார்கள். அது, சஜித்துக்கான ஆதரவு என்கிற நிலைப்பாட்டின் போக்கிலானது. இருப்பதில், ரிஷாட் பதியுதீன் மாத்திரமே மதில் மேல் பூனையாக இருக்கிறார். அந்தப் பூனை, கோட்டாவின் மதிலுக்குள்ளும் தாவுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதுதான், ரணில் எதிர்கொள்ளும் பெரும் சோகம்!

**புருஜோத்தமன் தங்கமயில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சகர்களுக்கு கொடுத்த தலைப்பு

இப்படித்தான் சமூக வலைத்தளங்களில் பரப்பி தங்களுக்குள் மகிழ்கிறார்கள்.

"யார் ஈழ தமிழச்சி? லொஸ்லியாவை கிழி கிழி என கிழித்த ஈழத்து இளைஞன்... தீயாய் பரவும் காட்சி "

-இதுதான் விமர்சகர்களுக்கு கொடுத்த தலைப்பு

ஈழத்துப் பெண் லொஸ்லியாவால் ஈழத்துப் பெண்கள் மானம் போகிறது என்று சில ஈழத்தமிழர்கள் குமுறுகிறார்கள். என்ன மானம் போகிறது? எப்படி மானம் போகிறது? யாருக்கு மானம் போகிறது?

ஒரு தமிழ்ப் பெண்ணால் எப்படி முழு ஈழத் தமிழ்ப் பெண்களின் மானமும்போகிறது? இப்படி தமிழனைத் தவிர வேறு ஒரு இனம் இப்படிச் சிந்திக்காது. இவ்வளவு குறுகிய சிந்தனை உள்ளவர்களா ஈழத் தமிழர்கள்?

BIGG BOSS நிகழ்ச்சி நல்லது அல்லது கெட்டது என்ற விவாதத்தை விட்டுவிடுவோம்...... அந்த நிகழ்ச்சியை இந்திய தமிழ்நாட்டு 90 வீதமான தமிழ் மக்கள், மற்றும் வேறு மாநில மக்கள், உலகத் தமிழ் மக்கள் ரசித்துப் பார்க்கிறார்கள். எந்த ஒரு வேறு நாட்டு மக்களும் ஈழத் தமிழ் பெண்ணால் தங்கள் மானம் அல்லது தமிழ் பெண்கள் மானம் போகிறது என்று சொல்லவில்லை. அதற்கு பதிலாக புகழ்ந்து அதை விமர்சித்து ரசித்துப் பார்க்கிறார்கள். இதுதான் யதார்த்தமாக நடந்து கொண்டிருக்கின்றது.

நிலைமை இப்படியிருக்க....... எமது தமிழர்கள் சிலர் அநாகரிகமாக விமர்சிக்கிறார்கள். அந்த விமர்சனங்களுக்கு என்ன பெறுமதி இருக்கின்றது என்பது தெரியவில்லை. ஆனால் எங்களுக்கு அனுதாபத்திற்கும் மற்றவர்கள் அறிவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது என்றுதான் நாம் பார்க்கவேண்டும். ஆனால் இந்த வருட நிகழ்ச்சிகளில் அப்படி செய்வதற்கு அவர்களுக்குத் தேவை ஏற்படவும் இல்லை காட்டவும் இல்லை. இது ஈழத் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் தகுதி முன்னேற்றம் கூடியுள்ளது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

விஜய் டிவி நடத்தும் சூப்பர் சிங்கரில் இப்பொழுது பங்கு பற்றும் தமிழ் யுவதி ஒரு டாக்டராக மற்றும் மிகவும் தகுதியுள்ள, சங்கீதத் திறமை உள்ள ஒரு பாடகி. இது பெண்களின் வீரத்தை அந்தப் பெண்களின் நடத்தையை இதனுடன் ஒப்பிட்டு பேசாதீர்கள். அது ஒரு தளம் இது ஒரு தளம் இரண்டுக்கும் நிறையவே வித்தியாசங்கள் உண்டு. நீங்கள் அப்படிச் செய்வதால் அந்தபோராளிபெண்களை கேவலப்படுத்துகிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. இது பொழுதுபோக்கு சம்பந்தமானது, விடுதலை சம்பந்தமானதை இதற்குள் கொண்டுவந்து ஒப்பீடு செய்யாதீர்கள்.

இப்படியான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதால் இந்த துறைகளிலும் ஈழத்தமிழர்திறமையைவெளிக்கொண்டு வரப்படுகின்றது என்பது ஆரோக்கிய





எடுத்த எடுப்பிலேயே சிந்திக்காமல் அப்படியானவிமர்சனங்களை ஆதரித்து பரப்பியும் வருகிறார்கள். இது இவ்வளவு கீழ்த்தரமான தமிழர் வளர்ச்சிக்கு ஒவ்வாத முறையில் மற்றவர்களும் துணை போகிறார்கள். இது தமிழரின் சினிமாத்துறை, நடிப்புத்துறை, உலகப் பிரபல்யம் ஆவதற்கான முன்னெடுப்புகள் போன்றவற்றிற்கு எவ்வளவு தடைபோடும் என்பதை சற்றும் சிந்திக்கவில்லை என்பது கவலையான விடயமாக இருக்கின்றது.

ஈழப் போராட்டத்தை வைத்து இவர்கள் பிச்சை கேட்கிறார்கள் என்று விமர்சிக்கிறார்கள். இதை கடந்த நிகழ்ச்சிகளில்தேவை கருதிசெய்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அவை இந்திய இசைக் கலைஞர்களாலேயே பாராட்டப்படுகிறது. இது ஈழத் தமிழர்களுக்கு பெருமை இல்லையா? அதேபோல் Bigg Boss நிகழ்ச்சியில் பங்குபற்றிய தர்சன் மற்றும் லொஸ்லியாவால் இந்திய ரசிகர் மட்டத்தில் மிகப் பெரும் வரவேற்பும் பாராட்டும் இருக்கின்றது. இது ஈழத் தமிழர்களுக்கு பெருமை இல்லையா? இவற்றாலும் ஈழப் பெண்களுக்கு மானம் போகிறதா? இந்த அறிவுஜீவி விமர்சகர்கள் இவற்றை விளங்கிக் கொண்டார்களா? உலக மாற்றத்திற்கு நாங்களும் மாற வேண்டும். அது ஆரோக்கியமான மாற்றமாக இருந்தால் நாம் அதை [illegible]வற்க வேண்டும்.

ஈழப்போராளி பெண்களை, மான விடயம். மாறாக இது கூடாத விடயமல்ல. ஈழத் தமிழர்களும் எல்லாத்துறைகளிலும் பங்குபற்றி திறமையால் முன்னுக்கு வருவதற்கு எல்லோரும் கை கொடுப்போம்.

இதுவரை காலமும் ஈழத்தமிழ் நடிகர்கள் என்று சினிமா துறையில் இல்லை. இதுவரையிலும் எந்த ஒரு ஈழத்து சினிமாவும் இந்திய திரைகளில் ஓடும் அளவிற்கு தகுதி பெறவில்லை. சுப்பர் சிங்கர் மேடை வரும்வரை எந்த ஒரு ஈழத்தவரும் பாடகர்கள் என்ற தகுதி பெறவில்லை ஆகையால் இந்த துறைகளில் தமிழர்கள் வளர்ச்சி பெற வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனை சந்திரனில் தரையிறக்க தயாராகும் சீனா

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள பெய்ஹாங் பல்கலைக்கழகத்தில் மூன்று உலோகக் கொள்கலன்களில் சீனாவினுடைய சந்திரமண்டலம் தொடர்பான எதிர்கால ஆய்வுகள் பற்றிய திட்டவரை படங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அதனுடன் தொடர்பாகக் காணப்படும் வேறு கொள்கலன்களில் மரக்கறிகளும் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் ஒருவகை மஞ்சள் புழுக்களும் வளர்க்கப்படுகின்றன.

சீன மக்களது மரபுவழிக் கதைகளில்வரும் சாஞ்ஜி எனப்படும் சந்திரப் பெண் தெய்வத்தின் பெயரால் சந்திர விலாஸ் (Lunar Palace )எனப்பெயரிடப் பட்டுள்ள யூகொங்-1 ( Yuegong1) எனப்படும் சீன விண்வெளிஆய்வுமையம் 160 சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்டது. இந்நிறுவனம் சந்திரனில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியம் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றது.

மேற்படி கொள்கலன்களுள் உள்வாங்கப்படும்ஒவ்வொருவிலங்கினமும் தாவரஇனமும் விஞ்ஞானிகளால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவையாகும். பழங்களின் பொருட்டுத் தெரிவுசெய்யப்பட்ட ஒரேஒரு தாவரம் ஸ்ரோபெரித் தாவரமாகும். இத்தாவரத்தின் பழங்களின் பெரும்பாலான பகுதியும் உண்ணத்தக்க சதைப்பிடிப்பானவை. உடலுக்குத் தேவையான விலங்குப்புரத மூலங்களாக மஞ்சள் புழுக்கள் வளர்க்கப்படுகின்றன. விண்கலங்களுக்கு அண்டவெளியூடாகப் பதார்த்தங்களை விநியோகிப்பது பெரிதும் செலவுமிக்கதாகும். ஆனால், உயிரியலுக்குரிய முறையில் புத்துயிர்ப் படையத்தக்க ஜீவாதாரத் தொகுதி ஒரு மூடிய சூழல் தொகுதியாகும். மனிதவாழ்விற்கு இன்றியமையாத நீர், ஒட்சிசன், உணவு போன் றவை உயிரிரசாயனச் செய்முறைகள்மூலம் இதனுள் புத்துயிர்ப்பிக்கப்படுபவை. மீள உருவாக்கப்படுபவை.

மேற்படி சந்திரத்தளத்தில் எமது தொழில்நுட்பம் மிகவும் அண்மையில் பிரயோகிக்கப்படக் கூடியநிலையில் உள்ளது. இதுவரையில் மேற்படி தொகுதி 98 சதவீத மான சுயநிறைவை அடைந்துள்ளது. இது சந்திரனில் அமையவுள்ள சந்திரத்தளத்தின் பொருட்டுப் போதுமானதாகும். இது செவ்வாய்க்கிரகத்தின் பொருட்டும் போதுமானது என யூகொங் –1 இனது உயிரியலுக்குரிய முறையில் புத்துயிர்ப்படையத்தக்க ஜீவாதாரத் தொகுதியினது பிரதம செயற்றிட்ட வடிவமைப்பாளரான லியுஹொங் குறிப்பிடுகின்றார்.

கடந்த வருடம் 8 தன்னார்வத் தொண்டர்களை அடக்கிய இரண்டு குழுக்கள் மேற்படி பரிசோதனைக் கூடத்தில் 370 நாட்கள் பரீட்சார்த்த வதிவை மேற்கொண்டிருந்தனர். இது இத்தகைய சுயபூர்த்திக் கொள்கலனிலான நீண்டகால வதிவிற்கான உலகளாவிய ரீதியிலான சாதனைப் பதிவாயிற்று.

எமது அடுத்தநிலையிலான இலக்காக அமைவது மேற்படி தொகுதியை புவியிலும் 1/6 பங்கு ஈர்ப்புவிசையைக் கொண்டதும், காந்தப்புலம் அற்றதும், உயர்ந்தளவிலான கதிர்வீசல் தாக்கங்களுக்கு உட்படுவதுமான சந்திரமண்டலத்தில் செயற்படத் தக்கவகையில் மாற்றியமைத்துக்கொள்வதாகும்.இத்தகைய நிலைமைகளில் செயற்படத்தக்க சிறிய தொகுதி ஒன்றை உருவாக்கி அதனை அண்டவெளியில் தாபிக்கப்படும் விண்வெளி நிலையத்தில் செயற்பட வைக்கவுள்ளதாக லியு கூறுகின்றார்.

ஹோமோ சபியன்ஸ் மனிதவர்க்கம் சந்திரனில் தனது பாதச்சுவடுகளைப் பதித்து 50 வருடங்களுக்குப் பின்னர் சந்திரனுக்கான மீள்விஜயம் என்பது சீன மக்களது வாழ்க்கையுடன் இணைந்த கனவாக அவர்களின் இதயத் துடிப்பாக அமையவுள்ளதாக மேற்படி சீனத்தலைநகரில் உள்ள ஆய்வு மையம் குறிப்பிடுகின்றது. அமெரிக்க விண்வெளி வீரர்களினால் 1969 இல் நிலைநாட்டப்பட்ட சாதனைக்குப் பின்னர் அதனைமீள தாபிப்பதில் அதற்கு அப்பாலும் நகர்வது இவர்களின் அவாவாக உள்ளது. விண்வெளி ஆய்வுக்கழகத்தில் புதிய அங்கத்தவராக இணைந்த சீனாவிற்கு சந்திரனில் கால்பதிப்பது நீண்ட காலக் கனவாக இருந்து வந்துள்ளது.

டொங்பாங்ஹொங் – என்பது 1970 இல்ஏவப்பட்ட சீனாவினதுமுதலாவது செயற்கைக் கோளாகும். சீனாவினது முதலாவது சந்திரகலனான சாஞ்சி – 1 2007 இல் செலுத்தப்பட்டது. இது முன்னை நாள் சோவியத் யூனியனும் ஐக்கிய அமெரிக்காவும் தத்தமது கலன்களை சந்திரனை நோக்கிப் பயணிப்பதற்காக உருவாக்கிக் கொண்டமைக்கு ஏறத்தாழ அரைநூற்றாண்டுகாலம் பிந்திய நடவடிக்கையாகும்.

ஆனாலும் கடந்த ஒரு தசாப்த காலமாக சீனா விண்வெளி ஆய்வுகளில் மிக வேகமாக முன்னேறி வருகின்றது. இந்தவருடத்தின் ஆரம்பத்திலான சாஞ்ஜி – 4 இனது தரையிறக்கம் உலகினது முதலாவது நெடுந்தொலைவிலான சந்திரன் மீதான தரையிறக்கமாக அமைந்தது.

சீனாவினது தேசிய விண்வெளி நிர்வாகமையம் ஏப்ரல் மாதத்தில் விஞ்ஞான ஆய்வுமையம் ஒன்றை சந்திரனின் தென்துருவத்தில் நிறுவுவதை இலக்காகக் கொண்டு செயற்படுவதாகத் தெரிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து அடுத்த 10 வருட காலப் பகுதியுள் சந்திரனின் மீதான தரையிறக்கம் சாத்தியமாகலாம் என்று எதிர்பார்க்கின்றது.

மேற்குலக நாடுகளில் அப்பலோ –11 இனது சந்திரனின் மீதான தரையிறக்கம் தொடர்பான இரகசியமான அல்லது சந்தேகமான கோட்பாடுகள் புனையப்பட்டு தொடர்ந்து விருத்தியடைந்துவருகின்ற வேளையில் பெய்ஜிங்கினுடைய வாங்பகயுஜிங், சிடான் முதலான வணிக முக்கியத்துவமுடைய மாவட்டங்களில் விண்வெளிவீரர்களினுடைய மிகப்பெரிய உருவச்சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சந்திரனில் கால் பதித்த வரலாற்று நிகழ்வினது 50ஆவது வருட நினைவுதினத்திற்கு முன்ன தாக இது நடைபெற்றுள்ளது.

“சீனர்களான எங்களால் சந்திரனில் என்றாவது ஒருநாள் தரையிறங்க முடியுமென நான் நம்புகிறேன்.

அது தேசத்தினது பெருமையாக அமைவது மட்டுமன்றி, மக்களிடையிலான விஞ்ஞான அறிவையும் மேம்படுத்துவதாகும் என்கிறார் ஜுன்மோ. அவரது குழாத்தினர் சிடானில் புகைப்பட நிலையத்துக்கு வெளியே விண்வெளி வீரர்களினுடைய பிரதிமை ஒன்றை வடிவமைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவினது முதல் விண்வெளி ஆய்வுக்கலமான (moon rover) லூரவர்வினது தனித்துவமான கணக்கான சீனாவின் மிகவும் பிரபல்யமான Sina weibo எனப்படும் இணையத்தளத்தைப் பின்பற்றுபவர்களாக 733200 பேர் உள்ளனர். 2016 இல் அதன் செயற்பாடு முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அதன் பிரியாவிடை தொடர்பான தகவல் வெளியிடப்பட்ட போது 85000 வரையிலான மனஎழுச்சி மிக்க குறிப்புகள் சீனப்பிரஜைகளினால் பதிவேற்றம் செய்யப்பட்டன.

சீன விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளரும் வீணான வற்றுப் பெருக்கு (The waste Tide ) என்ற நூலினது ஆசிரியருமான சென்குயிபன் மக்களது விஞ்ஞான அறிவினது மேம்பாடும் வளர்ச்சியடைந்து வரும் சீனாவினது தேசிய ஒருமைப்பாடும், தேசியபலமும் காரணமாக விண்வெளிஆய்வுகள் மேம்பாடடைந்து வருவதாகக் குறிப்பிடுகின்றார். நடைமுறையில் உள்ள சந்திரமண்டல மற்றும் விண்வெளிச் செயற்றிட்டங்கள் சீனாவினது தொழில்நுட்ப திறன்களின் நிரூபணங்களாகவும் இலக்குகளாகவும் அதேவேளை, மனிதவர்க்கத்தின் தெரியாத ஒன்றின் பொருட்டான இயல்பான ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதாக குறிப்பிடுகின்றார்.

நட்சத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட இராக்கால வானத்தை பல தடவைகள் புகைப்படங்களாக்கிக் கொள்ள உலகம் முழுவதுமாகப் பயணம் செய்த டாய்ஜியாங்பெகன் எனப்படும் புகைப்படப்பிடிப்பாளர் சீனாவினது சந்திரமண்டல ஆய்வுகள் தொடர்பான தனது ஆத்ம உணர்வு வெளிப்பாடுகளை சமீபத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.



விண்வெளி ஆய்வுகளில் எமது ஆய்வு மேம்பாடுகளை அவதானிக்கின்ற போது என்னால் என்றோ ஒருநாள் நட்சத்திரங்களைப் படம் எடுப்பதற் காக சந்திரனுக்குப் பயணம் செய்யக்கூடியதாக இருக்கும் என நினைத்துப்பார்ப்பதாக அவர் குறிப்பிடுகின்றார்.

பல புராதன கலாசாரங்களில் சந்திரனானது ஆத்ம உணர்வுகளது மூல ஊற்றாக இருந்து வந்துள்ளது.

மிகவும் அண்மைக்காலங்களில் வானவியலினது கட்டமைப்பு மற்றும் சிறப்புகள் பற்றிபல ஆக்கங்களில் எடுத்துக் காண்பிக்கப்படுகின்றன. உதாரணமாக ஜூல்ஸ் வேர்ணேயினது *19* ஆம் நூற்றாண்டு நாவலான “புவியிலிருந்து சந்திரனுக்கு” இலிருந்து *2001* பொற்காலத்தின் சிறந்த படைப்பான ஒரு நீண்ட விண்வெளிப்பயணம் (A Space Odyssey ) என்ற திரைப்படம் வரை குறிப்பிடலாம். இவற்றில் காண்பிக்கப்படும் பிரபஞ்சத்துடனான மனிதகுல உறவு சந்ததி சந்ததியாக வாசகர்களுக்கு விருந்தளிப்பதாக எழுச்சியூட்டுவதாக அமைகின்றது.

மனிதர்களை சந்திரனுக்கு அனுப்புவது என்பது சீனர்களுக்கு மட்டுமல்லாது உலகில் உள்ள அனைவருக்கும் ஊக்கமளிக்கும் மகத்தான ஆற்றலுடைய செய்தியாக அமையும் என சின்ஹூவாவுடன் உரையாடிய சீன விஞ்ஞான புனைகதை எழுத்தாளர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வரையறைகளுக்குட்பட்ட எல்லைகளையுடைய புவியானது முடிவில்லாத பிரபஞ்சத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தும் தோற்றுவாயாக சாளரத்தைப் போன்று சந்திரனைக் கொண்டிருப்பதாக மூன்று உடல்பிரச்சினைகள் (The Three - Body Problem) என்ற நூலினது ஆசிரியரான லியு சிக்சின் குறிப்பிடுகின்றார்.

சந்திரனில் கால்பதித்தமையானது மனிதர்களுக்கு அண்டவெளியிலிருந்து பூமியைப் பார்க்க வைத்துள்ளதுடன், பிரபஞ்சத்தில் மனிதரது நிலை பற்றி சிந்திப்பதற்குமான வாய்ப்பை அதிகரித்துள்ளது என்று ஷென்ஹியுமன் குறிப்பிடுகின்றார்.

*2016* இல் தனது பெய்ஜிங் மடிப்பு (Folding Beijing) என்ற குறுநாவலுக்கான ஹியுகொ விருதினை வென்ற சீன அறிவியல் புனைகதை எழுத்தாளர் ஹவோ ஜிங்பகாங், புவியின் ஒரேயொரு இயற்கை உபகோளாகிய சந்திரனில் கால்பதிப்பது அல்லது தரையிறங்குவது பிரபஞ்சத்திலான நீண்ட நடைப்பயணத்தில் அர்த்தமுள்ள முன்னோக்கிய அடியாகும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றார். ஏனெனில் இது வேற்றுக்கிரகம் ஒன்றில் மனிதன் கால் பதிப்பதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளானா என்ற விவாதங்கட்கு முடிவை உண்டுபண்ணியுள்ளமையினாலாகும்.




குழந்தைகளுக்கு அண்டவெளி தொடர்பான தகவல்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பிரபஞ்சம் முழுவதும் அவர்களின் இதயத்தில் படிந்து ஒடுங்கிக் கொண்டதும் அற்பமான விடயங்களில் அவர்கள் கட்டுண்டு இருத்தல் அசாதாரண விடயமாக இருக்கும் என ஹவோ குறிப்பிடுகின்றார்.

அமெரிக்கா *2024* அளவில் மீண்டும் சந்திரனுக்கு மனிதர்களை அனுப்புவதற்குத் திட்டமிட்டுள்ளது. அதேவேளை இந்தியா சந்திரனின் தென்துருவத்தில் அதன் ஆய்வுக் கலத்தை தரையிறக்குவதற்கு முயற்சித்த வண்ணமுள்ளது.

*20*ஆம் நூற்றாண்டின் விண்வெளி ஆய்வுகள் தொடர்பான போட்டிக்குப்பின்னர் விண்வெளி தொடர்பான தொழில்நுட்பங்களில் மிகக்குறைந்தளவிலான முன்னேற்றங்களே ஏற்பட்டன என்பதை சில விஞ்ஞானிகள் மறுத்துரைக்கின்றனர்.

*1969* இன் பின்னர் சந்திரனிலான மனிதத் தரையிறக்கம் மீண்டும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆய்வாளர்கள் திறன்வாய்ந்த ரோபோக்களைப் பயன்படுத்தி குறைந்தளவு செலவுடன் வினைத்திறனான தரையிறக்கத்தை மேற்கொள்வதனாலேயே மனிதத்தரையிறக்கம் இடம் பெறவில்லை என அவ்விஞ்ஞானிகள் வாதிடுகின்றனர்.

விண்ணியலாளர்கள் புவியிலிருந்து ஏறத்தாழ *55* மில்லியன் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள செவ்வாய்க் கிரகத்தை நோக்கிய அடுத்த இராட்சதப் பாய்ச்சலிற்கு தயாராகி வருகின்றனர் என்றும் இதற்கான விண்கலத்தினது உறுதிப்பாடு மற்றும் உயிரினது நிலைபெறுகையின் பொருட்டான ஆதாரங்கள் போன்ற விண்வெளித் தொழில்நுட்பங்களில் குறிப்பிடத்தக்க படிமுறைகள் பூர்த்தியடைந்துள்ளன எனவும் பெய்ஹாங் பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு மாணவரும் உலகளாவிய விண்ணியல் ஆய்வு மேம்பாடுகளது அவதானியுமான யவோ சிகாய் குறிப்பிடுகின்றார்.

அப்பலோ –11 இனது பயணம் பல பிரச்சினைகளை எதிர் கொள்ளச் செய்தது. அப்பயணம் தடைகளற்ற சுமுகமான சிறந்த பயணமாகக் கருதப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் எதிர்கால சந்திர மண்டல ஆய்வுப் பயணங்கள் பாதுகாப்பானவையாகவும் திருத்தமானவையாகவும் அமையவுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக அமைகின்ற தொழில்நுட்ப வளர்ச்சி மேம்பாடுகள் நன்றியறிதல்கட்குட்படுத்தப்பட வேண்டும் எனவும் யாவோ குறிப்பிடுகின்றார்.

மேலும் சீனாவில் அண்மைய தசாப்தங்களில் கைத்தொழில்துறை விரைவாக விருத்தியடைந்துள்ளமையானது தேசத்தினது அண்டவெளி ஆய்வு நடவடிக்கைகளின் பொருட்டு ஆதாரமாக அமைவதற்கான வலுவான காரணியாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அடுத்தகட்ட விண்வெளி ஆய்வு முன்னேற்ற நடவடிக்கையின் பொருட்டு தயார்படுத்திக்கொள்ளும் அதேவேளை, விண்வெளித் தொழில்நுட்பங்கள் அண்டவெளியில் பிரயோகிக்கப்பட முன்னதாகவே புவிமீதான உயிர்வாழ்வுக்கு அதன்நிலைபெறுகைக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத் தப்படலாம் என்பதனையும் லியுஹொங் பரிந்துரைக்கின்றார்.

யூகொங் ஆய்வு கூடத்தில் உயிரியலுக்குரிய முறையில் பதப்படுத்தப்பட்ட வைக்கோலைப் பயன்படுத்தி மஞ்சள் புழுக்களது வளர்ப்பு மேம்படுத்தப்படுகின்றது.

இது பாரம்பரியமான உருளைக் கிழங்குத் தாவரத் தளைகளையும் கோதுமைத் தவிட்டையும் பயன்படுத்தி வளர்ப்பதிலும் பார்க்க மலிவான முறையாகும்.

லியுஹொங் இனது அணியினர் இத் தகவலை வடசீனாவில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

விவசாய நடவடிக்கைகள் பெருமளவு வைக்கோல் உருவாவதற்குக் காரணமாகின்றன.

இவற்றை எரிப்பது சூழல்மாசடைதலிற்கான பிரதான காரணமாக அமைகின்றது. ஆனால் எமது பரிசோதனைகள் இவை மஞ்சள் புழுக்களை வளர்ப்பதற்கான பெறுமதிவாய்ந்த வளங்கள் என்பதை நிரூபித்துள்ளன என லியு ஹொங் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VJP Wedding Service

உங்கள் அனைத்து விதமான வைபவங்களையும் சிறப்புற நடத்திட அழையுங்கள்



* *Weddings*
* *Birthday Partes*
* *Puberty Ceremonies*
* *Receptions*
* *Christmax Parties*
* *Meetings*

*All Other Occasions.*

*Serving Areas*

- *Scarborough*
- *Mississauga*
- *Markham*
- *Etobicoke*
- *Brampton*
- *Ajax*

*Choose from 10 Luxurious banquet Halls, Accommodating 50 to 1000 guests.*

**குமார் 416 302 6727**

**அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்**



இதற்காக இனி இந்தியா வரை செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஸ்காபோரோவில் அமைந்துள்ள வசிஸ்டா ஆயர்வேதிக் சிகிச்சை மையம்



**Treatments Available For**

PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் – ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல். போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.



**VASISHTA AYURVEDIC**

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730**
**www.vasishta.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org